# தமிழ்க் குமுகாயம்

பதிப்பாசிரியர்

அ. சங்கரவள்ளிநாயகம்

# தமிழ்க் குமுகாயம்

ஆ

பதிப்பாசிரியர்

அறிஞர் அ. சங்கரவள்ளி நாயகம்

# தமிழ்க் குமுகாயம்

பதிப்பாசிரியர்
அறிஞர் அ. சங்கரவள்ளி நாயகம்

அகரம்
மனைஎண்.1, நிர்மலாநகர்
தஞ்சாவூர் - 613 007

தமிழ்க் குமுகாயம் / பதிப்பாசிரியர் : அறிஞர் அ. சங்கரவள்ளி நாயகம் / முதற் பதிப்பு: டிசம்பர் 2007 / வெளியீடு : அகரம், மனைஎண்.1, நிர்மலா நகர், தஞ்சாவூர் - 613 007 / அச்சாக்கம்: மீரா ஃபைன் ஆர்ட்ஸ், சிவகாசி / விலை : ரூ.80/-

நீண்ட நாள் கெழுதகை நண்பரும்
நட்பிற்கு எடுத்துக் காட்டானவரும்
தமிழகம் அறிந்த தரமான
தமிழ்க் கவிஞரும் என்றும்
என்னை உள்ளிருந்து இயக்குபவருமான
கவிஞர் திருமிகு. *மீரா*-விற்கு
எனது நினைவுக் காணிக்கை.

'செந்தமிழ்வாரிதி'
முனைவர். இரா. செல்வக்கணபதி, எம்.ஏ., பிஎச்.டி.,
H-15/2, கரிகாலன் தெரு, கலாசேத்திரா காலனி,
பெசண்ட் நகர், சென்னை - 600 090.

# அணிந்துரை

இலக்கிய - இலக்கணங்களின் துணைக்கொண்டு - தமிழில் சமூகவியல் குறித்த முற்றான ஆய்வுகள் இதுநாள் வரை நிகழ்த்தப் பெறவில்லை. அறிஞர்கள் சிலர் மேற்கொண்ட முயற்சிகளும் நிறைவைத் தருவதாக இல்லை. இந்தக் குறையை நீக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அறிஞர் அ.சங்கரவள்ளி நாயகம் அறிஞர் சிலரின் கட்டுரைகளைப் பெற்று இந்நூலை வெளிப்படுத்துகின்றார். தொல்காப்பியர் காலம் தொடங்கி, இன்றுவரையிலான தமிழ்ச் சமுதாயப் போக்கினை அறிஞர்கள் ச.வே.சுப்பிரமணியன், நெல்லை.ந.சொக்கலிங்கம், அ.அறிவுநம்பி, ம.சா.அறிவுடைநம்பி, மா.பா.குருசாமி என ஐவர் இனங்காட்டியுள்ளனர். இதனை முற்றான சமூக ஆய்வாகக் கொள்வதற்கு இல்லை. சில ஒளிக்கீற்றுக்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இத்தடத்தில் மேலும் நுண்ணாய்வுகள் மேற்கொள்ள அறிஞர்கள் முன்வருதல் வேண்டும். அ.சங்கரவள்ளிநாயகம் மேற்கொண்ட முயற்சி பாராட்டுக்குரியது.

சமூகம் குறித்த எந்த ஓர் ஆய்வும், ஒரு நூலின் மேல் மூன்று மூன்று கோணங்களில் நிகழ்த்தப்படுதல் வேண்டும். ஒன்று: குறித்த அந்த நூல் தோன்றியதற்குக் காரணமான சமூகப் பின்புலங்கள் முற்றாக ஆராயப்படவேண்டும். இரண்டு: அந்நூல் காட்டும் நிகழ்கால சமூகத்தைத் தேடித்தொகுக்க வேண்டும். மூன்று: அந்நூல் தன் காலத்துக்குப்பின் ஏற்படுத்திய சமூகத் தாக்கங்கள் கண்டு தெளியப்படவேண்டும். தமிழ்மொழியில், தோற்றம் கொண்டபின் சமூக மாற்றத்தை ஏற்படுத்திய நூல்கள் என்று பட்டியலிடப் பெரிதாக ஒன்றுமில்லை. அற இலக்கியங்கள் கூடத் தமிழர்களுக்குக் கேட்டு

மகிழவும், போற்றிப் புகழவும் பயன்பட்டனவே அன்றிப் பின்பற்றி வாழப் பயன்பட்டனவா என்பதை உறுதி செய்ய இயலவில்லை. 'உண்ணற்க கள்ளை' என்ற ஒரு தொடர் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளாக வெறும் பதிவாக நின்றதேயன்றி வாழ்வாக மலர்ந்த பாடில்லை.

ச.வே.சுப்பிரமணியன் எழுதியுள்ள தொல்காப்பியர் காலச் சமுதாயம், தொல்காப்பியம் குறித்த அறிமுகம் ஒன்றை முன் வைக்கிறது. இரண்டாவதாகப் பொருளுரை அகத்திணை இயலை வகுத்துரைக்கிறது. சமூகத் தேடல் நோக்கில் கட்டுரை அமைய வில்லை. தொல்காப்பியர்காலச் சமூகம் மிக விரிவாக ஆராயப்பட வேண்டுவது. அதற்கான தரவுகள் அதனிடம் உள்ளன. தொல்காப்பியம் சுட்டும் பொருளதிகாரம் கதையின் பாடு பொருள்களாகிய அகம் - புறம் குறித்த எல்லைகளை வரையறுப்பது. வள்ளுவரின் பொருட்பால் சமூகப் பொருளாதாரம் குறித்துப் பேசுவது. அகத்திணை இயல் குறிப்புகளில் நாடக வழக்கினை மிகப்பல. இதனையும் கடந்து தேடுவதற்கு அங்கே நன் நாகரிகப் பதிவுகள் பல. சமூகம் குறித்து இருக்கவே செய்கின்றன.

'தந்தையை அறிவது அறிவியல்: தாயை உணர்வது மெய்ம்மையியல். தொல்காப்பியம் மெய்ம்மையியல் நூல். மெய்ம்மையியல் நூல்களுக்குப் பிறப்பு உண்டேயன்றிச் சிறப்பு என்பது இல்லை. என நம்பிக்கையூட்டும் ச.வே.சு. தொல் காப்பியத்தை இலக்கண வாக்கியம் என்று கூறிச் சென்ற அறிஞர் வ.சுப.மாணிக்கனார் கருத்தை ஏற்றுப் பதிவு செய்துள்ளார். மேலும், தொல்காப்பியம் குறித்த பதிப்புகளின் எண்ணிக்கை. சுவடிகளின் எண்ணிக்கை, கூடுதல் வரிகள், இடம் பெற்றுள்ள அடிச் சொற்கள் என்பனவற்றையும் திரட்டித் தந்துள்ளார்.

முனைவர் நெல்லை.ந.சொக்கலிங்கம் குறட்சமுதாயம் குறித்த கட்டுரையை வழங்கியுள்ளார். குறள் குறித்துத் தம் காலத்துக்கு முன்னே வாழ்ந்த அறிஞர் பலரின் உயரிய கருத்துக்களை இடையிடையே கட்டுரை ஆசிரியர் இனங்காட்டியுள்ளார். தொல்காப்பிய உரையாசிரியர்கள் - மேற்கோள்காட்டும் இடங்களில் எல்லாம் - நூல் தோற்றம் கொண்ட காலத்திற்கு முற்பட்ட - அல்லது

சமகால இலக்கியங்களை மட்டுமே மேற்கோள் காட்டும் மரபை மேற்கொண்டனர். பிற்கால நூல்களில் உரிய பாடங்கள் இருந்த போதும் அவற்றை ஏற்றிலர். வந்தவழிக் கண்டு கொள்க எனக் கூறிப்போந்தனர். கட்டுரை ஆசிரியர் நவீன புதுக்கவிதைகள் மீது கொண்டிருக்கும் ஈடுபாடு நன்கு புலப்படுகிறது.

வள்ளுவர் காட்டும் முடியாட்சிக்காலச் சமூகச் சட்டங்கள் பல குடியாட்சித் தத்துவத்திற்கும் பொருந்தி வருவதை கட்டுரை அடையாளப்படுத்துகிறது. நன்மக்கள் பெறுதல் குறித்த வள்ளுவர் காலச் சமூக விருப்பம் நன்கு பதிவாகியுள்ளது. மனத்தூய்மையின் இன்றியமையாமை குறித்து ஆசிரியர் நன்கு ஆராய்ந்துள்ளார். கணவன் மனைவி பேரமின்றி வாழக் கண்ணோட்டம் வேண்டும் என்பது புதிய சிந்தனை. வறுமை இல்லாத சமுதாயம் காண உழவை முன்னிறுத்தலாம் என்று புதுவழி இனங்காட்டப்பட்டுள்ளது. தெய்வத்தான் ஆகாது என்ற குறளைச் சமூக வாழ்வோடு இணைத்து நம்பிக்கையூட்டிக் கட்டுரை நிறைகிறது. குறள் போற்றிய சமுதாயச் சிந்தனை. முதன்மையான இந்தியச் சிந்தனை என்பது அரிய பதிவு.

தமிழ்க் காப்பியக் குமுகாயம் குறித்து அறிஞர் அ.அறிவு நம்பி கட்டுரை தந்துள்ளார். காப்பியம் என்பது இனியதமிழ்ச் சொல்லே என்று ஆசிரியர் நிலைநாட்டுகிறார். தமிழ்க் காப்பியங்களை அவற்றின் உள்ளீடுகளின் அடிப்படையில் மூன்று கூறுகளாகப் பிரித்துக் கொண்டுள்ளார். சேக்கிழாரின் திருத்தொண்டர் மாக்கதையைப் பெருங்காப்பியமாக ஏற்கத் தயக்கம் காட்டுகின்றார். தம் எழுத்துரை முழுமையான சிலப்பதிகாரம், மதம் தவிர்த்த மணிமேகலை, சமயம் தவிர்த்த பெரியபுராணம் ஆகிய நூல்களை முதன்மைப்படுத்துவதாகக் கூறித் தொடங்குகின்றார். குறித்த ஒரு காப்பியம் விளக்கும் - நிகழ்காலத்திய மதங்களின் செல்வாக்கு, சமயங்களின் பயன்பாடு குறித்த ஆய்வுகளைத் தவிர்த்ததற்கான காரணங்கள் கட்டுரையாளரால் விளக்கப் பெறவில்லை. சமூகவியல் நிறுவனங்களில் குடும்பம், அரசு, மக்கட் சமூகம் ஆகியவற்றைப் பார்வைக்கு உட்படுத்துவதாக ஆசிரியர் குறிக்கிறார்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி-கோவலன் தனிக் குடித்தனம் சென்றமை பதிவாகியுள்ளதை இனம் காட்டுகிறார். சங்ககால

இலக்கியங்களில் மணச்சடங்குகளில் முன்னிறுத்தப்பெற்ற பெண்மை, காப்பியக்காலத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டது என்பதை நிலைநாட்டுகிறார். என்றாலும், பெண்மை வீறுகொண்டு எழுச்சிபெற்றமையைக் கண்ணகி, திலகவதியார், காரைக்கால் அம்மையார் வரலாறுகளை முன்னிறுத்தி நிறுவ முயன்றுள்ளார். காப்பியக்காலச் சமூகத்தில் அரசனுக்கு இருந்த முதன்மை பின்னுக்குத்தள்ளப் பெற்றுத் தனிமனித சுதந்திர உணர்வு தலை எடுத்தமையை நாவரசர் துணைக்கொண்டு நிறுவுகிறார். மரபிலிருந்து விலகிய புதிய மறுமலர்ச்சி என நான்கு செய்திகளை முன் வைக்கிறார். சில புதிய சமூக மாற்றங்களைச் சுட்டிக்காட்டும் ஆசிரியரின் முடிவுகளில் பல மேலும் விவாதத்துக்கு உட்படுத்த வேண்டுவன.

அறிஞர் ம.சா.அறிவுடைநம்பியின் இதிகாசக் குமுகாயம், நான்காவதாக இடம் பெறுகிறது. சிவரகசியத்தை மூன்றாவது இதிகாசமாகக் குறிக்கும் ஆறுமுக நாவலரின் கருத்தை முன்வைக்கும் ஆசிரியர். அதனைச் சிறிது ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கலாம். தமிழ் ஆய்வாளர்களுக்கு ஒரு புதிய வெளிச்சம் கிடைத்திருக்கும். சங்க நூல்கள் தொடங்கி, தமிழ் நூல்களில் காணக்கிடைக்கும் இராமாயண - பாரதக் கதை நிகழ்வுகளைத் தேடித் திரட்டி வழங்கும் ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது. ஒன்றிரண்டு நிகழ்வுகளைத் தவிரக் கதை மாந்தர்களும் - நிகழ்வுகளும் தமிழ் மண்ணோடு நேரடியாகத் தொடர்புடையன அன்று. தமிழ்ப்பெருங்கவிஞர்கள் இவற்றைப் பாடநேர்ந்தபோது, தமிழ் மரபுகளுக்கு ஏற்றவாறு கதை நிகழ்வுகளை மாற்றி அமைத்துக் கொண்டனர். கம்பன் நிகழ்காலச் சமூகத்தை விடுத்துத் தான் காணவிழைந்த ஒரு கற்பனைச் சமூகத்தை முன்வைத்தான்.

நீண்ட உரையாடல்களை இடைபெய்து கட்டுரை ஆசிரியர் 'அஹம்மா' என்பதை விளக்கி, நான் இல்லை என்ற தத்துவத்தையும், 'மே, மே' என்பதை விளக்கி 'எனது, எனது' என்ற தத்துவத்தையும் முன்வைத்து, 'யான்' எனது என்ற செருக்கறுக்க இதிகாசங்கள் பயன்படுமாற்றை விளக்குவது புது வரவாக உள்ளது. கதை நடந்த காலம் வேறு. கதை பாடப்பெற்ற காலம் வேறு. தமிழில் அவை பாடிக்கொள்ளப்பெற்ற காலம் வேறு; இத்தகைய நூல்களில் காணப்படும் சமூகங்கள் ஒன்றாக இருத்தல் இயலாது. இராமாயண,

மகாபாரதங்களில் கற்பனை அழகு, கதைச் சிறப்பு, பொருளின் படைப்பாற்றல் முதலினவற்றைத் தேடுதலே சரியாக வரும் என்று தோன்றுகின்றது. என்றாலும், கட்டுரையாளர் தம் கூர்த்த அறிவால், காவியப் புனைவுகளுக்கு இடையே காணக்கிடைக்கும் சமூகப் போக்குகளை ஓரளவு இனங்காட்ட முயன்றுள்ளது மகிழ்வைத் தருகிறது.

நீண்ட வரலாறு கொண்டது தமிழ்மொழி. இதன் இலக்கியப் பரப்பில் பெருங்காப்பியங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இவற்றுள்ளும் சிலப்பதிகாரம், பெரியபுராணம் முதலிய ஒன்றிரண்டைத் தவிரக் காப்பியக் கரு பலவும் வடமொழியிலிருந்து எடுக்கப் பெற்றுள்ளன. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் வரலாறுகளை மையப்பகுத்து உரைநடையில் சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு, முதலிய பல நெடுங்கதைகள் தோற்றம் கொண்டன. கம்பனைப் போன்ற பேராற்றல் மிக்க பெருங் கவிஞர்கள் தம் காப்பியத்திற்குத் தமிழ் மண்ணில் ஒரு கதைக் கருவைத் தேர்ந்து கொள்ளாமை ஏன் என்ற ஆய்வு நிகழ்த்தப்பெற வேண்டும். நெறிகடந்த காமவாழ்வு வாழ்ந்து புலன் இன்பங்களுக்கு அடிபணிந்து வாழ்ந்த ஒரு சமூகத்தை நெறிப்படுத்த, ஆடவர்க்கும் தனி மனித ஒழுக்கம் வேண்டும் என்பதை நிலைநாட்ட, இராமன் கதை கம்பனால் தேர்ந்துகொள்ளப்பட்டிருக்கலாமா என்று நாம் ஆராயக் கடமைப்பட்டவர்கள். பங்காளிச் சண்டை இட்டுக் கொண்டிருந்த தமிழ் மன்னர்களுக்குப் பரதனை முன்னிறுத்தி உடன்பிறபின் உயர்வு சொல்லக் கம்பன் விரும்பியிருந்தானா என்று ஆராய்தல் வேண்டும். அறிஞர்கள் முயன்றாக வேண்டும்.

அறிஞர் மா.பா.குருசாமியின் இற்றைக்காலச் சமுதாயம், நிறைவாக இடம் பெறுகிறது. ஆசிரியர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் இன்று வரை தம் ஆய்வின் கால எல்லையை வரையறுத்துக் கொண்டுள்ளார். ஆசிரியர் தம் ஆய்வை 1.சமூக அடித்தள அமைப்பாகிய குடும்பம், 2.பெண்மை மதிப்பீடுகள், 3.சாதியம், 4.சமயநிலை, 5.கல்வி, 6.வாழ்க்கை முறை, 7.கலை இலக்கியம் எனப் பகுத்துக்கொண்டு நடத்துகிறார். இப்பகுப்பு எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர் விளக்க வில்லை. சமூகவியல் தற்காலத்தே நல்ல அறிவியலாக வரை

யறுக்கப்பெற்றுள்ளது. அதன் அடிப்படைக் கோட்பாடுகளை முன் வைத்து இந்த ஆய்வை ஆசிரியர் மேற்கொண்டிருந்தால் கட்டுரை மேலும் சிறந்திருக்கும்.

ஆசிரியர் சில நியாயமான சமூகச் சினங்களை அங்காங்கே வெளிப்படுத்துள்ளார். கட்டுரை நிறைவில் 'ஒளிதரும் சுடர்கள்' என்ற தலைப்பில் நம்பிக்கையூட்டும் சமூகப் போக்கைப் பதிவு செய்துள்ளார். நிழல் படிந்தவை என்ற தலைப்பில் - சமூக அவலங்களையும் அவர் எடுத்துக்காட்டத் தவறவில்லை. கட்டுரை முழுவதும் வாழ்வை ஒரு கலையாகக் கொண்டு வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற துடிப்பைக்காண முடிகிறது.

கட்டுரையாளர்களையும், பதிப்பாசிரியர்களையும் நான் பாராட்டியாக வேண்டும். சமூகம் பற்றிய ஆய்வின் ஒரு சிறு முதன் முயற்சி இது. இத்தகு தொகுப்பு நூல்களைத் தமிழ் மக்கள் ஏற்றுப் போற்ற வேண்டும். வள்ளற் பெருமான் விரும்பியது போல் 'ஒத்தாரும் தாழ்ந்தாரும் உயர்ந்தாரும் எவரும் ஒருமை உடையவராய் உலகியல் நடத்த வேண்டும்'.

முனைவர். இரா. செல்வக்கணபதி

# காலங்கள் தோறும் சமுதாயங்கள்

## தி. இராசகோபாலன்

பயன் தராத மரத்தைப் பார்க்கின்ற ஒருவர் வேர் பழுதென்பார்; இரண்டாமவர் கிளை பழுதென்பார்; மூன்றாமவர் இலை பழுதென்பார்; ஆனால், வேளாண் துறை வல்லுநருக்கு மட்டும் தான் தெரியும், அந்த மரம் வளர்ந்திருக்கின்ற மண்ணே பழுது என்று. அதுபோலச் சமுதாயத்தில் சிலர் அரசியல் சரியில்லை என்பர்; வேறு சிலர் மக்கள் சரியில்லை என்பர்; இன்னும் சிலர் தலைவர்கள் சரியில்லை என்பர்; ஆனால், சமூகவியல் வல்லுநர்களுக்கு மட்டும் தான் தெரியும், ஒட்டு மொத்தமான சமுதாயமே கெட்டிருப்பது.

அறிஞர் அ.சங்கரவள்ளி நாயகம் என்ற பேராசிரியரும் ஒருவகையில் சமூகவியல் வாணராக இருப்பதால், பல்வேறு சமுதாயங்களையும் ஊடுருவிப் பார்க்க முயன்றிருக்கிறார். பொன்னையும் மணியையும் பவளத்தையும் ஒரே மாலையில் தொடுத்துப் 'பனிமணி மாலை' ஆக்குவது போல், பல்வேறு காலக் கட்டங்கள் காட்டும் சமுதாயங்களை, ஒரே நூலில் தொகுத்திருக்கிறார்.

முதுபெரும் பேராசிரியராகிய ச.வே.சுப்பிரமணியன் அவர்கள் தொல்காப்பியர் காட்டும் சமுதாயத்தைத் தீட்டுவதற்குத் தான் தூரிகையை எடுத்திருக்கிறார். காதலின் தோற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் ஊழ் அடிநாதமாக அமைந்திருப்பதைச் சான்றுகள் காட்டி நிறுவுகிறார். தொல்காப்பியர் காலத்துக் காதல், புனிதம் பெற்றமைக்கும்-இன்றைய காதல் மலினப்பட்டுப் போனதற்கும் ஓர் அருமையான காரணத்தைக் கட்டுரையாளர் கண்டெழுதும் திறம்

பாட்டற்குரியது. இன்றைய காதல் வெறும் உணர்ச்சியால் மட்டும் உருவாகிச் சிதைவதையும், அன்றைய காதல் உணர்வோடு அறிவும் சேர்ந்து வலுவாக நிற்பதையும் சித்திரமாகத் தீட்டிக் காட்டுகிறார்.

ஒத்த தலைவனும் - தலைவியும் பின்பற்ற வேண்டிய பத்துப் பண்புகளையும், தவிர்க்கவேண்டிய பத்துப் பொல்லாங்குகளையும் தொல்காப்பியர் பட்டியலிட்டுக் காட்டும் திறத்தை, இப்பொழுது நினைத்தாலும் சிலிர்க்கின்றது. பேராசிரியர் ச.வே.சுப்பிரமணியனார் மூலவரைச் செதுக்கும் திறனில் காட்டிய கவனத்தைக், கோபுரத்தைச் செதுக்குவதிலும் காட்டியிருந்தால், கட்டுரை இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

குறள் காட்டும் சமுதாயத்தை ஆராயப் புகுந்த முனைவர் நெல்லை ந.சொக்கலிங்கம் அவர்கள், திருவள்ளுவர் காலச் சமுதாயத்தின் ஆழ அகலங்களைத் துல்லியமாகப் படம் பிடித்திருக்கிறார். வைதீகம், சமணம், பௌதீகம் போன்ற சமயங்கள் திருவள்ளுவரிடத்தில் ஏற்படுத்திய பாதிப்புக்களைத் தெற்றெனத் தெளிவுபடுத்தியிருக்கிறார். இறைக்கோட்பாட்டில் திருவள்ளுவருக் கிருந்த பொதுமைத் தன்மையைக் கட்டுரையாசிரியர் எடுத்தியம்பும் திறன், வியத்தற்குரியது.

இருபதாம் நூற்றாண்டு மனிதன் அவசரத்திலும் ஆவேசத்திலும் உழன்று அவதிப்படுவதைக் கட்டுரையாளர் கூர்ந்து நோக்குகிறார். "நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின் உயிர்க்கிறுதியாகி விடும்" என்ற குறள், இன்றைய மனிதர்களுக்கு மாமருந்தாக அமைந்திருப்பதையும் சுட்டிச் செல்கிறார். திருவள்ளுவரால் எச்சரிக்கப்பட்ட வறுமையானது பிற்காலத்தில் புதுக்கவிதைக் காரர்களிடம் பரிணமித்திருப்பதைப் பேராசிரியர் சொக்கலிங்கம் எடுத்துரைக்கும் பாங்கு, எண்ணி மகிழத்தக்கது.

தெய்வப்புலவர், முடிவு எப்படி முக்கியமோ அப்படியே முறைமையும் முக்கியம் என்றார். அறவழியில் வராத பொருளைப் புல்லாமல் புறளவிட வேண்டும் என்றார். ஆனால், இன்றைக்குச் சிலர், "பூ விற்ற காசு மணக்குமா, மீன் விற்ற காசு நாறுமா" எனப் பொருளைக் குவிக்கத் தொடங்கி விட்டனர். நிகழ்காலச்

சமுதாயத்தைக் குறள்கூறும் சமுதாயத்தோடு ஒப்பிட்டு, இலட்சிய வாழ்க்கையை நினைவுபடுத்தியிருக்கிறார்.

பேராசிரியர் சொக்கலிங்கம் இலக்கியத்துறையில் கற்றுத் துறைபோகியவர். அவர் திருவள்ளுவர் காலத்திலேயே நின்று, அவருடைய அளவுகோல்களையே வைத்து அளந்து இருந்தால், சுவைஞர்கள் இன்னும் திருவள்ளுவருக்கு அருகில் வந்திருக்கக் கூடும். ஹாக்கி ஆட்டத்திற்கு ஆளுக்கொரு மட்டையை ஏந்திச் செல்லலாம்; ஆனால், கிரிக்கெட்டிற்கு வீரர்கள் அனைவருக்கும் ஒரே மட்டைதான்!

கொடுக்கப்பட்ட அளவிற்கேற்றவாறு சட்டை தைப்பவர் தாம், சிறந்த தையல்காரர், முனைவர் அ.அறிவுநம்பி திருவள்ளுவர் மன்றம் கொடுத்த காப்பியக் குழந்தைக்குச் செட்டாக ஆடை தைத்துத் தந்திருக்கிறார். பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம் அவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்தத் தலைப்பைக் கொடுத்தாரோ, அந்த நோக்கத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு, முழுமையாகச் செயல் பட்டிருக்கிறார், முனைவர் அறிவுநம்பி அவர்கள். காப்பிய வகையை மூன்றாக அவர் பகுத்துக்கொண்ட பாங்கே, அவருடைய ஆற்றலுக்குக் கட்டியம் கூறுகின்றது.

சிலப்பதிகாரம், பெரியபுராணம் போன்ற காப்பியங்களில், மகளுடைய திருமண நிகழ்ச்சிகளில் கூட ஆணாதிக்கம் ஓங்கி நிற்பதை, இருபெருங் குரவரும் ஒருதனிநாளில் ஒருங்குடன் கூடி ஊடுருவிப் பார்க்கும் பாங்கு, பாராட்டிற்குரியது. மேலும், மணம் பேசும்பொழுது மகளிர்க்கு உரிமையில்லாவிட்டாலும், குடும்பம் அமைந்த பின்னர் பெண்டிருக்கிருந்த உரிமையையும் துணிவையும் எடுத்து நிறுத்துகிறார், கட்டுரையாசிரியர். எடுத்துக்காட்டு : மதுரை புகுந்த கண்ணகி, தவ வாழ்க்கை மேற்கொண்ட திலகவதி.

காப்பிய காலத்தில் கோனாட்சி என்றாலும், அக்கோனாட்சி யிலும் குடியாட்சிப் பண்புகள் மேலோங்கி நின்றதைச் சிலப்பதிகாரப் பாண்டியன் நெடுஞ்செழியன், இலங்கைக் கயவாகு போன்ற மன்னர்கள் வாயிலாக எடுத்தியம்புகின்றார். முனைவர் அறிவுநம்பி நெய்திருக்கும் பட்டுப்புடவையில் பல நேர்த்திகள் உள்ளன. அவை

யனைத்தையும் எடுத்துச் சொல்லவியலாது. அதனால் ஒரு சில சரிகைகளையும், வண்ண நூல்களையும் எடுத்துக் காட்டி யிருக்கிறேன். உடுத்தி மகிழ்பவர்கள், அதன் உணர்வைப் பெறுவார்கள்.

தம்முடைய பாட்டி, பூட்டி ஊட்டிய உணர்வுகளோடு, இதிகாச காலச் சமுதாயத்தை அணுகுகிறார். முனைவர் அறிவுடைநம்பி 'அன்பு கொடுக்கும்; ஆசை கெடுக்கும்' என்பது இராமாயணத்தின் பாவிகமாகும். இராமாயண காலத்தில் விதிக்கொள்கையில் (கர்மா) மக்களுக்கு ஆழமான நமபிக்கையிருந்ததைச் சலபோச முனிவன் தயரதனுக்குக் கொடுத்த சாபத்தின் மூலம் காட்டுகிறார். இராமன் குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோரைத் தழுவி ஏற்றுக்கொண்ட உலகச்சகோதரத்துவம் எடுத்து விளக்கப்படுகிறது. பலம் பொருந்திய மனிதர்கள் சில பலகீனங்களோடு வாழ்வதையும், பலகீனர்கள் சில பலங்களோடு வாழ்வதையும் மகாபாரதம் எடுத்துக்காட்டுகின்றது.

இராவண வதம் முடிந்தவுடன், கோசலை, கைகேயி, சுமித்திரை போன்றோர் இராமபிரானிடம் அறிவு பெறுவதைக் கட்டுரையாசிரியர் சுவைபட எடுத்துக் காட்டுகிறார். அவை கம்ப இராமாயணத்திலோ, ஒட்டக்கூத்தர் இராமாயணத்திலோ இல்லை; வேறேந்த இராமாயணத்தில் இடம்பெற்றிருக்கிறது என்பதைக் கட்டுரையாசிரியர் எடுத்துக்காட்டியிருந்தால் வாசகர்களுக்கு எளிதாக இருந்திருக்கும்.

நிறைவாக இடம் பெறும் கட்டுரை, 'இற்றைக் காலச் சமுதாயம்' ஆகும். அதனை முனைவர் மா.பா.குருசாமி அவர்கள் ஆக்கித் தந்திருக்கிறார். 'தற்காலம் என்பது கடந்த காலத்தின் விளைவாக இருப்பதைப் போன்றே எதிர்கால மாற்ற, வளர்ச்சி விதைகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது" என ஆசிரியர் வரையறுத் திருப்பதே, அவருடைய நுண்மான் நுழைபுலத்தைக் காட்டுவதாகும்.

இன்றைய சமுதாய வாழ்வில் அரசியல், பொருளாதாரம், சமயம் போன்ற ஏற்படுத்தும் பாதிப்புக்களை ஓர் அழகான படத்தின் மூலம் வாசகர்களுக்குப் புரிய வைத்திருக்கிறார். தொழில்கள் வேறுபட்டுப் போனதால் கூட்டுக்குடும்பங்கள் சிதைந்துபோனதைத் தக்க

ஆதாரங்களுடன் எடுத்து நவில்கின்றார். முதியோர் இல்லங்களின் தோற்றத்திற்குக் கட்டுரையாளர் காட்டும் காரணிகள் நம்முடைய புருவத்தை உயர்த்துகின்றன. முனைவர் மா.பா.குருசாமி அவர்கள் இன்றைய சமுதாயத்தை அங்குலம் அங்குலமாக அளந்திருக்கிறார். சமூகத்தின் குறுக்குவெட்டுத் தோற்றத்தையும் எக்ஸ்-ரே போல் எடுத்தியம்புகிறார். பாராட்டுக்கள்.

வெவ்வேறு தோட்டங்களில் கிடைக்கக்கூடிய கனிகளை ஒரே நேரத்தில் சுவைப்பதற்காகத் திருவள்ளுவர் மன்றம், நமக்கு ஒரே கூடையில் பறித்து வைத்திருக்கிறது. ஏதாவது ஒரு திராட்சைக் குலையில், ஒரு கனி பிஞ்சாக இருந்துவிட்டால், எல்லாக் கனிகளும் அப்படியே இருக்கும் என்று சுவைஞர்கள் ஒதுக்கிவிடக்கூடாது. அக்குலையின் மறுபக்கத்தைத் திருப்பினால், முதிர்ச்சியான பழங்கள் கிடைக்கும். இத்தொகுப்பில் இடம்பெற்ற கட்டுரைகளும் அப்படித்தான்! படித்துச் சுவையுங்கள்; சுவைத்துப் படியுங்கள்!

தி. இராசகோபாலன்
17.12.07

கீழப்பாவூர் ஆ. சண்முகையா,
நிகழ்ச்சிப் பொறுப்பாளர்,
அகில இந்திய வானொலி,
தூத்துக்குடி.

# அணிந்துரை

சமுதாயம் என்பது மக்கள் தொகுதி. அதனுடைய அங்கங்களாகத் திகழ்பவை குடும்பங்கள். குடும்பங்கள், ஆண், பெண் உறவில் பின்னப்பட்டவை.

சமுதாய இயக்கத்திற்குத் தனிமனித ஒழுக்கம், சமுதாய வாழ்வியல் நெறிகள் ஆகிய இரண்டும் அடிப்படையானவை.

அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியம், பண்பாடு, ஆன்மீகம், கல்வி ஆகிய அனைத்தும் இதனை மையமாகக் கொண்டே சுழல முடியும்.

இவை தனிமனித ஒழுக்கம், சமுதாய வாழ்வியல் இதனைச் சார்ந்தும் இருக்கலாம். இவற்றிற்கு எதிராகவும் செயல்படலாம்.

இந்தப் பின்புலத்தில் தமிழ்நாட்டின் தலைசிறந்த ஐந்து தமிழ்ப் பேரறிவாளர்கள் எழுதிய ஐந்து கட்டுரைகளைப் படித்துப் பார்ப்பது நலம் பயக்கும் என்று எண்ணுகின்றேன்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழே மூச்சாகவும், திருவள்ளவமே வாழ்க்கையாகவும் கொண்டு வாழ்ந்து வருகின்ற, தமிழ் இமயம் பேராசிரியர் முனைவர் அ.சங்கரவள்ளி நாயகம் அவர்களின் எண்ணத்தில் எழுந்த ‘ஐந்து சால்பூன்றிய தூண்’ இந்நூல். இவை கட்டுரைக்காக எழுதப்பட்டவை அல்ல. எழுத்தில் வடித்து, அறிஞர்கள் அவையில், எழுதிய அறிஞர்கள் எண்பொருளவாகச் செலச் சொல்லி, கேட்டார் கேள்விகளுக்குப் பதிலளித்து, மீண்டும் நிரல் நிறைப்படுத்தி, நூலாகி இதழ்விரித்து நிற்கிறது.

பல இலட்சம் ரூபாய் செலவில், பல்கலைக் கழகங்கள் செய்ய வேண்டிய இலக்கியப்பணியை, எங்கள் தமிழ் இமயம் ஐயா அவர்கள் ஆண்டுதோறும் செய்து வருகிறார்கள்.

கோயிற்பட்டித் திருவள்ளுவர் மன்றம், தொட்டனைத்தூறும் மணற்கேணியாய், கற்றனைத்தூறிய பேரறிஞர்களின் பொழிவுகளை நூலாக்கித் தமிழ் கூறும் நல்லுகத்திற்குத் தருவது ஈடிணையற்ற பணி! எழுத்தில் அடங்காத ஏற்றமிகு தமிழ்ப்பணி!

ஒல்காப்புகழ்த் தொல்காப்பியம் காட்டும் சமுதாயம் பற்றித் தமிழ்நாட்டின் மிக மூத்த தமிழ்ப் பேரறிஞர், முனைவர்களின் முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்களின் கட்டுரை முதலில் இடம் பெறுகிறது.

'தொல்காப்பியம் தோன்றிய காலத்தில் இந்திய மொழிகளிலோ, உலக மொழிகளிலோ தொல்காப்பியம் போன்ற ஒருநூல் தோன்றவில்லை' என்பதை மிக ஆணித்தரமாக வலியுறுத்தும் முனைவர் ச.வே.சு. அவர்கள் 'தொல்காப்பியம் தோன்றிய நாடே இல்லை; மக்கள் இல்லை; அரசன் இல்லை; நூல் இருக்கிறது அதுதான் பெருமை' எனக்கூறி நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.

'என்ப', 'மொழிப', 'என்மனார் புலவர்', 'மொழிமனார்', 'அறிந்திசினோரே!', 'உணர்ந்தேரே', 'உணர்ந்திசினோரே', 'குறிஅறிந்தோரே!', 'நுணங்கு மொழிப் புலவர்', 'சிறந்திசினோரே', 'சொல்லின் புலவர்', 'தெளியுமோரே', 'புலன் நன்குணர்ந்த புலமை யோரே', 'வகுத்தனர் உணர்ந்த வல்லோர் ஆறே', 'வாய்மொழிப் புலவர்', 'நேரிதில் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே!'... என நமது தொல்முந்தையர் எண்ணங்களை 343 நூற்பாக்களில் கூறுகிறார் எனப் பட்டியலிடுவது, தொல்காப்பியத்திற்கும் முன்பிருந்த தொல்பழந் தமிழரின் வாழ்வியலுக்குக் கூடத் தொல்காப்பியம் சான்றாதாரமாக அமைவதைச் சுட்டுகிறது.

அகத்திணையியல், புறத்திணையியல், நிலவியல், மக்கள் என அவர் பகுத்திருக்கும் பாங்கு, தொல்காப்பியக் காலச் சமுதாய நிலையை விளக்குகிறது.

'இன்பமும், பொருளும், அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை'

ஒழுக்கம் தமிழரின் ஒழுக்கம். வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்பவை தொல்காப்பியத் தமிழரின் புறவாழ்வின் அடிப்படை. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற பாகுபாடு தமிழர்களின் வாழ்க்கை முறையைப் படம்பிடித்துக் காட்டும் உவமை கூறமுடியாத ஒப்பற்ற பகுப்பு; ... என்பன போன்ற அரிய தகவல்களைப் பேராசிரியர் நமக்குத் தொகுத்து வழங்கியுள்ளார். இக்கட்டுரை, முன்னைத் தமிழரின் சமுதாய அடிப்படையைப் பற்றி, அன்னைத் தமிழர் அனைவரும், அறிந்து, தெளிய அடித்தளம் அமைத்துள்ளது.

'குறட் சமுதாயம்' என்ற கட்டுரையை முனைவர் நெல்லை ந.சொக்கலிங்கம் அவர்கள் நுண்மாண் நுழைபுலத்தோடு படைத்தளித்துள்ளார். திருக்குறள் குறித்து முன்னோர் சொன்ன வார்த்தைகளைப் பொன்னே போலப் பொருத்தமான இடங்களில் எடுத்தாண்டுள்ளார். படிப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் அவர்கள் எடுத்தாண்டுள்ள கவிதைக் கீற்றுகள் கட்டுரைக்குச் சுவையூட்டுகின்றன.

அன்னியரான களப்பிரர்கள் தமிழகத்தில் காலூன்றி, தமிழர்களின் வாழ்க்கை ஒழுக்கத்தைச் சீர்குலைத்து, தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையைத் தகர்த்தபொழுது, தமிழர்கள் தங்களை உணரவும், தலைநிமிர்ந்து வாழவும் அறநூல்கள் தோன்றின அதில் திருக்குறளுக்குத் தனியிடம் உண்டு எனக் குறிப்பிடும் பேராசிரியர் ந.சொக்கலிங்கம் அவர்கள், சங்காலச் சமுதாய பழக்க வழக்கங்கள் சிலவற்றை மாற்றி அமைக்கவும் திருக்குறள் வழிகாட்டியது எனத் திருக்குறள் தோன்றிய காலப் பின்னணியை எடுத்துக்காட்டியுள்ளார்.

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத் துண்ணாமை நன்று' ..

என்ற திருக்குறளை ஐயன் திருவள்ளுவர் எழுதிய காரணத்தையும்,

'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்'

என்ற கோட்பாட்டை அவர் முன்னிறுத்திய தன்மையையும், பேராசிரியர் மிக அழுத்தமாகக் கட்டுரையின் முகப்பில் சுட்டுவது, தமிழனின் விழிக்கு வழியாகிறது. மாய வலை சூழ்ந்து மருளும் தமிழனின், தூய நிலைக்கு ஒளியாகிறது.

கட்டுரை முழுவதும் திருக்குறள் காட்டும் தனிமனித, சமுதாய ஒழுகலாறுகள் விளக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது கட்டுரை முனைவர் அ.அறிவுநம்பி அவர்களின் படைப்பாக இடம் பெறுகிறது. தமிழ்க் காப்பியக் குமுகாயம் பற்றி அவர் ஒரு தெளிவான வரையறைக்குள் கட்டுரையை எழுதி யிருக்கும் பாங்கும், மிகப்பெரிய காப்பிய எல்லையை உள்வாங்கிக் கொண்டு, செய்திகளைச் சொல்வதும் நடையும் படிப்பவர்களைத் தன்வயப்படுத்தும் நிலையில் அமைந்துள்ளன.

தமிழில் காணப்பெறும் காப்பியங்களை, மண்ணில் மலர்ந்தவை, பிற மண்ணிலிருந்து தமிழ் மண்ணுக்குள் நுழைந்தவை, சமயச் சார்புடையவை என வகைப்படுத்தியுள்ளார் ஆசிரியர். சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம் ஆகிய தமிழ் மண்ணில் தோன்றிய மூன்று காப்பியங்களையும் எடுத்தாளும் முனைவர் அ.அறிவுநம்பி அவர்கள், சிலப்பதிகாரத்தை முழுமை யாகவும், சமயம் தவிர்த்த மணிமேகலையையும், பெரிய புராணத்தையும், 'குமுகாயம்' பற்றித் தெரிவிக்க ஆய்வுக்களமாக எடுத்துக் கொள்கிறார்.

குடும்பமே அடிப்படை; அதில் திருமணம் நடைபெறும் விதமும், தனிக் குடித்தனமும் விளக்கப் பெறுகின்றன. தாய்வழிச் சமுதாயமுறை மாறினாலும் கூட, முடிவெடுத்துப் போராடும் உயர் நிலையிலேயே பெண்கள் காப்பிய காலத்தில் வாழ்ந்ததாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். நீதி வழுவா அரசனாகப் பாண்டியன் நெடுஞ்செழியன் சிலப்பதிகாரத்திலும், சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக மாற்றிய இளந்திரையன் மணிமேகலையிலும் அமைந்திருந்து, 'நல்லாட்சியின் சான்றுகளாக விளங்குவதையும், அந்த அளவுக்குப் பெரிய புராணத்தில் ஆட்சிக்கு விழுமிய, முதன்மை இடம் தரப்பெறவில்லை என்றும் ஆசிரியர் சுட்டுகிறார்.

என்றாலும், பெரிய புராணத்திலிருந்து, மனுநீதிச்சோழன் பற்றிய ஒரு குறிப்பை உணர்த்தியிருக்கலாம்.

சமூகம் பற்றி அவர் சொல்லிச் செல்லும் முறை சிறப்பானது. மரபிலிருந்து விலகி, காப்பியக் குமுகாயத்தில் நிகழ்ந்த புதிய மலர்ச்சிகளையும் ஆசிரியர் வரிசைப்படுத்துகிறார். ஆய்வு நோக்கில், இது தொடர்பாக இன்னும் பல புதிய ஆய்வுகள் கிளைத்தெழ வழிகாட்டும் ஓர் அரிய கட்டுரை இது.

முதுமுனைவர் ம.சா.அறிவுடைநம்பி அவர்கள், 'இதிகாசக் குமுகாயம்' என்ற நான்காவது கட்டுரையைப் படைத்துள்ளார். இராமாயணம், மகாபாரதம் ஆகிய இருபெரும் இதிகாசங்களும், சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழ்ச் சமுதாயத்தில் பேசப்பட்டு வருகின்றன என்பதை அகநானூறு, புறநானூறு சான்றுகளுடன் ஆசிரியர் விளக்குகிறார்.

தாதை ஏவலின் மாதுடன் போகிக் காதலி நீங்கக் கடுந்துயர் உழந்த இராமபிரானைச் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுவதையும், அப்பழங்கதையைக் கம்பர், கம்பராமாயணமாகப் படைத்தளித்ததையும் ஆசிரியர் விளக்கிச் சொல்கிறார். கம்பர் கூறும், ஒருவனுக்கு ஒருத்தி, அனைவரையும் உடன் பிறந்தவர்களாக ஏற்றுக்கொள்ளும் நிலை, பிறன்மனை நோக்காப் பேராண்மை, ஆகிய அருங்குணங்கள் கூறப்படுகின்றன. சமுதாயத்தில் நிலவிய அரசியல், மகளிர் நிலை ஆகியவையும் விளக்கம் பெறுகின்றன. குடும்பம் பற்றி முதுமுனைவர் அவர்கள் தீட்டிய அட்டவணை ஆய்வாளர்களுக்கு அடிக்கரும்பு.

'இராம ராச்சியத்தை உருவாக்க முயலலாம்; ஆயின் மகாபாரதத்தில் காணப்படும் குமுகாயத்தை மீண்டும் உருவாக்க முடியாது' எனத் தீர்ப்பளிக்கும் முதுமுனைவர் ம.சா.அறிவுடை நம்பி அவர்கள், இராமபக்த அனுமனையும், 'பகவத் கீதையையும்' உலகம் அன்று மட்டுமல்ல, என்றுமே எண்ணிப்போற்றும் என்றும் குறிப்பிடுகிறார்.

'இதிகாசக் காலக் குமுகாயம்' என்ற கட்டுரையின் அடிநாதமாக, 'அகப்பற்றும், புறப்பற்றும்' என்ற பகுதி அமைகிறது. சுமித்திரை, கோசலை, கைகேயி ஆகிய மூவருக்கும் இராமபிரான் வாழ்க்கையின்

மெய்ம்மையினை உணர்த்திய நிகழ்ச்சி அக்காலச் சமுதாயம் மட்டுமல்ல, எக்காலச் சமுதாயத்திற்கும் பொருந்தும் தன்மையது ஆகும்.

'உளது - இலது என்றலின், எனது உடல் என்றலின், ஐம்புல ஒடுக்கம் அறிதலின், கண்படின் உண்டிவினை இன்மையின், உணர்த்த உணர்தலின் மாயா இயந்திரத் தனுவினுள், ஆன்மா...' என்ற சிவஞானபோதத்தின் மூன்றாம் நூற்பா இங்கு ஒப்புநோக்கத் தக்கது ஆகும்.

இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் ஒப்பிட்டும் உறழ்ந்தும் மட்டும் 'சமுதாயப்பார்வை' பார்க்காமல், அதனுடைய உள்ளோட்டத்தை உணர்ந்து, தெளிந்து, ஓர் ஆன்மீக வெளிச்சம் காட்டும் கட்டுரை இது.

நிறைவாக, காந்தியச் சிந்தனையாளரும், தமிழ்நாட்டின் மிகச் சிறந்த கல்வியாளர்களில் ஒருவருமாகிய முனைவர் மா.பா.குருசாமி அவர்கள் எழுதிய 'இற்றைக்காலச் சமுதாயம்' என்ற கட்டுரை இடம் பெறுகின்றது.

'இற்றைக்காலம்' என்பதற்கு, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, தற்காலம் வரையுள்ள காலப்பகுதியை ஆசிரியர் ஆய்வுக்களமாக எடுத்துள்ளார்.

சமுதாயம், அரசியல், பொருளாதாரம், சமயம் ஆகிய நான்கும் அமைந்த கூட்டுவாழ்க்கையை ஒரு வரைபடத்தின் மூலம் விளக்கி, ஒன்றில் ஒன்று பின்னிப் பிணைந்திருக்கும் போக்கை ஆசிரியர் நிறுவுகிறார்.

சமுதாயத்தின் அடித்தளம் குடும்பமே. அவை கூட்டுக் குடும்பமாக, உயிரோட்டமாக விளங்கின. காலச் சூழலாலும் சமுதாய அமைப்பு முறையின் மாற்றங்களாலும் தனிக் குடித்தனங்கள் ஏற்பட்டன. அதனால் உறவுகள் சிதைந்தன. அன்பாலும், பாசத்தாலும் பின்னப்பட்ட திருமண உறவு பணத்தால் தீர்மானிக்கப் படும் அவலநிலை. இது நல்ல போக்கல்ல எனக் குமுறுகிறார் ஆசிரியர்.

பெண்களின் வாழ்க்கை நிலையைப் படம்பிடித்துக் காட்டும் பேராசிரியர் மாநில அமைச்சரகளாகவும், முதல்வராகவும், இந்தியக் குடியரசுத் தலைவியாகவும் பெண்கள் உயர்நிலை எய்தினாலும் கூட, பெரும்பான்மையான பெண்களுக்கு முழுமையான முன்னேற்றம் எட்டாக் கனியாகவே உள்ளது என ஆதங்கப்படுகிறார்.

அவரது, 'சாதிய அமைப்பு முறை' என்ற பகுதி நம்மைச் சிந்திக்க வைக்கிறது. விடுதலை பெற்றபோது, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும், அண்ணல் காந்தியடிகளும், தந்தை பெரியாரும் கண்ட சாதி பேதமற்ற சமத்துவச் சமுதாயம் நோக்கிய குடியாட்சி தொடங்கியது; ஆனால், ஆட்சியைப் பிடிக்க, அரசியல்வாதிகள் சாதியை வைத்து வாக்குகளைப் பொறுக்கி, நம் முன்னோர் கண்ட பாதையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டனர். சாதி இன்று நெருப்பாகப் பற்றிப் பிடித்து எரிகிறது என வேதனைப்படுகிறார் பேராசிரியர்.

'சமயம் தனி மனித வாழ்வோடு வரையறுக்கப்பட்டுவிட்டால் சிக்கல் இல்லை. ஆனால், சமய நம்பிக்கையைக் கூட்டுச் சமுதாய வாழ்க்கையிலும், பொது அரசியல் நடவடிக்கைகளிலும் கொண்டு வருகின்றபோது சிக்கல் எழுகிறது' எனப் பேராசிரியர் அவர்கள் கூறும் 'எச்சரிக்கை'ப் பொருள் பொதிந்தது.

தாய்மொழியைப் புறக்கணித்து, வியாபார நோக்கில் விரிந்து, பிஞ்சு உள்ளங்களில் ஒழுக்கத்தையும், நற்பண்புகளையும், மன உறுதியையும் உருவாக்காத கல்விமுறை 'ஓர் ஆபத்தான கல்வி முறை' எனப் பேராசிரியர் சமுதாய அக்கறையோடு, தனது அச்சத்தைப் பதிவு செய்துள்ளார்.

வாழ்க்கை முறை மாறலாம்; ஆனால் வாழ்க்கை நெறி மீறக் கூடாது; கலை - இலக்கிய ஊடகங்கள் நல்ல கருத்துக்களைப் பரப்புவதைவிட, நச்சு விதைகளை விதைக்கின்றன எனப் பேராசிரியர் எச்சரிக்கின்றார்.

'ஒளிதரும் சுடர்கள்' என்ற பகுதி நம்பிக்கைக் கதிர்களைப் பாய்ச்சுகிறது. நாட்டின்மீது நல்லெண்ணம் கொண்டோர் நாடிப் படிக்க வேண்டிய கட்டுரை இது. ஆழமான அனுபவத்தின் வெளிப்பாடு; ஆற்றல் மிக்க பார்வையின் புதுவீச்சு.

தொல்காப்பியமும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும், பெரிய புராணமும், திருக்குறளும், கம்பராமாயணமும் காட்டும் வாழ்வியல் கோட்பாடுகளைச் சமுதாய அமைப்பைப் படம்பிடித்துக் காட்டும் கட்டுரைகளை ஒருமுறை படித்து முடிக்கும்போது, படிக்கின்ற ஒவ்வொருவருக்கும் சமுதாயப் போக்குப் புலப்படும்; அதை உள் வாங்கும்போது நமது வாழ்க்கை நெறி சரிப்படும்!

தமிழாய்ந்த ஐந்து பேரறிஞர்களை ஒன்றிணைத்து, ஒரு புதிய சிந்தனையின் வெளிப்பாட்டினை நூலாக்கித் தரும் பேராற்றல் தமிழ் இமயம் பேராசிரியர் முனைவர். அ. சங்கரவள்ளி நாயகம் அவர்களுக்கு மட்டுமே உண்டு.

தாயினும் சாலப் பரிந்து, தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அவர்கள் படைத்தளித்த, தொகுத்துக் கொடுத்த வாடா மலர்களாகிய தமிழ்வளம் மிக்க நூல் வரிசையில், 'இலக்கியங்கள் காட்டும் குமுகாயம்' என்ற இந்த நூல் மின்னிச் சுடர் விடுகிறது! மேதினிக்கு ஒளி தருகிறது.. என்றால் அஃது உண்மை! வெறும் புகழ்ச்சியில்லை.

கீழப்பாவூர் ஆ. சண்முகையா

# என்னுரை

ஓ மனிதா! நீ உனக்காகவும் உன் குடும்பத்திற்காக மட்டும் பிறக்கவில்லை. ஊர், உலகிற்கு உதவி செய்வதற்காகவும் இல்லாதவர்களுக்கு வழிகாட்டி உதவுவதற்காகவும்தான் பிறந்து இருக்கிறாய். ஏழ்மை கிராமங்களில் இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. உழைப்பில் பெரும் பாதி ஊதியத்தை அவர்கள் மதுவில் செலவழிப்பது, அதனால் குடும்பம் நாசமாவதும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. கிராமத்துப் பெண்கள் மிகப் படிக்காதவர்களாகவும் பொதுவாகச் சமுதாயத்தில் பெண்கள் இரண்டாவது நிலையில் இருப்பது மலைவாழ் மக்களின் அறியாமை யையும் துன்பங்களையும் எண்ணிப் பார்த்து இன்றைய சமுதாயத்தில் இருக்கும் ஊழல், கற்பழிப்பு, கொலை, கொள்ளை என்று இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்தோமானால் படித்தவன் பணத்திற்காக மேலே மேலே படித்துப் பணம் தேடிக் கொண்டிருப்பது முக்கியமா? அல்லது இவர்களுக்கு உதவுவது நல்லதா என்றுதான் எண்ணத் தோன்றும்.

மக்களுக்காக மக்களால் நடத்தப்பெறும் மக்களுடைய அரசாங்கம்தான் சனநாயகம். அப்படியா இருக்கிறது நம்நாடு இன்று? ஊழல், கொலை, கொள்ளை என்று இவை அதிகப்படும் சூழ்நிலைகளில் நாடு போய்க் கொண்டிருப்பதைப் பாருங்கள். முதலில் நாம் நம் அரசியலில் 'சனநாயகத்தைச் சீர்செய்ய வேண்டும். அடுத்துக் கல்வியின் தரத்தை, வாழ்க்கை நெறிகளை வாழும் நெறிகளாக மாற்றப் பாடுபட வேண்டும். இன்று நம்நாட்டில் இருக்கின்ற படிப்புப்போதும். எது முக்கியம்? குடும்பம் முக்கியமா? அல்லது சமுதாயம் முக்கியமா? என்று சிந்தித்துப் படித்தவர்கள், செய்திதெரிந்தவர்கள் இறங்கினால் தான் நாடு நாடாக மாறும்.

இன்றைய நாடு நெறிகளற்ற சமுதாயமாக 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்று போய்க்கொண்டிருக்கின்றது. அனைவரும் வாழ வேண்டும் என்பதற்குப் பதிலாகத் தன் வருவாயை மட்டும் பார்க்கும் மக்கள் சமுதாயமாகப் போய்க் கொண்டிருக்கின்றது. ஏழைகள் ஏழைகளாகவே இருந்து ஏழ்மை மாறாத வரை, நியாயம், நேர்மை ஏற்படாத வரை எப்படிப் பணக்கார நாடாகப் பெருமைப்பட

முடியும்? இது பொதுவாழ்வில் உள்ள படித்தவர்களின் கடமை அல்லவா? எனவே இற்றைத் தமிழன் இடம் பெற்றிருக்கும் தற்காலக் குமுகாயம் பற்றிய சிந்தனையைப் பிறகால கட்டங்களில் தமிழகத்தில் இயங்கிய குமுகாயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் திறனாய்வுப் பொழிவுகளைக் கடந்த ஆண்டு மன்றம் ஒழுங்கு படுத்தியது.

ஐந்தும் அருமையான கட்டுரைகள். அரிய, ஆழமான சிந்தனைக் கருத்துக்களை இத்தொகுப்பு நமக்கு வழங்குகின்றது. தொல் காப்பியக் காலக் குமுகாயத்தை நடமாடும் தொல்காப்பியர் என்ற நற்பெயர் பெற்ற தமிழுரைச் சார்ந்த அறிஞர். திருமிகு. ச.வே.சுப்பிரமணியம் ஆக்கியுள்ளார். குறட் குமுகாயத்தைக் குறை வில்லாமல் நிறைவாக நெல்லை அறிஞர். திருமிகு. ந.சொக்கலிங்கம் காட்டியுள்ளார். பாண்டிச்சேரித் தமிழ்த் துறையில் தலைவராகப் பணியாற்றும் சிந்தனைச் சிற்பியான அறிஞர். அ.அறிவுநம்பி காப்பியக் குமுகாயத்தைத் திருத்தமாகவும் பொருத்தமாகவும் காட்டியுள்ளார். இதிகாசக் குமுகாயத்தை சீராகவும் நேராகவும் நமக்குக் கருத்தாக்கம் செய்து காட்டியிருப்பவர் பாண்டிச்சேரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் அறிஞர். திருமிகு. ச.அறிவுடைநம்பி ஆவார். நிறைவுக் கட்டுரையான இற்றைக்காலக் குமுகாயத்தை இதமாகவும் பதமாகவும் படைத்துத் தந்தவர் இற்றை நாளின் குமரப்பாவாகத் தமிழகத்தால் போற்றப்படும் அறிஞர். மா.பா.குருசாமி ஆவார். வேண்டும்பொழுது வந்தும் வேண்டிய கட்டுரைகளைத் தந்தும் உதவிய இந்நற்றமிழர்களுக்கு நன்றி பாராட்டுகின்றேன். உதிரிப்பூக்களான கட்டுரைகளை மக்கள் சுவைக்குமாறு கவினுறு மாலையாக நூலை விரும்பி ஏற்று அச்சிட்டுத்தந்த அகரம் பதிப்பக உரிமையாளரும் கெழுதகை நட்பிற்கு என்றும் உரியவருமான தமிழன்பர் திருமிகு. இரா.கதிர் மன்றத்தின் நன்றியைப் பெற்றுப் பதிப்புத் துறையில் மிகப்பல சிறப்புக்களையும் பெறவேண்டும் என எனது தமிழன்னையை வணங்குகின்றேன்.

தமிழால் உணர்வை வளர்த்திடுக! குறளால் உலகை ஆட்சி செய்திடுக!

அறிஞர். அ. சங்கரவள்ளி நாயகம்
தலைவர்

திருவள்ளுவர் மன்றம்,
கோயிற்பட்டி.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தொல்காப்பியர் காலக் குமுகாயம் | 29 |
| 2. | குறட் குமுகாயம் | 55 |
| 3. | தமிழ்க் காப்பியக் குமுகாயம் | 84 |
| 4. | இதிகாசக் குமுகாயம் | 94 |
| 5. | இற்றைக் காலக் குமுகாயம் | 143 |

# தொல்காப்பியர் காலக் குமுகாயம்

அறிஞர் ச.வே.சுப்பிரமணியன்
தமிழூர்

## புறநிலை

பொதுநிலையில், நூல்களை இருவகையாகப் பகுக்கலாம். ஒன்று அறிவியல் நூல்கள். மற்றொன்று மெய்ம்மையியல் நூல்கள். மெய்ம்மையியல் நூல்கள் நிரந்தரமானவை. நிரந்தரமான பொருள்களைக் கூறுபவை. உலகம் நிரந்தரமானது. உலகத்தில் உள்ள உயிர்கள் நிரந்தரமானவை. காலத்தால் மாற்றம் அடைந்து கொண்டு இருந்தாலும் உயிர்கள் நிரந்தரமானவை. ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு உயிர் வரை மரபாகத் தோன்றிகொண்டேயிருக் கின்றன.

ஒரு மாங்கொட்டையை எடுத்து நிலத்தில் விதையாக வைக்கிறோம். ஏழு நாட்களில் முளைதோன்றும். பெரும்பாலும் ஐந்து ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கலாம். ஒரு விதையிலிருந்து குறைந்தது ஆயிரக்கணக்கான மாங்காய்கள் கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் வரை கிடைக்கலாம். இதனை மிக அழகாக மாணிக்கவாசகர் ஏகன், அநேகன், இறைவன் அடிவாழ்க! என்று கூறுவார். முதன்முதலில் மாவிதை எங்கே தோன்றிற்று, எப்போது தோன்றிற்று என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. ஆனால், நிரந்தரமாக மாங்காய்கள் கிடைக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கட்டை வண்டியில் மாட்டைப் பூட்டிப் பயணம் செய்துகொண்டிருந்தோம். இன்று வான ஊர்தியில் பயணம் செய்கிறோம். இது அறிவியல் வளர்ச்சி. 100 ஆண்டுகளுக்கு முன்பு எண்ணெய் விளக்கில் படித்துக் கொண்டிருந்தோம். இன்று மின்விளக்கில் படித்துக் கொண்டு

இருக்கிறோம். அது அறிவியல் வளர்ச்சி. தொலைபேசி தொடக்கத்தில் புதிதாக இருந்தது. வானொலியும் அவ்வாறேதான். இப்பொழுது கைபேசியிலேயே படம் எடுக்கலாம். கைபேசி அளவில் கணினியும் வந்துவிட்டது. அந்த நிலையில் அறிவியல் வளர்ச்சி வளர்ந்து கொண்டிருக்கிறது. அறிவியலில் விஞ்ஞானம் என்று சொல்வர். வீழ்தல் ஞானம் என்று பொருள். ஒன்று வீழும், மற்றொன்று தோன்றும். விஞ்ஞானம் புதிதுபுதிதாகத் தோன்றிக் கொண்டிருக்கும். அதற்கு வீழ்தல் ஞானம் - விஞ்ஞானம் என்றாகும்.

மெய்ஞ்ஞானம் என்றும் நிரந்தரமானவைகளையே பேசும். உயிர் நிலையானது. அதிலிருந்து தோன்றுவது ஆன்மா. அதிலிருந்து தோன்றுவது இறைநிலை. இவற்றிற்கெல்லாம் அடிப்படை உயிரும், மனமும். இவையெல்லாம் நிரந்தரமானவை. இவற்றைப் பற்றிப் பேசுவது மெய்ஞ்ஞானம்.

சிறு உதாரணத்தால் இதை விளக்கலாம். உலக உயிர்கள் அனைத்தும் தாய் வயிற்றின் வழித் தோன்றியவை. அதில் ஐயமில்லை. மனித உயிர்களுக்கும், தாய் யார் என்பது தெளிவாகத் தெரியும். அதனைக் கேட்கவோ, மறுக்கவோ இயலாது. ஏனெனில் ஒரு தாயின் வழியில் நாம் பிறந்தோம். ஆனால் தந்தை யார்? என்பது நமக்குத் தெரியாது. தாய் சொன்னால் தான் தெரியும். தாய்வழித் தந்தையை அறிகிறோம். அதில் நம்பிக்கை குறைந்தால் முகபாவங்களையும், குருதி ஓட்டத்தையும், பிற காரண காரியங் களையும் வைத்துத் தந்தையை அறிந்துகொள்கிறோம். தந்தையை அறிவது அறிவியல். தாயை உணர்வது மெய்ம்மையியல்.

தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்கள் மெய்ம்மையியல் நூல்கள். என்றும் நிரந்தரமான செய்திகளைக் கூறும் நூல்கள். சிறந்த நூலுக்குப் பிறப்பு உண்டு. இறப்பு இல்லை. மக்கள் அனைவரும் உயிரினங்கள் அனைத்தும் பிறக்கும், இறக்கும். பிறப்புக்கு எதிர்மறை இறப்பு. பிறப்பு இருந்தால் இறப்பு இருத்தல் வேண்டும். ஆனால், மெய்ம்மையியல் நூல் பிறப்பு மட்டும்தான் உண்டு. இறப்பு இல்லை. அதுபோன்ற நூல் தொல்காப்பியம். உலகம் இருக்கும்வரை தமிழ் மொழி இருக்கும். தமிழ் இருக்கும் வரை தொல்காப்பியம் இருக்கும். இது புறநிலை. தொல்காப்பியம் கூறுகின்ற கருத்துக்கள் உலகம் அழிந்து மறுபடியும் தோன்றினாலும்,

தொல்காப்பியக் கருத்துக்கள் நிரந்தரமானவை. அப்போதும் இருக்கும். அதனால் தொல்காப்பியம் மெய்ம்மையியல் நூல்.

## தொல்காப்பியம் - சொல் நிலை

தொல்காப்பியம் என்ற சொல் நூலைக்குறிக்கும் போது ஒரு சொல் நீர்மைத்து. அதனை விளக்கும்போது தொல் + காப்பு + இயம் என்று பிரித்துப் பொருள் கூறவேண்டும். தொல் தொன்மையைக் குறிக்கும். காப்பு என்பது காத்தலைக் குறிக்கும். இயம் என்பது ஒலித்தலைக் குறிக்கும்.

தொல்காப்பியம் என்பது தொன்மையை, பழமையை, தமிழர் பண்பாட்டைப் பாதுகாத்து இயம்புவது கூறுவது, விளக்குவது, என்று பொருள். அது காரணப்பெயர்.

தொல்காப்பியத்தை எழுதியதால் தொல்காப்பியர் என்று அழைக்கப்பெற்றார். அதுவும் காரணப்பெயரே. தொல்காப்பியரின் இயற்பெயர் நமக்குத் தெரியாது. காப்பியம் என்ற சொல் காப்பியக் குடியைக் குறிக்கும். காப்பியக் குடி என்று ஒன்றிருந்தது. தொல்காப்பியரைக் காப்பியக்குடியில் தோன்றியவர் என்று கூறுவது உண்டு.

தொல்காப்பியம் சிறப்புப்பாயிரத்தில் தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி எனக் குறிப்பிட்டு உள்ளதால் தொல்காப்பியன் என்று தன் பெயரைத் தோற்றுவித்துக் கொண்டார். தொல்காப்பியம் எழுதியதால் தோன்றி என்பது தன்வினை. தோற்றி என்பது பிறவினை. அதனால் தொல்காப்பியர் என்ற பெயர் இயற்பெயர் அன்று. புனைபெயர், தோற்றுவித்துக் கொண்ட பெயர்.

## தொல்காப்பியம் - பொருள் நிலை

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்களால் ஆயது. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒன்பது இயல்கள். மூன்று அதிகாரத்திற்கும் 27 இய்ல்கள். இரண்டு, ஏழும் கூட்டினால் ஒன்பது வரும். ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒன்பது இயல்கள். அதைக் கூட்டினாலும் ஒன்பது இயல்கள் வரும். ஒன்பது என்பது தான் உயர்ந்த எண். இது ஒரு எண்ணியல் அடிப்படை.

| எழுத்து | நூ.எ. | சொல் | நூ.எ. | பொருள் | நூ. எ. |
|---|---|---|---|---|---|
| 1. நூல்மரபு | 33 | 10. கிளவியாக்கம் | 62 | 19. அகத்திணையியல் | 55 |
| 2. மொழிமரபு | 49 | 11. வேற்றுமையியல் | 22 | 20. புறத்திணையியல் | 36 |
| 3. பிறப்பியல் | 20 | 12. வேற்றுமை மயங்கியல் | 35 | 21. களவியல் | 50 |
| 4. புணரியல் | 40 | 13. விளிமரபு | 37 | 22. கற்பியல் | 53 |
| 5. தொகை மரபு | 30 | 14. பெயரியல் | 43 | 23. பொருளியல் | 54 |
| 6. உருபியல் | 30 | 15. வினையியல் | 51 | 24. மெய்ப்பாட்டியல் | 27 |
| 7. உயிர் மயங்கியல் | 93 | 16. இடையியல் | 48 | 25. உவமவியல் | 37 |
| 8. புள்ளி மயங்கியல் | 110 | 17. உரியியல் | 98 | 26. செய்யுளியல் | 241 |
| 9. குற்றியலுகரப் புணரியல் | 78 | 18. எச்சவியல் | 67 | 27. மரபியல் | 111 |

*நூற்பா எண்களும், மொத்த எண்களும் உரையாசிரியர்கள் கருத்துக்குத் தக அமையும். தொல்காப்பியத்திற்கு இன்று கிடைக்கின்ற உரைகளில் முதல் உரை இளம்பூரணர் என்ற ஆசிரியர் உரை. அவர் உரையாசிரியர் என்றே அழைக்கப்பெற்றார். அவர் காலத்திற்கு முன்பும் உரைகள் இருந்தன என்பது அவர் உரையிலிருந்து தெரியவருகிறது. இளம்பூரணருக்குத் தொல்காப்பிய நூற்பாக்கள் 1585. ச.வே.சு பதிப்பில் 1610 ஆக அமைகிறது. பேராசிரியர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் அமைத்த அடிப்படையில் 1612 வருகிறது. இவ்வாறு உரையாசிரியர்களுக்குத் தகவும், பதிப்பாசிரியர்களுக்குத் தகவும் நூற்பா எண்கள் மாற்றம் அடையலாம். ஆனால், நூற்பாக்கள் ஒன்றுதான்.*

*சான்றாக,*

*வஞ்சி தானே முல்லையது புறனே* (தொல் 1007)

*எஞ்சா மண்நசை வேந்தனைவேந்தன்*
*அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்றே* (தொல் 1008)

இவற்றை இரண்டு நூற்பாக்களாக நச்சினார்க்கினியர் கொள்வார். ஒரு நூற்பாவாக இளம்பூரணர் கொள்வார். அதனால் தான் நூற்பா எண்ணிக்கையில் வேறுபாடு அமைகின்றது.

பொருள் தான் அனைத்திற்கும் அடிப்படை. ஒரு பொருள் பற்றிப் பேசுவதற்குச் சொற்கள் தேவைப்படுகின்றன. சொற்கள் எழுத்துக்களால் ஆயவை. அதனால் பொருளை முதற்கண்ணாகக் கொண்டு, சொல்லை இரண்டாவது கூறி, எழுத்தை மூன்றாவதாகக் கூறலாம். ஆனால் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்று அமைந்துள்ளார். எளிமையாக எழுத்தை விளக்க முடியும். சொல்லை விளக்கமுடியும், பின்பு பொருளைக் கூறலாம் என்று அவர் நினைத்திருக்கலாம்.

ஆனால், உலகம் தோன்றிய பின்பு, உயிர்கள் தோன்றிய பின்பு, சில நூற்றாண்டுகள் கழித்து; மொழி தோன்றியிருக்க வேண்டும். உலகத் தோற்றம், உயிர்களின் வகைப்பாட்டை அறிந்த பின்பு, மொழி இலக்கியங்களை அறிவது முறைமை. அதனால் உலகத்தோற்றம் கூறுகின்ற உயிர்களின் வகைப்பாட்டைக் கூறுகின்ற பொருளதிகாரச் செய்திகளை முதலில் கூறிப் பின்பு சொல்லதிகாரச் செய்திகளைக் கூறலாம்.

தொல்காப்பியத்தின் சிறப்பு

வள்ளுவர்சீர் அன்பர் மொழிவாசகம் தொல்காப்பியமே
தெள்ளு பரிமேலழகன் செய்த உரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓர்ஆறும்
தண்தமிழின் மேலாந்தரம் - உமாபதி சிவாச்சாரியார்.

பதினான்கு சாஸ்திரங்களில் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய எட்டு சாஸ்திர நூல்களை எழுதியவர் உமாபதி சிவாச்சாரியார்.

## தொல்காப்பியம் - இயற்றமிழ் இலக்கணம்

இவ்வியலிசைநாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ்நூல் தொல்காப்பிய

மாதலானும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பா இலக்கணத்தன வாதலானும் அந்நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க. அந்நூலிற் செய்யுளியலின் கண்ணே ஆசிரியர் பாவும் இனமுமென்ற நான்கினிக்கியபாவினைத் தொகைவரையறையான் இரண்டெனஅடக்கியும், விரிவரையறையான் ஆறெனவிரித்தும், அவற்றை அறம் பொருளின் பத்தாற்கூறுக, வென்றுங்கூறிப் பின்பு அம்மை முதலிய எட்டுவனப்பும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணமென்று கூறியவர்,

*இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்*
*பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும்*
*தோல் என மொழிப தொன்மொழிப் புலவர்* (தொல் 1494)

என்பதனால், குவிந்து மெல்லென்ற சொல்லானும் பரந்து வல்லென்ற சொல்லானும் அறம்பொருளின்பம் பயப்ப வீடென்னும் விழுமிய பொருள் பயப்ப ஒருகதைமேற் கொச்சத்தானும் ஆசிரியத்தானும், வெண்பா வெண்கலிப்பாவானும் மற்றும் இன்னோரன்ன செய்யுட்களானும் கூறுகவென்றமையான், இத்தொடர் நிலைச்செய்யுள் அங்ஙனங் கூறிய தொடர்நிலையென உணர்க.

தொல்காப்பியம் தமிழ் இலக்கண இலக்கியங்களின் விதை. ஆணிவேர். தமிழ் இனத்தின் விளக்கம். தோண்டத் தோண்டக் குறையாத தமிழ்ச்சுரங்கம். தொல்காப்பியம் வழக்குக்கும், செய்யுளுக்கும் கூறப்பெற்ற இலக்கண நூல். அதனைச் சிறப்புப் பாயிரம் தெளிவாகக் கூறுகிறது.

*வழக்கும் செய்யுளும் ஆஇருமுதலின்*
*எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்*
*செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு*
*முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப்*
*புலம் தொகுத்தோனே போக்கறுபனுவல்*

*சிறப்புப்பாயிரம்.*

தொல்காப்பியர் அவருக்கு முன்பு வாழ்ந்த அறிஞர்களின் கருத்துக்கள் அனைத்தையும் தொகுத்துத் தம் கருத்தையும் கூறுகிறார். முன்னோர் கருத்துக்களை என்ப (141) என்றும்,

எழுத்து எனப் படுப
அகரம் முதல் னகரம் இறுவாய்
முப்பஃது என்ப
சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடையே (தொல் 1)

141 இடங்களில் என்ப என்ற சொல் வருகிறது. தமிழ்மொழி தோன்றியது முதல் இன்றுவரை எழுத்துக்கள் முப்பதுதான். உயிரெழுத்துக்கள் 12, மெய்யெழுத்துக்கள் 18.

மொழிப என்ற சொல்லை 88 இடங்களில் பயன்கொள்கிறார். என்மனார் புலவர் என்ற தொடரை 80 இடங்களில் கூறுகிறார். புலம் என்ற சொல்லுக்கு அறிவு என்று பொருள். புலவர் என்றால் அறிவுடையவர் என்று பொருள். இதேபோன்று மொழிமனார் (3) அறிந்திசினோரே (2) உணர்ந்தோரே (6), உணர்ந்திசினோரே (2), குறிஅறிந்திரோ (2), குறி என்ற சொல் இலக்கணத்தைக் குறிக்கும். நுணங்குமொழிப் புலவர், சிறந்திசினோரே, சொல்லினர் புலவர், தெளியுமோரே, புலன்நன்குணர்ந்த புலமையோரே, வகுத்தனர் உணர்ந்த வல்லோர் ஆறே, வாய்மொழிப் புலவர், நேரிதின் உணர்ந்தோர், நெறிப்படுத்தினரே, என்மனார் வயங்கியோரே என மூதாதையர் எண்ணங்களை 343 நூற்பாக்களில் கூறுகிறார். 1610 நூற்பாக்களில் 20 விழுக்காடு மூதாதையர் கருத்து. 80 விழுக்காடு தொல்காப்பியர் கருத்து.

தொல்காப்பியத்தைத் தமிழரின் உயிர்நூல் என்று கூறுவர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார். அவர் தொல்காப்பியம் பற்றிய கட்டுரைகளைத் தொகுத்துத் தொல்காப்பியக் கடல் என்றொரு நூலை எழுதியுள்ளார். தொல்காப்பியம் இலக்கண இலக்கியம் என்பது அவருடைய கருத்து.

“இலக்கணப்புகழ் சான்ற தொல்காப்பியம் இலக்கியமும் ஆம் என்ற ஒரு புதுப்பாங்கினைப் புலப்படுத்துவதற்கு ஒலி, முரண், சுவை என்ற மூன்றுவகைச் சான்றுகளை மட்டும் இச்சிறு கட்டுரையில் தொகுத்துக் காட்டியிருக்கிறேன். உவமை உருவகங்களாலும் சொல்லாட்சி நடைமாற்றங்களாலும் கற்பனை ஓவியங்களாலும் அறம் அறத்தின் முடிவுகளாலும் காப்பிய விலக்கியம், சிற்றிலக்கியம், நீதியிலக்கியம், புதினவிலக்கியம் என்பனபோலத்

தொல்காப்பியம் இலக்கணவிலக்கியம் என்ற புதுப்பெயர் பெறுந்தகுதியுடையது என்பது என் கருத்து". (தொல்காப்பியக்கடல் பக்கம் - 15)

தொல்காப்பியம் தோன்றிய காலத்தில் இந்திய மொழிகளிலோ, உலகமொழிகளிலோ, தொல்காப்பியம் போன்ற ஒருநூல் தோன்றியதில்லை.

உலகமொழிகளில் இலக்கணம் என்பது எழுத்துஇலக்கணம், சொல்லிலக்கணம் இரண்டைத்தான் குறிக்கும். பொருள் இலக்கணம் உலகமொழிகளில் மனிதப் பண்பாட்டின் விதையாகவும், உலகப் பொதுநூலாகவும், அதை ஆழ்ந்து, நுணுகிப் பார்க்கும்போது தோன்றுகிறது.

தொல்காப்பியத்திற்கு இதுவரை 150 பதிப்புகளுக்குமேல் வந்துள்ளன. உலகம் முழுவதும் லண்டன் நூலகத்திலும், பாரீஸ் நூலகத்திலும் தொல்காப்பியச் சுவடிகள் உள்ளன. தொல் காப்பியத்திற்கு 133 சுவடிகள் உள்ளன. வேறு எந்த நூலுக்கும் 100 சுவடிகளுக்கு மேல் இருப்பதாகத் தெரியவில்லை.

தொல்காப்பியம் 1610 நூற்பாக்களில் 4000 வரிகளுக்குள் தான் உள்ளன. தொல்காப்பிய அடிச்சொற்கள் 3500 தான். இன்று தமிழ்ச் சொற்கள் 1 லட்சத்து 25 ஆயிரம் சொற்கள் உள்ளன.

காலம் - தொல்காப்பியம் இடைச்சங்க காலத்தில் தோன்றிய நூல். முதல்சங்கம் தென்மதுரையிலும், இரண்டாவது சங்கம் கபாட புரத்திலும், மூன்றாம் சங்கம் இப்போதுள்ள மதுரையிலும் நடந்தாக வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

இப்போதுள்ள குமரிக் கடலுக்குத் தெற்கே 470 மைல் நிலப் பகுதியாக இருந்தது. அதற்கு லெமூரியா கண்டம் என்று பெயர். பல கடல்கோள்கள் நிகழ்ந்தன. இன்றுள்ள சுனாமி போல் என்பதற்கு இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. கபாடபுரத்தில் நிலம் தரு திருவில் பாண்டியன் அவையத்துத் தொல்காப்பியம் அரங்கேற்றப் பெற்றதாகச் சிறப்புப் பாயிரம் கூறுகிறது.

தொல்காப்பியம் தோன்றிய நாடே இல்லை. மக்கள் இல்லை. அரசன் இல்லை. நூல் இருக்கிறது. அதுதான் பெருமை.

இதன் காலத்தைப் பேராசிரியர்கள் வெள்ளைவாரணனார், ஆய்வறிஞர் மயிலை சீனிவேங்கடசாமி போன்றோர் கி.மு.8ஆம் நூற்றாண்டு என்று கூறுகின்றனர். கி.மு. தோன்றியது என்பதில் ஐயமில்லை. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கி.பி.5 ஆம் நூற்றாண்டு என்று எழுதியுள்ளார். அவர் கருத்தை மறுத்துப் பல பேராசிரியர்கள் கி.மு.3 அல்லது 4 ஆம் நூற்றாண்டு தோன்றியிருக்க வேண்டும் என எழுதியுள்ளனர்.

தொல்காப்பியர் காலத்திற்கும் நமக்கும் உள்ள இடைவெளி 2500 ஆண்டுகள். அதனால் தொல்காப்பியத்தை நாம் எளிதாகப் புரிந்து கொள்ள இயலாது. அதற்கு உரையாசிரியர்கள் துணைபுரிகின்றனர்.

உரையாசிரியர்கள் - தொல்காப்பியம் முழுவதற்கும் இளம்பூரணர் 11 ஆம் நூற்றாண்டில் உரை எழுதியுள்ளார். எழுத்து, சொல், பொருள் அதிகாரத்தின் சில பகுதிகளுக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். சொல் அதிகாரத்திற்கு அறுவர் உரைஎழுதியுள்ளனர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையார், தெய்வச்சிலையார், கல்லாடார், பெயர்தெரியாத ஒருவர். பொருளதிகாரத்தின் இறுதி நான்கு இயல்களுக்குப் பேராசிரியர் உரை எழுதியுள்ளார்.

செய்தி என்ற சொல்லுக்குத் தொல்காப்பியத்தில் தொழில் என்று பொருள். இன்று அப்பொருள் இல்லை. தொல்காப்பியத்தில் ஆண் என்பதைக் குறிப்பதற்கு ஆடூஉ என்றும், பெண்ணைக் குறிப்பதற்கு மகடூஉ என்றும் குறிப்பர். அதுதான் மிகுதி. பல சொற்கள் பொருள் மாற்றம் அடைந்துள்ளன. பல வழக்கழிந்துவிட்டன.

# அகத்திணையியல்

அகம் என்ற சொல்லுக்கு மனம், உள்ளம், நெஞ்சு, அகப்பொருள், இருப்பிடம், பூமி, மனை, வீடு, பாவம், அகம்பாவம், அகங்காரம், மார்பு போன்ற பலபொருள்கள் உள்ளன.

தொல்காப்பியக் காலத்திற்கு முன்பு பொருள் அடிப்படையில் அகம், புறம் என்ற இரண்டை மட்டும் வகுத்து வாழ்வியலைப் பார்த்தனர். பின்பு தான், அறம், பொருள், இன்பம் என்ற நிலையில் அது வளர்ந்தது. அதற்குப் பின்பு அறம், பொருள், இன்பம், வீடு என்ற நிலையிலும் விரிந்தது.

தொல்காப்பியத்தில்

*இன்பமும், பொருளும், அறனும் என்றாங்கு (தொல் 1038-1)*

என்று மூன்றையும் குறிப்பிடுவார்.

அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் போன்றன அகம் பற்றிப்பேசும் இயல்கள். அறம் பற்றியும், பொருள் பற்றியும், புறத்திணையியலில் பேசுவதாகக் கொள்ளலாம். தொல்காப்பியர் காலத்தில் இளமையில் இன்பமும், நடுமையில் பொருளும், முதுமையில் அறனும் வாழ்க்கையில் அமையும் என்ற கருத்தில் இன்பம், பொருள், அறம் என்று கூறியிருக்கலாம். தொல்காப்பியத்திலே அறம், பொருள், இன்பம் என்ற வழக்கும் வந்து விட்டது.

*அந்நிலை மருங்கின் அற முதலாகிய*
*மும்முதற் பொருட்கும் உரிய என்ப. (தொல் 1363)*

அகத்திணை என்பது உள்ளத்தின் ஒழுக்கத்தைக் குறிப்பது. அனைத்திற்கும் அடிப்படை மனம்தான். அகவாழ்க்கை மன

வாழ்க்கையாகவும், மனைவாழ்க்கையாகவும் அமைகின்றது. அதனால் தான், அகவாழ்க்கையை வீட்டு வாழ்க்கை என்று கூறுகிறோம். அகவாழ்க்கையில் தலைவன், தலைவி, நற்றாய், செவிலித்தாய், தோழி, தலைவன் தலைவியரின் தாய் தந்தையர் போன்றோர் பங்கு கொள்கின்றனர். வீட்டு வாழ்க்கையில் சிறப்பாக இருந்தால்தான் நாட்டு வாழ்க்கையும் சிறப்பாக அமையமுடியும் என்பது தொல்காப்பியர் கருத்து.

தொல்காப்பியக் காலத்திற்கு முன்பும் தொல்காப்பியர் காலத்தும் ஊழ் நம்பிக்கை இருந்தது. தலைவன், தலைவியும் இணை வதற்குக் காரணமே பாலது ஆணை என்று கூறுகிறார். பால் என்பது இங்கே ஊழ் வினையைக் குறிக்கிறது. அன்பின் முதிர்ச்சி காதல் என்று சொல்லலாம். பழங்காலத்தில் காமம் என்ற சொல் மிக உயர்ந்த பொருளில் பயன்பட்டது.

*கமம் நிறைந்து இயலும்* (தொல் 838)

கமம் என்ற சொல் நிறைவு என்ற பொருளைத் தரும். கமத்திலிருந்து காமம் என்பது அமைகிறது. காமம் என்பது முழு நிறைவைக் குறிக்கும். அதனால்தான் வள்ளுவர் காமத்துப்பால் என்று சொன்னார். பிற்காலத்தில் காமம் என்று சொல்லுக்குத் தாழ்வான உணர்வுகள் என்ற பொருள் அமைந்ததால் இன்பத்துப்பால் என மாற்றினர். காமம் என்ற சொல் தொல்காப்பியத்தில் காதல் என்ற பொருளில் மிகுதியாகப் பயன்படுகிறது. அன்பின் உச்சநிலையைக் காமம் என்று சொல்லலாம். காமக்கூட்டம் என்பது முதன்முதலில் தலைவன், தலைவி சந்தித்து இணைந்த இயற்கைப் புணர்ச்சி என்று கூறுதல்.

தொல்காப்பியர் கூறுகின்ற காதல் வேறு. வள்ளுவர் கூறுகின்ற காதல் வேறு. வள்ளுவர்,

*கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்*
*என்ன பயனும் இல்.* (குறள். 100)

இங்கு உணர்ச்சி தான் மிகுதியாக இருக்கிறது. இரண்டு கண்கள் நோக்கும்போது பேச்சுக்கு இடமில்லை என்றாகிறது. ஆனால் அறிவுக்கு இடம் இருக்கவேண்டும். தற்காலக் காதல்கள்

அனைத்தும் தோல்வியுறுவதற்குக் காரணம் கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின் தான். ஆனால் அறிவொடு இணைந்த காதல் தோல்வி அடையாது. அதனைத் தொல்காப்பியம் சிறப்பாகக் கூறுகிறது.

நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும் (தொல். 1042)

இங்கு நாட்டம் என்ற சொல் கண் என்பதைக் காட்டிலும் உயர்ந்த சொல். ஒருவரையொருவர் நாடுதல், கண் பார்த்தலை மட்டும் தான் செய்யும். நாடுதல் மனத்தில் செயல். அறிவின் செயல். நாட்டம் என்ற சொல் கண்ணைக் குறித்தாலும், அறிவாலும், மனத்தாலும் விரும்புவதைக் குறிக்கும். ஒருவரையொருவர் நாடும்போது அறிவு உடன்பாடு ஏற்படும். இது அறிவால் இணைகின்ற ஒன்று. அங்குத் தோல்விக்கு இடமில்லை. தற்காலத்தில் காதல் தோல்விகள் மிகுதி. அதற்குக் காரணம் உணர்ச்சி மிகுதியே தவிர, அறிவு குறைவு. அதனால்தான் தொல்காப்பியம் அறிவு உடம்படுத்தற்குக் கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும் என்று சொல்கிறார்.

வள்ளுவருக்கு வழிகாட்டியாக அமைகிறார் தொல்காப்பியர். தொல்காப்பியத்தில் கடவுள்வாழ்த்து இல்லை. குறளில் கடவுள் வாழ்த்து உண்டு. அந்தத் தொடரைத் தந்தது தொல்காப்பியம் தான்.

கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே. (தொல். 1034)

தொல்காப்பியம் வினைக்கொள்கையை ஏற்றுக்கொள்கிறது.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும் (தொல். 1594)

தெய்வ நம்பிக்கை தொல்காப்பியர் காலத்தில் இருந்தது. நாம் இன்று கூறுகின்ற நாமசெபத்தை மொழிப்பொருள் தெய்வம் (தொல் 982-2) என்று கூறுகிறது தொல்காப்பியம். இதனை இளங்கோவடிகள் சிலம்பில் பயன்படுத்துகிறார். கோவலன் கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரை செல்லும்போது அவர்களுக்கு வழித்துணையாக அமைவது நாமசெபம்தான். நாம் சிவசிவ என்று கூறுகிறோம். ஓம் நமசிவாய என்று கூறுகிறோம். ஓம்

நமோ நாராயணாய என்று கூறுகிறோம். இந்தச் சொற்களுக்கு எல்லாம் தெய்வநிலை உண்டு என்பதைத் தான் மொழிப்பொருள் தெய்வம் என்ற தொடர் குறிக்கிறது. அது தொல்காப்பியர் காலத்திலிருந்தே வழக்கில் இருந்தது.

நேர்த்திக்கடன் செய்தல் என்பது இன்று வழக்கில் உள்ளது. நல்ல காரியங்கள் நடக்கவேண்டும் என்று நினைக்கும்போது இறைவனை வேண்டி இது நடந்தால் இதனைச்செய்வேன் என்று நேர்ந்து கொள்கிறோம். இதுவும் தொல்காப்பியர் காலத்தில் இருந்தது. களவுக் காலத்தில் தலைவி வாழ்க்கை முழுநிலை அடைய வேண்டும். தலைவனோடு இணையவேண்டும் என்பதற்காகத் தெய்வத்தையும் வேண்டுவாள். தெய்வத்திடம் நேர்த்திக்கடன் செய்வதாகவும் வேண்டிக் கொள்கிறாள். இதனைக்

*கிழவோன் சுட்டிய தெய்வக் கடத்தினும்* (தொல். 1096-4)

என்று கூறுகிறாள்.

வாழ்த்துகின்ற முறையில் நீங்கள் குற்றம் நீங்கிய செல்வத்தோடு வழிவழி சிறந்து வாழ்க எனவும், வழிபடு தெய்வம் உங்களை காப்பாற்றட்டும் எனவும், புறநிலை வாழ்த்தாகக் கலிப்பாவாலும், வஞ்சிப்பாவாலும் பாடுவதில்லை எனவும் தொல்காப்பியம் கூறுகிறது. அதனால் ஆசிரியப்பாவாலும், வெண்பாவாலும் தான் வாழ்த்துக்கள் அமையும் என்று தெரிகிறது. இதனை,

*வழிபடு தெய்வம் நின்புறம் காப்பப்*
*பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து*
*பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே*
*கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ* (தொல். 1367)

தொல்காப்பியர் காலத்தில் தலைவி போகக் காதல் பரத்தை, காமக்கிழத்தி போன்றோரும் தலைவனோடு வாழ்ந்தாகத் தெரிகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை தொல்காப்பியர் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம் மக்கள் தொகையில் மகளிர் மிகுதியும், ஆடவர் குறைவுமாக இருந்திருக்கலாம்.

# புறத்திணையியல்

வாழ்க்கை அகம், புறம் என்று இரண்டு நிலைகளில் அமைகின்றன. நம்முடைய நிலையில் நம்முடைய புறநிலைகள் ஆடை, அணிகலன்கள், புறத்தோற்றம் இவைகள் ஒருவகை. நம்முடைய உள்ளம், மனம், நெஞ்சம் இவற்றின் செயல்பாடுகள் வேறு. அகநிலை வேறு, புறநிலை வேறு. அகவாழ்க்கையை வீட்டு வாழ்க்கை எனவும், புறவாழ்க்கையைச் சமுதாய வாழ்க்கை நாட்டு வாழ்க்கை எனவும் சொல்லலாம்.

இங்குப் புறப்புறம், புறம், அகப்புறம், அகம், அகஅகம் என்று பலநிலைகளில் பகுக்கலாம். புறப்புறம் என்பது நம்முடைய நகம், மயிர் போன்றன. நகம், மயிர் இவைகள் அடிக்கடி நீக்கப்பட வேண்டும். நீக்கப்படவேண்டிய புறப்புறம். நகம் வளர்ந்துவிட்டால் உண்ண முடியாது. முடி வளர்ந்து விட்டால் அதே நிலைதான். அதனால் இவைகள் நீக்கப்படுகின்றன. இதுபோன்று வாழ்க்கையைப் புறப்புறமாக அமைகின்ற புகையிலை, மது போன்றவை முழுநிலையில் நீக்கப்படவேண்டும். புறமாக அமைகின்ற கண், காது, மூக்கு போன்றவை ஐம்புலன்களாக அமைக்கின்றன. இவைகள் பழுதுபட்டால் மாற்றமுடியும். வேறு கண்ணை வைக்கலாம். வேறு காதையும் வைக்கலாம். அடுத்து, அகப்புறமாக அமைகின்ற இருதயம், கருப்பப்பை, மூத்திரப்பை போன்றவைகள் உள்ளே இருக்கின்றன. ஆனால் புறத்தில் எடுக்கமுடியும். மாற்றவும் முடியும். இவையனைத்தும் பருப்பொருட்கள். அகமாக அமைகின்ற மனம், உள்ளம், நெஞ்சம் போன்றவற்றைப் பார்க்க முடியாது. அகஅகமாக அமைகின்ற ஆன்மா போன்றவற்றை உணர்வதற்கே நீண்டநாள் ஆகும். இவ்வாறு வாழ்க்கை அமைகின்றது.

தொல்காப்பியம் எதனையும் வரன்முறையோடும், வரை முறையோடும் கூறுகின்றன. அகம் ஏழு திணைகள் என்றால் புறத்தையும் ஏழு திணைகளாக அமைப்பார் அவர். இது அமைப்பு முறை (Pattern) என்று கூறுவர்.

குறிஞ்சி - வெட்சி
முல்லை - வஞ்சி
மருதம் - உழிஞை
நெய்தல் - தும்பை
பாலை - வாகை
பெருந்திணை - காஞ்சி
கைக்கிளை - பாடாண்

இவற்றைப் பன்னிரண்டாக விரிக்கிறது புறப்பொருள் வெண்பாமாலை.

வெட்சி, கரந்தை
வஞ்சி, காஞ்சி
உழிஞை, நொச்சி
தும்பை, வாகை
பாடாண், பொதுவியல்
கைக்கிளை, பெருந்திணை

பகைநாட்டு அரசன் பசுக்களைக் கவர்வது வெட்சி, அதை எதிர்த்துப் போரிட்டு வெல்வது கரந்தை. பகை நாட்டு அரசன் மண்ணைக்கொள்ள விரும்புவது வஞ்சி. பகைநாட்டு அரசன் அரணை முற்றுகையிடுதல் உழிஞை, அதனை எதிர்த்துப் போரிடுதல் நொச்சி. போர்செய்ய வந்த அரசனை எதிர்த்துப் போர்செய்வது தும்பை. இவற்றின் வெற்றிகளைப் பாடுவது வாகை. வாழ்க்கையின் தத்துவங்களை, நிலையாமையைக் கூறுவது காஞ்சி. அரசனைப் பாடுவது, சமுதாயத்தைப் பாடுவது இவை பாடாண் என்று அமைகின்றன. இவற்றின் போர்கள் பற்றிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை போக, ஏனைய வாகை, காஞ்சி, பாடாண் இவை சமுதாய வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைகின்றன.

பழங்காலத்தில் போரில் சிறப்பாகப் போர்புரிந்து வீரமரணம் அடைந்த வீரனுக்கு நடுகல் அமைத்து வழிபடுவது வழக்கம். அதனைக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்தல் என்று ஐந்து நிலைகளில் அமைப்பர். இதனை முதன்முதலில் பெண்பாலாகிய வீரக்கண்ணகிக்கு அமைத்தார் இளங்கோவடிகள். சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் சேரன்செங்குட்டுவன் வடநாடு சென்று கண்ணகிக்கு இமயத்தில் கல்எடுத்துக் கனகவிசயன்

தலையில் கல்லை ஏற்றிக் கங்கையில் நீராட்டி வஞ்சிக்குக் கொணர்ந்து கோவில்கட்டி வழிபாடு செய்து வாழ்த்தினர். இவை புறத்திணையின் கூறுகளாக அமைகின்றன. நீராட்டியதைப்பற்றி ஒருபாடல் தருகிறார் நச்சினார்க்கினியர்.

*பல்லா பெயர்த்து நல்வழிப் படர்ந்தோன்*
*கல்சொரிந் தாட்டிய நீரே தொல்லை*
*வான்வழங்கு நீரினுந் தூய்தே யதனாற்*
*கண்ணீ ரருவியும் கழீஇத்*
*தெண்ணீர் ஆடுமின் தீர்த்தமாம் அதுவே.*

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் என்பது ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய ஆறும் அமைகின்றன. புரவலன் கொடுப்பதை இரவலன் பெறுகின்றான். பொதுநிலையில் அரசன் கொடுப்பப் புலவர் பெறுவது மரபு. ஆனால், தகுதியறிந்து புலவருக்குக் கொடுக்கவில்லையெனில் புலவர் அரசனுக்கே கொடுக்கின்ற நிலையும் உண்டு. அது புலவரின் பெருமிதமாக அமைகின்றது.

பெருஞ்சித்திரனார் என்ற புலவர் வெளிமான் என்ற சிற்றரசனிடம் சென்றார். அவன் தம்பியைப் பரிசில் கொடுக்கச் சொன்னான். தம்பி புலவரின் பெருமையையும், தகுதியையும் உணராது சிறிது கொடுத்தான். அதை விரும்பாத புலவர் இளவெளிமானுக்கே பரிசில் கொடுத்துச் சென்றார்.

*இரவலர் புரவலை நீயும் அல்லை*
*புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்*
*இரவலர் உண்மையும் காண், இனி, இரவலர்க்கு*
*ஈவோர் உண்மையும், காண், இனி, நின்ஊர்க்*
*கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த*
*நெடுநல் யானைஎம் பரிசில்*
*கடுமான் தோன்றல்! செல்வல் யானே.* (புறம். 162)

வாகை வெற்றியைப் பற்றிக் கூறுவது. அதன் பிரிவுகளும் ஒன்றாகிய

*நாலிரு வழக்கின் தாபதப் பக்கமும்* (தொல். 1021-6)

தாபதம் என்ற சொல் துறவைக் குறிக்கும். ஆகமத்தின் வழி நின்று வீடுபெற முயல்வார்க்கு உரியவாகிய எண்வகை மார்க்கத்தும் தவம் புரியும் கூறும்.

தவம் செய்வார்க்கு உரியனவாக எட்டு கூறப்பட்டுள்ளன. 1.ஊணசையின்மை, 2.நீர்நசையின்மை, 3.வெப்பம் பொறுத்தல், 4.தட்பம் பொறுத்தல், 5.இடம்வரையறுத்தல், 6.ஆசனம் வரையறுத்தல், 7.இடையிட்டு மொழிதல், 8.வாய் வாளாமை என்ற எட்டினைக் கூறுவர். இவற்றிற்கு விளக்கம் தரும்போது, உணவினும், நீரினும் சென்ற மனத்தைத் தடுத்தலும், ஐந்தீ நாப்பணும், நீர்நிலையினும் நிற்றலும், கடலும், காடும் மலையும் முதலியவற்றில் நிற்றலும், தாமரை ஆம்பல் யாமையில் முதலிய ஆசனத்திருத்தலும், உண்டற்காலை உரையாடமையும், துறந்த கால் எட்டும், வாய் வாளாமையும் என்று கூறுகிறார். வாய் வாளாமை என்பது உரையாடாமையாகிய மௌனத்தைக் குறிக்கிறது.

அவற்றொடு யோகம் செய்வார்க்குரியனவாக 1.இயமம், 2.நியமம், 3.ஆசனம், 4.வளிநிலை, 5.தொகைநிலை, 6.பொறை நிலை, 7.நினைதல், 8.சமாதி என்ற எட்டையும் கூறுகிறார். இவற்றிற்கு விளக்கங்களும் பழைய இலக்கணங்களில் உள்ள நூற்பாக்களையும் தருகிறார்.

1. இயமம்

*பொய்கொலை களவே காமம் பொருணசை*
*இவ்வகை ஐந்து மடக்கியது இயமம்.*

2. நியமம்

*பெற்றதற்கு உவத்தல் பிழம்புநனி வெறுத்தல்*
*கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை*
*பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு*
*நயனுடைய மரபின் நியமம் ஐந்தே.*

3. ஆசனம்

*நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் என்று*
*ஒத்த நான்கில் ஒல்கா நிலைமையோடு*

*இன்பம் பயக்கும் சமயம் முதலிய*
*அந்தமில் சிறப்பின் ஆசனம் ஆகும்.*

4. வளிநிலை

*உந்தியொடு புணர்ந்த இருவகை வளியும்*
*தத்தம் இயக்கம் தடுப்பது வளிநிலை.*

5. தொகைநிலை

*பொறி உணர்வெல்லாம் புலத்தின் வழாமல்*
*ஒருவழி படுப்பது தொகைநிலையாமே.*

6. பொறைநிலை

*மனத்தினை ஒருவழி நிறுப்பது பொறைநிலை.*

7. நினைதல்

*நிறுத்திய அம்மனம் நிலைதிரியாமல்*
*குறித்த பொருளொடு கொளுத்தல் நினைவே.*

8. சமாதி

*ஆங்கனம் குறித்த வாய்முதல் பொருளோடு*
*தான்பிறன் ஆகத் தகையது சமாதி.*

ஒரு அவையில் இருப்பதற்குரிய தகுதிகளாக எட்டினைக் குறிக்கின்றார் தொல்காப்பியர். வாகைத் திணையின் துறைகளில் ஒன்றாகிய,

*எட்டுவகை நுதலிய அவைத்தானும் (1022-17)*

என்பதற்கு விளக்கம் கீழ்க்கண்ட நிலையில் தருகிறார்.

*1.* குடிப்பிறப்பு, *2.* கல்வி, *3.* ஒழுக்கம், *4.* வாய்மை, *5.* தூய்மை, 6. நடுவுநிலைமை, *7.* அழுக்காறாமை, *8.* அவாவின்மை.

இதனை ஆசிரியமாலை என்ற நூல்வழித் தெளிவுபடுத்துகிறார்.

*குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி*
*விழுப்பேர் ஒழுக்கம் பூண்டு காமுற*
*வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையின்*
*காதலின் இன்பத்துள் தங்கித் தீதறு*
*நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்*
*அழுக்காறு இன்மை அவாஅ இன்மையென*
*இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டும்*
*தோலா நாவின் மேலோர் பேரவை*
*உடனமர் இருக்கை ஒருநாட் பெறுமெனின்*
*பெறுகதில் அம்ம யாமே வான்முறைத்*
*தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து*
*நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது*
*நிலையழி யாக்கை வாய்ப்பஇம்*
*மலர்ந்தலை உலகத்துக் கொட்கும் பிறப்பே* (*ஆசிரியமாலை*)

மற்றொரு துறையாகிய பொருளோடு உணர்ந்த பக்கமும் என்பதற்கு மெய்ப்பொருள் உணர்ந்த பக்கமும் என்று பொருள் கூறி, அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றினுள் அறனும், இன்பமும் அன்றி, ஒழிந்த நாடு, அரண், பொருள், அமைச்சு, நட்பு, படை என்னும் அரசு உறுப்புக்கள் ஆகிய பொருள் என்றும், தம் பொருள் என்ப தம்மக்கள் என்றவாறு மக்கட்பேறாகிய பொருள் என்றும் பொருள் கொள்வர் இளம்பூரணர்.

# நிலவியல்

| கருப்பொருள் | குறிஞ்சி<br>மலர் | முல்லை<br>மலர் | மருதம்<br>மரம் | நெய்தல்<br>மலர் | பாலை<br>மரம் |
|---|---|---|---|---|---|
| 1. தெய்வம் | சேயோன்<br>முருகன் | மாயோன்<br>திருமால் | வேந்தன்<br>இந்திரன் | வருணன் | |
| 2. உணவு | ஐவனநெல்,<br>தினை, மூங்கிலரிசி | வரகு, சாமை<br>முதிரை | செந்நெல்,<br>வெண்ணெல் | மீன், உப்பு | ஆறலைத்தளவு |
| 3. மா விலங்கு | புலி, யானை, கரடி<br>பன்றி | உழை, புல்வாய்<br>முயல் | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியழிந்த யானை<br>புலி, செந்நாய் |
| 4. மரம் | அகில், ஆரம் | கொன்றை, குருந்து | வஞ்சி, காஞ்சி | புன்னை, ஞாழல் | இருப்பை, ஓமை |
| | சந்தனம், தேக்கு<br>திமிசு, வேங்கை | | | மருதம் | உமிழை, ஞெமை |
| 5. புள் பறவை | கிளி, மயில் | கானக்கோழி<br>சிவல் | தாரா, நீர்க்கோழி | அன்னம், அன்றில் | கழுகு, பருந்து<br>புறா |
| 6. பறை | முருகியம்<br>தொண்டகப்பறை | ஏறுகோட் பறை | மணமுழவு,<br>நெல்லரிகிணை | மீன்கோட் பறை | சூறைகோட்<br>நிரைகோட்பறை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. செய்தி | தேன் அழித்தல், கிழங்கு அகழ்தல் தினை விளைத்தல் கிளி கடிதல் | நிரை மேய்த்தல் வரகுகளை கட்டல் கடாவிடுதல் | நடுதல், களை கட்டல், அரிதல் கடாவிடுதல் | மீன்படுத்தல், உப்பு விளைத்தல், | ஆறலைத்தல் சூறைகோடலும் |
| 8. யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருதயாழ் | நெய்தல் யாழ | பாலை யாழ் |
| 9. பூ | காந்தள், வேங்கை சுனைக்குவளை | முல்லை, பிடவு தளவு | தாமரை, கழுநீர் | கைதை, நெய்தல் | மரா, குரா, பாதிரி |
| 10. நீர் | அருவி, சுனைநீர் | கான்யாறு | யாற்றுநீர், மனைக் கிணறு, பொய்கை | மணற்கிணறு | அறுநீர்க்கூவல் |
| 11. ஊர் | சிறுகுடி குறிச்சி | பாடி, சேரி, பள்ளி | ஊர்கள் என்பன | பட்டினம், பாக்கம் | பறந்தலை |
| 12. பொழுது | | | | | வேனில் இளவேனில் |
| அ. பெரும்பொழுது | கூதிர், முன்பனி | கார், | வைகறை விடியல் | எற்பாடு | முதுவேனில் |
| ஆ. சிறுபொழுது | யாமம் | மாலை | வைகறை விடியல் | | பின்பனி, நண்பகல் |
| 13. மக்கள் | குறவன், குறத்தி | ஆயர், வேட்டுவர் ஆய்ச்சியர் | உழவர், உழத்தியர் | நுளையர், நுளைச்சியர் | எயினர், எயிற்றியர் |
| 14. தலைமக்கள் | மலைநாடன், வெற்பன் | பொதுவன், வெற்பன் | ஊரன், மகிழ்நன் | சேர்ப்பன், துறைவன் கொண்கன் | மீளி, விடலை |

# மக்கள்

## ஆடவர் இயல்பு

மனித சமுதாயம் முழுமைக்கும், ஆடவர்க்குரிய பண்புகளாகப் பெருமையும் வலிமையும் அமைகின்றன. இதை எளிய நூற்பாவில் தருகிறார்.

பெருமையும் உரனும் ஆடூஉ மேன (தொல். 1044)

உலகம் தோன்றியது முதல் இன்றுவரை, உலகம் இருக்கும் வரை ஆடவர்க்குரிய பண்புகளாக இவை அமையும். மூவேந்தர் களுக்கும், போர் வீரர்களுக்கும் ஜூலியஸ் சீசருக்கும், அலெக்ஸாண்டருக்கும், அனைவருக்கும் இது பொருந்தும். உலக ஆடவர் பொதுப்பண்புகள் இவை.

## பெண்டிர் இயல்பு

ஆடவர்க்கும், பெண்டிர்க்கும் இயல்பாக இறைவன் வேறுபாட்டை அமைத்துள்ளான். பெண்டிர்தான் குழந்தைபேறு அடைய முடியும். ஆடவர் அடையமுடியாது. இது உடற்கூறு சாத்திரத்தால் ஏற்படுகின்ற வேறுபாடு. அதோடு இயல்பாக ஆடவரைக் காட்டிலும் சிறிது அச்சமும், நாணமும் பிறர் கூறும் எண்ணங்களை ஏற்றுக்கொள்ளும் மடனும் இயல்பாகப் பெண்டிர்க்கு அமைகின்றன. இதுவும் உலகப் பெண்டிர்க்கு உரியதுதான்.

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல். 1155)

## ஆடவர்க்கும், பெண்டிர்க்கும் தேவையான பண்புகள்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பார் வள்ளுவர். சாதியாலோ, சமயத்தாலோ, நாட்டாலோ, மொழியாலோ பிறப்பு

வேறுபடுவது இல்லை. உயர்ந்த ஒழுக்கமுடைய குடும்பத்தில் பிறத்தல் சிறப்பு, அப்பிறப்பு நல்ல பண்புகளுள் ஒன்றாக அமைகின்றது.

ஒழுக்கம் உடைமை குடிமை என்பார் வள்ளுவர். பிறப்பு போன்று குடிமையும் ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைகிறது. சிறந்த ஒழுக்கமுடைய குடும்பத்தில் தோன்றல் சிறப்பு.

ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் ஆள்வினை உடைமை தேவை. வள்ளுவர் உடைமைகளில் சிறந்ததாக ஆள்வினை உடைமையைக் கூறுவார். நாம் இன்றுள்ள நிலையில் நிர்வாகத் திறமை என்று கூறலாம். அதனை ஆண்மை என்று குறிப்பிடுகிறது தொல்காப்பியம். அஃது ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் பொது. ஆண்மை ஆள்வினை உடைமையே குறிக்கிறது.

இல்லற வாழ்க்கைக்கு ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் ஒத்த தேவையான பருவம் அவசியம். அதை ஆண்டு என்று குறிப்பிடுகிறார். வயது என்று குறிப்பிடலாம். வயது ஒப்புமை வாழ்க்கைக்குத் தேவையாக அமைகிறது.

புறநிலைத் தோற்றமும் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் ஒத்து அமைந்தால் பொருத்தமாக இருக்கும். இருவரில் ஒருவர் வடித்தோடு இருந்தால் தாழ்வு மனப்பான்மை ஏற்படும். அதனால் தாழ்வு மனப்பான்மை இல்லாது அமைவதற்கு ஒத்த புறவடிவம் தேவை. அதனை உருவு என்று கூறுகிறார்.

வாழ்க்கையில் இணைவதற்கு மிகத்தேவையானது உடல் விருப்பம். ஒருவருக்கு மிகுதியான பாலுணர்வும் மற்றவர்க்குக் குறைந்த பாலுணர்வும் இருந்தால் அதைச் செம்மைப்படுத்துவது கடினமாக அமையும். அதனால் இருவர்க்கும் ஒத்த பாலுணர்வு அமைவது நல்லது. அதனை நிறுத்த காம வாயில் என்கிறது தொல்காப்பியம்.

பண்புகளில் ஒத்து அமைவது நல்லது. ஒருவர் தாழ்ந்த பண்புடையவராகவும், மற்றவர் உயர்ந்த பண்புடையவராகவும்

இருந்தால் வாழ்க்கை இனிமையாகச் செல்வது கடினம். அதனால் பண்பாலும் ஒத்தமைய வேண்டும். அதை நிறை என்கிறார் தொல்காப்பியர்.

அன்பினுடைய குழந்தையாக அருளைக் கூறுவார் வள்ளுவர். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவது அருள் என்று கூறப்பெறும். கருணை, இரக்கம் என்றும் இதனைக் குறிப்பிடலாம். அவ்வுணர்வும் இருவருக்கும் பொருந்தி அமைதல் வேண்டும்.

ஒருவர் பிறருடைய உள்ளக்குறிப்பை அறிந்து ஒழுகுகின்ற அறிவுடையராக இருத்தல் வேண்டும். அதை உணர்வு என்று கூறுகிறது தொல்காப்பியம். வாழ்க்கை சிறப்பாக அமைவதற்கு இந்த உணர்வும் தேவை.

இருவரும் ஒத்த அழகும் செல்வமும் உடையவர்களாக இருந்தால் வாழ்க்கை சிறப்பாக அமையும். அதைத் திரு என்கிறார் தொல்காப்பியர்.

இல்வாழ்க்கை இனிமையாக அமைய மேற்கூறிய பத்து பண்புகளும் இருவருக்கும் ஒத்து அமைந்தால் நல்லது என்பது தொல் காப்பியக் கருத்து.

*பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு*
*உருவு, நிறுத்த காம வாயில்,*
*நிறையே, அருளே, உணர்வொடு திரு என*
*முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே* (தொல். 1219)

## இல்வாழ்க்கைக்கும் இருவர்க்கும் வேண்டாதவை

தாமும் சிறப்பாக வாழ்ந்து சமுதாயத்திற்கும் நல்லதைச் செய்வதற்கும் நல்ல பண்புகள் வேண்டும். தாழ்வான செயல்கள், குணங்கள் இருத்தல் கூடா. அதைப் பற்றியும் சிந்தித்துக் கூறுகிறது தொல்காப்பியம்.

மனித உறவுக்கு ஒருவரை ஒருவர் நேசிக்கின்ற நேயம் தேவை. அது இல்லையெனில் தம் வாழ்க்கையும் சிறப்பாக அமையாது.

சமுதாய வாழ்க்கையும் சிறப்பாக அமையாது. இதனை நிம்பிரி என்று கூறுகிறது தொல்காப்பியம். நிம்பிரி என்றால் நேயம் இன்மை என்பது பொருள்.

இயல்பாகச் சிலருக்கு இரக்கமற்று தன்மை அமைவதுண்டு. எதைப் பார்த்தாலும் ஒரு வெறுப்புணர்ச்சி கொடூர மனப்பான்மை போன்றவை இருத்தல் உண்டு. அதைக் கொடுமை என்கிறார் தொல்காப்பியர். அதுவேண்டாத குணம் தான்.

மிகச் சாதாரண செயல்களையும் பெரிதாகக் கருதி வியக்கின்ற தன்மை இருத்தல் கூடாது. தனை வியப்பு என்கிறது தொல்காப்பியம்.

பிறரைப் பற்றிக் கோள் சொல்லி வாழ்வதைவிடச் சாதல் நல்லது என்பார் வள்ளுவர். வாழ்க்கையில் ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றிக் குறை கூறுவது புறமொழி என்று கூறப்படும். அது தேவையற்ற செயல் என்பது தொல்காப்பியர் கருத்து. புறங்கூறாமை என்று அதிகாரமே அமைக்கிறார் வள்ளுவர்.

இனிய சொற்கள் இருக்கக், கொடிய சொற்களைச் சொல்லுதல் கையில் பழம் இருக்கக் காயைக் கடித்துண்பது போலும் என்பார் வள்ளுவர். இனியவை கூறல் என்று ஒரு அதிகாரம் அமைக்கிறார் வள்ளுவர். வாழ்க்கையில் கொடுஞ்சொற்களைச் சொல்லுதல் கூறுகின்றவனுக்கும் நோய், கேட்கின்றவனுக்கும் வெறுப்பு. அதனால் வன்சொல் கூடாது என்கிறது தொல்காப்பியம்.

மறதி வாழ்க்கையில் பல இழப்புக்களைத் தரும். அதனால் மறதி கூடாது என்பது பொதுக்கருத்து. இதைப் பொச்சாவாமை என்ற அதிகாரத்தில் சொல்லுவார் வள்ளுவர். தொல்காப்பியம் பொச்சாப்பு என்று கூறுகிறது.

மனிதனுடைய வாழ்க்கை வளர்ச்சிக்கு ஊக்கம் மிகுதியாகத் தேவை. சோம்பல் தனி மனிதனை மட்டுமல்ல. மனித சமுதாயத்தையே அழித்துவிடும். அதனால் சோம்பல் கூடாது என்று சொல்லுகிறார். மடிமை என்பது சோம்பல்.

தான் உயர்ந்த குடியில் பிறந்தோன் என்ற உணர்வு மனிதனை அழித்துவிடும். அதுபோன்ற உணர்வுகள் மனிதத்துக்குக் கூடாது

என்பது தொல்காப்பிய எண்ணம். அதனைக் குடிமை இன்புறல் என்கிறார்.

எல்லோர்க்கும் நன்றாம் பணிதல், பணிவுடைமை மனிதத்தை வளர்க்கும். பணிவுடைமையை மறத்தல் கூடாது என்பதனை ஏழைமை மறப்பு என்கிறார்.

சமுதாய வளர்ச்சிக்கு ஒப்புமை தேவை. ஆனால் தாழ்ந்தவனை ஒப்பிட்டுத் தன் வளர்ச்சியைக் குறைத்துக்கொள்வது சிறப்பாகாது. ஒப்பிட்டு நோக்கி இன்புறுகின்ற நிலை சிறப்பாகாது என்பது புதுக்கருத்து. இப்பத்தினையும் மனித சமுதாய வளர்ச்சிக்குத் தேவையற்றவை என்று கருதுகிறார்.

*நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி*
*வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை*
*இன்புறல், ஏழைமை மறப்போடு, ஒப்புமை*
*என்றிவை இன்மை என்மனார் புலவர்* (தொல். 1220)

❖

# குறட் குமுகாயம்

முனைவர் நெல்லை. ந.சொக்கலிங்கம்
மதுரை - 625 019

## முன்னுரை

"திருக்குறள் ஒரு சுரங்கம். அஃது அவ்வக் கால உலகைப் புரக்கும் பொருள்களை அவ்வப்போது வழங்கும் பெற்றியது. அதினின்றும் இதுகாறும் அறிஞரால் எடுக்கப்பட்ட பொருள் சிலவே; மிகச் சிலவே. இவ்வேளையில் திரண்டுவரும் புது உலகமும், இனித் திரளப்போகும் பலவகை உலகங்களும் ஏற்கத்தக்க பொருள்கள் இன்னும் திருக்குறளில் மிடைந்து கிடக்கின்றன. திருக்குறட் சுரங்கம் வற்றாதது" என்று தமிழ்த்தென்றல் திரு.வி.க. (திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், அறிஞர் மு.வரதராசனார், ப.11) அணிந்துரையில் தெளிவுறுத்துவது குறள் நூலின் பெருமையை - தேவையை உலகுக்கு நன்கு பறை சாற்றும்.

குறள் தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டம் போல் விளங்குவதால் அதன் சிறப்பும் சீர்மையும் சொல்லுக்குள் அடங்காதன. 'சொல்வலை வேடுவராம்' குறட்கோமானின் மன்பதையைப் பற்றிய எண்ணங்கள்,

> "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே!
> பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!"
> (திருவெம்பாவை, 9)

என மணிவாசகர் கூறுமாப் போலே விளங்குதல் ஒரு தலை. ஒரு படைப்பு அதன் படைப்பாளியின் புலமை வீச்சைக் காட்டும். அப்படி அமையும் படைப்புப் படைப்புப் படைப்பிற்காக என்னும் அடிப்படையில் அடங்கிவிடும். இதனைத் திறனாய்வாளர்கள்

செவ்விலக்கியம் (Pure Literature) என்பர். அப்படி அல்லாமல் ஒரு படைப்பு அது படைக்கப்பட்ட சமுதாயத்திற்குப் பயன் நல்கும் வண்ணம் அமையுமானால் அதனைப் 'படைப்பு சமுதாயத்திற் காகவே' என்பர். அப்படைப்பால் சமுதாயம் பயன்பெறுகிறது. இப்படி அமையும் இலக்கியத்தைக் கருவி இலக்கியம் (Applied Literature) என்று கூறுவர். 'இலக்கியம் இலக்கியத்திற்காக', 'இலக்கியம் வாழ்க்கைக்காக' என்று இதனைத் திறனாய்வாளர்கள் வகுத்துரைப்பர். திருக்குறள் வாழ்க்கைக்காக எழுந்த நூல் என்பதில் நமக்கு எவ்வகையான ஐயப்பாடும் இல்லை. "திருக்குறள் தனிமனித வாழ்வு, மன்பதை வாழ்வு, நாட்டு வாழ்வு, ஞால வாழ்வு, அனைத்தும் முழுதுறத் தழுவிய வாழ்வியல் நூல். அது கற்பனைப் பனுவலன்று; வறட்டுக் கொள்கை பேசும் நூலன்று; எந்நிலைய வாழ்வுக்கும் வழிகாட்டும் முதனூல்; வினையின் நீங்கி விளங்கிய அறிவன் கண்ட தலைநூல்; அந்நூலை நடைமுறைக் கண்ணோடு பார்க்கவேண்டும்" (திருக்குறட் சுடர், வ.சுப. மாணிக்கம், ப.1). மக்கள் வாழ்வை மலரச்செய்யும் தலையாய குறிக்கோள்களை உடைய திருக்குறளைப் பற்றி இன்றைய சூழலில் எண்ணுவது தகுதியான ஒன்றுமட்டுமன்று; தேவையான ஒன்றும் ஆகும். குறளாசான் குறிப்பிட்டுச் செல்லும் சமுதாயத்தை அறிந்துகொள்ள வேண்டுமானால், அக்காலத்தில் நிலவிய இலக்கியச் சூழலை, சமுதாயச் சூழலை அறிந்துகொள்ள வேண்டியது நம் கடமையாகும்.

## காலச் சூழல்

"இலக்கிய வரலாற்றை நோக்கும்போது இலக்கியமானது சூழ்நிலைக்கும் மனித உணர்வுகளுக்கும் இடையிலான உறவு வெளிப்பாடுகளைக் காட்டி நிற்பதோடு, மனிதனை ஏனைய மனிதருடன் இணைய வைக்கும் தொழில், அரசு, சமயம், கொண்டாட்டம், விழா, போர் போன்ற பல சமுதாய நடவடிக்கை களுக்கும் ஓர் அர்த்தத்தையும் அமைப்பினையும் அளிப்பதை அவதானிக்கலாம். 'ஒழுங்கான குடிமைச் சமுதாயத்தின் தாபகர்கள் கவிஞர்கள்' என்று ஆங்கிலக்கவி ஷெல்லி கூறியதும் இங்கு நோக்கத் தக்கது.

ஒரு காலத்தின் அரசியற் பொருளாதாரச் சூழ்நிலைகளும் சமூக இலட்சியங்களும் சான்றோர்களுக்கும் சாதாரண மக்களுக்கும்

இடைப்பட்ட நோக்கு வேறுபாடுகளும் விழுமியங்களும் இலக்கியத்தின் உள்ளடக்கத்தையும் உருவத்தையும் நிர்ணயிப்பன வாகும்" என்று இலக்கியமும் சமுதாயமும் என்ற நூலுள் (பக்.6-7) பேராசிரியர் தில்லைநாதன் கூறுவது இங்கே ஒப்பிட்டுக் காண்பதற்கு உரியதாகும்.

சமுதாய வாழ்வியலை ஒட்டியே அனுபவங்கள் தோன்றும். அவ்வனுபவ வெளியீடுகளாகிய இலக்கியம் கூறும் பொருளும் பா வடிவமும் மாறுபடுவதற்குப் பல சூழ்நிலைகள் காரணங்கள் ஆகின்றன.

காலத்திற் கேற்ற வகைகள் - அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் - எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை"
(பாரதியார் கவிதைகள்)

என்று இருபதின் எழுச்சிப் பாவலர் பாரதியார் மிகுந்த அழுத்தம் தந்து பேசுவது நம் நினைவில் நிழலாடுகிறது. திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தின் அரசியல் சூழலும் சமுதாயச் சூழலும் சீர்கெட்டு உருக்குலைந்திருந்தன. இவற்றைச் சீர்செய்ய வேண்டிய தலையாய பொறுப்புத் திருவள்ளுவருக்கு இருந்தது. அறநூல்களின் தேவை மிகுதியும் இக்காலகட்டத்தில் சமுதாய ஆர்வலர்களால் - புலவர்களால் உணரப்பட்டிருந்தது. "சங்கம் மருவிய காலத்திற் களப்பிரராகிய அன்னியர் தமிழ்நாட்டைக் காப்பாற்றியாண்டு கொடுங்கோன்மை செய்ய, அவர்கள் காலத்திலே தமிழ்ச் சமுதாயம் சீர்கேடடைந்ததால் தமிழ் மக்கள் வாழ்க்கையை உயரச் செய்வதற்காகவே திருக்குறள் முதலிய அறநூல்கள் தோன்றின என்று ஒரு சாரார் கருதுவர். இக்கருத்து ஓரளவு ஏற்கக் கூடியது. நாட்டில் வெளிநாட்டார் படையெடுப்பு நிகழ்ந்த காரணத்தால் அமைதி யின்மை முதலியன நிலவும்போது மக்கள் ஒழுக்கம் குறைவதியியல்பு. அக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கமாக ஒழுக்கத்தை வலியுறுத்தும் நூல்கள் தோன்றுவது எதிர்பார்க்கக் கூடியதே. அன்னியரான களப்பிரரின் வாழ்க்கை முறையும் தமிழர் வாழ்க்கை முறையுங் கலந்தபோது, சிறந்த ஒழுக்கம் எது என்பது பற்றி மக்களிடையே மயக்கம் ஏற்படுவதும் இயல்பானதே...

சங்ககால வாழ்க்கை முறையிற் காணப்பட்ட குறைபாடுகளால் மனம் நொந்த மக்களுக்கு வேறுவாழ்க்கை முறை தேவைப்பட்டது. பொறியாலும் புலனாலும் கவர்ச்சியுற்றுக் காதல் வாழ்க்கை வாழ்ந்து அவ்வாழ்க்கைகளிலே துன்பத்தைக் கண்ட தமிழ் மக்கள் கட்டுப்பாடுகள் நிறைந்த வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் அவாவினர். சமண, பௌத்தக் கொள்கைகள் செல்வாக்குப் பெற்ற நிலை இவ்வாறுதான் ஏற்பட்டிருத்தல் வேண்டும்" (தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பக்.39-40) என்று பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை கருதுவது இவண் எண்ணிப் பார்க்கத்தகும்.

கால வெள்ளத்தில் சமுதாயத்தில் ஏற்படுகின்ற சூழல் மாற்றங்கள் இலக்கியங்களிலும் படைப்பாளிகளால் பதிவு செய்யப்படும். அத்தகைய பதிவின் வெளிப்பாடே திருக்குறள். மன்னராட்சி நிலவிய நாளில் எழுந்த திருக்குறள் குடியாட்சி முறை கோலோச்சி வரும் இருபத்தோராம் நூற்றாண்டிற்கும் பொருந்தி வருவது அந்நூலின் இளமைத் தன்மையை நமக்குப் புலப்படுத்தும்.

## அரசியல் சூழல்

மன்னராட்சியின் மாண்புகளை மதித்துப் போற்றியவர்தாம் திருவள்ளுவர். வேதம் ஓதும் பார்ப்பனரும் அவர்தம் வேள்வி நெறியும் சங்ககால இறுதியில் தமிழ் மன்னர்களிடம் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தமையினைப் புறம். 15-ஆம் பாடல் வழி நாம் உணரமுடிகிறது. பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் பார்ப்பனர்களைப் போற்றும் யாகங்கள் பலவற்றைச் செய்தான். இதனால் அவன் பல் யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்ற பெயரைப் பெற்றுச் சிறந்தான். 'பார்ப்பார்க்கு அன்றிப் பணிவு அறியலையே' என்று சேர மன்னர்கள் பாராட்டப்பெற்றமை கண்கூடு. "அன்றாடம் மன்னன் வைகறையிலே எழுந்து மூன்று வேதங்களையும், அறநூல்களையும் ஆய்ந்து உணர்ந்த பிராமணர்களை வரவேற்று, அவர்தம் கருத்துப்படி ஆணை செலுத்தி வரவேண்டியது" என்று மநுதர்மம் (அத்தியாயம், 7-37) கூறுவது இங்கே ஒப்பிட்டு நோக்கத்தக்கது. வேள்வி செய்யும் முறை ஆரியர் முறையாகும். குதிரையைக் கொன்று வேள்வி வேட்கும் முறையை இருக்கு வேதம் (முதல் மண்டலம், 162-ஆம் பக்கம்) விரிவாகவே பேசுகிறது. சங்ககால இறுதிக் கட்டத்தில் வாழ்ந்த தமிழக

வேந்தர்களும் வேளிர்களும் வேள்வி செய்யத் தலைப்பட்டனர். இதனால் வேள்வியைச் செய்யும் உரிமையுடைய பார்ப்பனர்கள் மன்னரிடமும் மக்களிடமும் தலைமையிடம் பெற்றுயர்ந்த நிலையைப் புறப்பாடல்கள் (15, 26, 40, 122) பல தெரிவிக்கின்றன. வேள்வி நெறி தமிழர் நெறியன்று என்பதனை உணர்த்த வேண்டிய கட்டாயச் சூழ்நிலை திருவள்ளுவருக்கு ஏற்பட்டது. இதன் வெளிப்பாடுதான்,

> "அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத் துண்ணாமை நன்று" (குறள். 259)

என்னும் குறளாகும்.

"வட இந்தியாவில் வேத எதிர்ப்புச் சமயமான சைனத்திற்கும் வேத சமயமான ஆரியச் சமயத்திற்கும் இடையே கொள்கைப் போரும், அரசியல் போர்களும் நிகழ்ந்தமை போலத் தென்புலத்திலும் போர்கள் நிகழ்ந்தன என்று ஊகிக்க வேண்டியுள்ளது. இதனைக் களப்பிரர் வரலாறு மெய்ப்பிக்கிறது" என்று க.ப. அறவாணன் (தமிழ் இலக்கியச் சமூகவியல், ப.98) கூறுவதற்கு வேள்விக்குடிச் செப்பேடு அடிப்படையாக அமைகின்றது இவண் நினையத்தகும். வேள்வி முறை தமிழ்ச் சமுதாயத்திற்கு உரியது அன்று என்பது இதனால் பெறப்படும்.

சாதி எதிர்ப்பையும் சமணர்கள் மேற்கொண்டனர். அது சமணர்களின் தலையாய கோட்பாடாக விளங்கிற்று.

> "பறையன் மகன் எனினும் காட்சி உடையான்
> இறை என்று உணரற் பாற்று" (அருங்கலச் செப்பு, 37)

என்னும் சமணச் சமயநூல் அருங்கலச் செப்புக் கூறுவது கொண்டு உணர ஒண்ணும். இது சமணச் சமயக் கோட்பாடுதான் எனினும் சமுதாய நலனை மையமாக வைத்து எழுந்த கோட்பாடு என்பதனால் திருவள்ளுவர்.

> "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்" (குறள். 972)

என்று கூறிச் சாதிப் பிரிவுகளுக்கு எதிர்ப்புக்குரல் கொடுத்துப் பதிவு செய்துள்ளார். சாதிப்பிரிவுகள் அற்ற தமிழ்ச் சமுதாய அமைப்பைத் திருவள்ளுவர் நிலைநாட்ட எண்ணியமை இதனால் பெறப்படும்.

## திருவள்ளுவர் குறிப்பிடும் தெய்வங்கள்

திருவள்ளுவர் குறிப்பிட்ட சமயக் கடவுளின் பெயரை எங்கும் குறிப்பிட்டுப் பேசவில்லை. அதன் பொதுமைத் தன்மை இதனால் நன்கு புலப்படும். அணங்கு, அலகை, இந்திரன், இமையோர், காமன், கூற்று, செய்யவள், தவ்வை, தாமரைக் கண்ணான், தாமரையினாள், புத்தேளிர், வானவர், தேவர், விசும்புளான் என வரும் சொற்களால் திருவள்ளுவர் குறிப்பிட்டுப் பேசுவது அவர்தம் பொதுமை உணர்வைப் பறைசாற்றும். கடவுள் உண்டு என்பதனைத் திருக்குறள் ஒத்துக்கொள்கிறது. புத்தமதக் கோட்பாட்டை முழுதும் வலியுறுத்திப் பேசுகின்ற மணிமேகலை போலத் திருக்குறள் குறிப்பிட்ட ஒரு சமயக் கோட்பாட்டை வலியுறுத்திக் கூறவில்லை என்பது தெளிவு. எச்சமயத்தையும் சாராத தனித்தன்மை திருக்குறளின் பெருமைக்கு ஒரு சிறந்த காரணம் ஆகும். உலகியற்றியான் (106), தாமரைக் கண்ணான் (1103), அடியளந்தான் (610) என்று அன், ஆன் ஆண்பால் விகுதிகள் வருமாறும், செய்யவள் (167), நல்லாள் (1010), திரு (179), தாமரையினாள் (617) என்று பெண் தெய்வங்களையும் பொதுமைப்படவே திருவள்ளுவர் கூறுவது இவண் எண்ணத்தகும். ஆயினும் மனிதனையே தெய்வநிலைக்கு உயர்த்தும் பாங்கிற்குத் திருவள்ளுவர் அழுத்தம் தந்து பேசுவதனைப் பின்வரும் குறட்பா தெளிவுறுத்துகின்றது.

> *"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
> *தெய்வத்துள் வைக்கப் படும்"* (குறள். 50)

பல குறட்பாக்களில் தெய்வங்களின் திருவடியை மட்டுமே அவர் சுட்டுவதால் திருவள்ளுவருக்கிருந்த இறை நம்பிக்கை நன்கு புலப்படும்.

திருவள்ளுவர் வாழ்ந்த சமுதாயத்தில் நிலவிய கடவுட் கொள்கையை மேற்கண்ட செய்திகளால் நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. "ஒரு பண்பட்ட - உயர்ந்த - வாழ்வியலைக் கட்டியமைத்துக் காட்டும் முயற்சியாகக் குறள் அமைந்துள்ளது.

தனிமனித நிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர்கள் நிலை, நாட்டுக்குடி மக்கள் நிலை ஆகிய தளங்களில் ஒருவர் பேணிக்கொள்ள வேண்டிய பண்புகள், ஆற்றவேண்டிய கடமைகள், பெறவேண்டிய அனுபவங்கள் ஆகிய பல்வேறு கூறுகளையும் ஒருங்குதிரட்டி ஒழுங்கமைத்துள்ளதன் மூலம் ஒரு முழுமையான வாழ்வியலை அது முன்வைத்துள்ளது" என்று கலாநிதி நா.சுப்பிரமணியம் (இந்தியச் சிந்தனை மரபு, ப.56) கூறுவார். திருக்குறள் காட்டும் சமுதாயம் அறவுணர்வுக்கு முதன்மை தந்து போற்றிய பண்பட்ட சமுதாயம் எனலாம்.

## உண்மை இன்பம்

அறம் செய்வதற்குத் தயக்கம் கூடாது. அறம் செய்யக் காலம் தாழ்த்துவதும் தகாது. அதனைப் பின்பு செய்வோம் என்று தள்ளிப் போடுவதும் கூடாது. திருக்குறள் போற்றிய சமுதாயத்தில் அறம் என்பது தனிமனித நிலையில்,

> "*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
> *ஆகுல நீர பிற*" (குறள், 34)

எனச் சுட்டப்பட்டது. குறள்கூறும் தனிமனித அறம் மனத்தூய்மை என்பது பெறப்படும். ஒருவனும் ஒருத்தியுமாக இணைந்து வாழும் இல்லற வாழ்வில்,

> "*அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
> *பிறன்பழிப்பது இல்லாயின் நன்று*" (குறள், 49)

என்று கூறிக் குடும்ப அறம் பற்றித் திருக்குறள் பேசும். இன்றைய இருபதாம் நூற்றாண்டில் - கருவிகளின் பெருக்கமும், சூழ்நிலை நெருக்கடிகளும் மனித மனத்தைச் சோர்வடையச் செய்துவிடக் காண்கின்றோம். மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் தரும் அல்லவா? இன்று தனி மனிதனின் மனநலம் தூசுபடிந்து கிடக்கிறது. இதற்கு ஒரு சான்று காண்போம்.

> "*கறுப்பு வளையல்*
> *கையுடன் ஒருத்தி*
> *குனிந்து*

வளைந்து
பெருக்கிப் போனாள்
வாசல் சுத்தமாச்சு
மனம் குப்பையாச்சு" (கல்யாண்ஜி)

என்ற புதுக்கவிதை இன்றைய தனிமனிதனின் மனநிலையை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது. திருவள்ளுவர் காட்டிய சமுதாயத்தில்,

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு" (குறள், 148)

என்பதால் தனிமனித ஒழுங்கு பேணப்பட்டு வந்தமை பெறப்படும். தனிமனித மனநலத்தின் நீட்சியே மன்பதையின் மனநலமாக வளர்ந்து செழிக்கின்றது. இன்று நட்பிலே கூட நச்சுத் தன்மை புகுந்து நம் சமுதாயத்தை நலிவடையச் செய்துவிட்டது. 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்!' என்று அடிமை இந்திய மனிதரைப் பார்த்துப் பாரதியார் கொதித்துக் கூறுவது போல நாமும் மனம் நொந்து இவர்களைப் பார்த்துப் பேசத் தோன்றுகின்றது. இன்றைய பரபரப்பான உலகில் ஏதோ வாழ்கிறோம் என்ற இயந்திரத் தன்மை கொண்ட வாழ்க்கையையே நாம் வாழ்ந்து வருகின்றோம். அன்பின் அடித்தளத்திலே உருவாகும் நட்பு இன்று கேலிப் பொருளாக - பகட்டுக்காக - பொழுதுபோக்குக்காக என்று மாறிப்போயிற்று என்பது,

"உயிருக்கு உயிராய்க்
கூடிக் குலவும்
நண்பர்கள் இருவர்
உயர்பதவிக்கு மனுப்போட்டனர்
ஒருவருக் கொருவர்
சொல்லிக் கொள்ளாமல் -
சொல்லாமல் செய்வர் பெரியர்"
(இரா.மோகன், சின்னச்சின்ன இழைகள், ப.97)

என்னும் புதுக்கவிதைப் பதிவின் வழி வெளிப்படுகிறது. அன்று 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகச் சமுதாயத்தில் பலர்

வாழ்ந்தனர். ஆனால் பிறர்நலம் - பொதுநலம் பேணும் தன்மை அருகிவரும் இருபத்தோராம் நூற்றாண்டில் குறள் கூறிய சமுதாயச் சிந்தனைகள் மன்பதையில் பரவ வேண்டியது எவ்வளவு இன்றியமையாதது என்பது இன்றைய புதுக்கவிதைகளின் கருத்துக்களிலிருந்து நமக்குப் புலனாகின்றது. அறமே வாழ்க்கைக்கு வேண்டிய நலன்களையும் சிறப்புகளையும் தரும் என்ற நம்பிக்கை திருவள்ளுவர் காலத்து மன்பதையில் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

> *"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு*
> *ஆக்கம் எவனோ உயிர்க்கு"* (குறள், 31)

> *"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
> *செல்லும்வாய் எல்லாம் செயல்"* (குறள், 33)

என்று திருவள்ளவர் தனிமனித அறம் கூறிச் சமுதாய அறம் தழைத்துச் செழிக்க வழி கோலினார்.

## வள்ளுவரின் ஞாலப்பார்வை

தனி மனிதன் மனைவி, மக்கள், உற்றார், உறவினர், சுற்றம் சூழக்கூடி வாழ்வது குடும்பம், பல குடும்பங்கள் இணைந்து வாழ்வது சமுதாயம். குடும்பமாதல் உயிரின் இயல்பு. இல்லறம், துறவறம் பற்றி வள்ளுவப் பேராசான் விரிவாகப் பேசியுள்ளார். அறத்துப்பாலில் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை, மக்கட்பேறு என அவர் கூறுவன அன்பென்னும் நிலைக்களனில் உருவானவை "இல்லறமும் துறவறமும் முரணுடை ஒழுக்கங்கள் அல்ல. அடிமரமும் பரந்த பெருங்கிளையும் போன்றன. அன்பும் அருளும் சான்றன. அன்பு நீங்கியது அருளன்று; அன்பின் பரப்பே அருளாவது. ஒரு குடும்பம் விடுவது துறவன்று; உலகம் முழுவதையும் தன் குடும்பமாக அணைப்பதுவே துறவாகும்" என்று அறிஞர் வ.சுப.மாணிக்கம் (வள்ளுவம், ப.199) குறிப்பிடுவார்.

> *"தூய உள்ளம் அன்புள்ளம் பெரியஉள்ளம்*
> *தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும்*
> *தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் அங்கே*
> *சண்டையில்லை தன்னலம்தான் தீர்ந்ததாலே"*

என்னும் பாவேந்தரின் உலக ஒற்றுமை கூறும் கருத்திற்கு மூலவேர் திருக்குறள் என்று துணியலாம் (பாரதிதாசன் கவிதைகள் 1, ப.131) "இல்லறம் இயல்பு நெறி என்றாலும் விலங்கு நெறியன்று; செய்தற்கு எளிய நெறியும் அன்று" என்று விதந்து கூறும் வ.சுப.மாணிக்கம் தக்க நடைமுறை உவமைகளைக் காட்டி மேலும் விளக்குவார். "ரூபாய் பத்து நம்பால் ஒருவர் வேண்டும்போது, என்னிடம் ரூபாய் நறுவிதாய் இல்லை. யானும் யாரிடமாவது பற்றுக்கேட்க நினைத்திருக்கிறேன் என்று சொல்லிவிடல் எளிது. இப்படித்தான் பலர் தம் நெஞ்சறியப் பொய்பறைப" (வள்ளுவம், ப.199) என்பார். "நண்பர்களே இன்றைய மனிதனின் வாழ்க்கையை இரண்டே இரண்டு சொற்களிலே அடக்கி விடலாம். மனித வாழ்வின் முதல் பாதி 'Tention', அடுத்த பாதி 'Pension'. இந்த 'Pension'-ஐ வாங்குவதற்குள்ளாக மனிதன் இன்று படுகிற 'Tension' இருக்கிறதே அது ஒரு தனிக் கதை என்று என் நண்பர் இரா..மோகன் கூறுவார் ('விரல்கள் பத்தும் மூலதனம்' ப.41).

இன்று உலகெங்கும் பரபரப்பு. 'வேகம் கெடுத்தாண்ட விரகன்' என்று அருளாளர்கள் சிவபெருமானைக் கூறுவர். இன்றைய மனிதனையோ வேகம் கொடுத்து மாண்ட மனிதன் எனலாம் போல் தோன்றுகிறது. எதிலும் முந்திச் செல்லவேண்டும்; எதையும் விரைவாகப் பெறவேண்டும் என்ற எண்ணமே இன்று எல்லோரிடமும் பரவிக்கிடக்கிறது; அவ்வுணர்வு எல்லோரையும் பாடாய்ப் படுத்துகிறது. இதனைக் கருதியே குருஞானசம்பந்தர்,

*"பரபரக்க வேண்டா பலகாலுஞ் சொன்னேன்*
*வரவரக் கண்டாராய் மனமே - ஒருவருக்கும்*
*தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றாதே*
*ஏங்கி இளையா திரு"* (சிவபோகசாரம், 132)

என்று வலியுறுத்துவார். "பதறாத காரியம் சிதறாது" என்பது பழமொழி. ஏனென்றால் 'செய்வன திருந்தச் செய்ய' வேண்டும் என்பதனைக் கருதியே. அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்கும் வேடிக்கைகள் இன்று சமுதாயத்தில் நிகழக் காண்கிறோம். இதனை எண்ணியே குறட்கோமான்,

*"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்ப திழுக்கு"* (குறள், 467)

"எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று" (குறள், 655)

என்று தீர எண்ணிப்பின் செய்யும் செயல் துணிவுக்குக் கால்கோள் செய்தார். இன்று அமைதி கெட்டுப்போய் தனிமனிதனையும் துன்புறுத்துகிறது. சமுதாயத்தையும் ஒட்டுமொத்தமாக அச்சுறுத்துகிறது. சமுதாயச் சீர்கேடுகளுக்கும் சீர்குலைவுகளுக்கும் என்ன காரணம்? ஒருமை மனப்பான்மை இல்லாமையேதான். எடுத்தேன் கவிழ்த்தேன் என்பது போன்ற மனநிலை மன்பதையை ஆட்டிப் படைக்கின்றது. ஆரவாரம் மிகுந்து அமைதியான சூழல் குறைந்து வருவதனை எண்ணும்போது நம் இலக்கிய உள்ளம் துன்பத்தில் துவண்டுபோய்த் தத்தளித்துத் தடுமாறுகிறது. ஒற்றுமை மாநாட்டிற்கு யார் தலைமை ஏற்பது என்பது பற்றி உறுப்பினர் களுக்குள் அடிதடி என்பதே இன்றைய சமுதாய மனப்பான்மை.

ஒரு பெரிய மகான். அவருக்குச் சீடர்கள் பலர் இருந்தனர். நாடோறும் அவரிடம் அருள்வாக்குப் பெறுவதற்காக இறையன்பர்கள் பலர் வருவார்கள். இதனைக் கண்ட சீடர்களுள் சிலருக்கு ஓர் ஐயம் எழுந்தது. 'நம் குருவிடம் அப்படி என்ன பெருஞ்சிறப்பு இருக்கிறது? என்று சீடர்கள் தங்களுக்குள் முனங்கிக் கொண்டிருந்தார்கள். காரணம் ஏதும் அவர்களுக்குப் புலப்பட வில்லை. அச்சீடர்கள் எல்லோரும் குருவிடமே நேரிற் சென்று பணிந்து, 'குருவே! உங்களுடைய தனிச்சிறப்பு என்ன? உங்களை மட்டும் ஏன் இறையன்பர்கள் மதித்துப் பணிந்து வணங்கிச் செல்கின்றனர்' என்று கேட்டார்கள். குருவோ, அமைதி தவழச் சொன்னார் நான் உண்ணும்போது உண்ணுகின்றேன்! உறங்கும்போது உறங்குகின்றேன்!' என்றார். இதனைக் கேட்ட சீடர்களுக்குப் பெரும் குழப்பம் ஏற்பட்டது. ஒரு சீடன் துணிந்து, 'குருவே! நாங்களும் அப்படித்தானே செய்து வருகிறோம்' என்றான்.

குரு உடனே அவர்களிடம், 'ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். உணவு உண்ணும் போது உங்களுக்கு எத்தனை எத்தனைக் கவலைகள்! எத்தனை எத்தனை நினைவுகள்! உங்களில் எத்தனைப் பேர் படுத்த உடன் அமைதியாகத் தூங்குகிறீர்கள்? எந்த நேரத்தில் எந்தப் பணியைச் செய்தாலும், அந்தப் பணியிலேயே மனம் ஒன்றி, அதனைக் கலையுணர்வுடனும் ஈடுபாட்டுணர்வுடனும் செய்து அதுவாகவே வாழ்வதுதான் சிறந்த வாழ்க்கை' என்றார்.

இப்போது சீடர்கள் சிந்திக்கத் தொடங்கினராம். இன்றுள்ள மனிதன் புறச்சூழ்நிலைகளை எண்ணியே மன இறுக்கத்திற்கு ஆளாகின்றான். அதுபோல் ஒருமையுடன் சிந்தித்துச் செயலாற்றுவது தான் சிறந்த வாழ்க்கை. இதுவே குறள் கூறும் சிறந்த சமுதாய வாழ்வியலாகும்.

> *"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்*
> *உயிர்க்கிறுதி யாகி விடும்"* (குறள், 476)

என்றுதாம் கண்ட காட்சியை வலியறிதல் அதிகாரத்துள் சொல்லி நமக்குத் திருவள்ளுவர் அறிவுறுத்துவார். மேலும் அவர்,

> *"நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த*
> *தன்மையான் ஆளப் படும்"* (குறள், 511)

என்று தெளிவுறுத்துவார். இல்வாழ்க்கை என்பது இயல்புதான். இருப்பினும் இல்லறத்தைச் சீராக நடத்தும் போதுதான் எவ்வளவு கடினமான ஒன்று என்பது நமக்குப் புலப்படும். ஒருவன் தன்னுடைய நண்பனிடத்திலே கூறினான் 'நான் என் மனைவியிடம் இப்பொழுது நடைபெறும் நாடகம் மிக நன்றாக உள்ளதாம் என்றேன். அதற்கு என் மனைவி, 'நேற்றுத் திரையிடப்பட்ட திரைப்படம் குடும்பப் பாங்கான படமாம்' என்று சொல்கிறார்கள். இதனைக் கேட்ட அவன் நண்பன், "சரி! திரைப்படம் எப்படி இருந்தது?" என்று கேட்டானாம். இது இன்றையக் குடும்பங்களின் நிலை. 'நல்ல மனைவி நல்ல குடும்பம் தெய்வீகம்' என்பார் கவியரசர் கண்ணதாசன். 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்று பாவேந்தர் கூறியுள்ளார்.

> *"இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை*
> *இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்*
> *வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்*
> *புலிகிடந்த தூறாய் விடும்"* (மூதுரை, 21)

நம் வீடு புலிவாழும் குகையாக இருக்கக் கூடாதன்றோ!

> *"குடும்ப விளக்கு எரியவில்லை*
> *குடும்ப விளக்கே எரிகிறது*
> *வர(ர) தட்சணை"* (தீயின் காதல், ப.6)

என்பது இன்றைய நடப்பாகும்.

'வீட்டைவிட வேம்படி மேல்' என்று குடும்பத் தலைவர் ஒவ்வொருவரும் எண்ணுமாறு இருப்பது சிறப்பா? சங்கப் புலவர் பெருஞ்சித்திரனாரின் மனைவி போல் எத்துனைப் பேர் இருப்பார்கள்! எண்ணிப் பாருங்கள்!

இன்பத்துறையில் எளியராய் விளங்கிய திருநீலகண்டர் வாழ்வில் வெளியுலகத்திற்குக் கணவன் மனைவியாக வாழ்ந்தமை பற்றிப் பெரியபுராணம் விரித்துப் பேசும். இளையான்குடி மாறநாயனாரின் மனைவி போல் இருப்பின் குடும்பவாழ்வில் இன்பம் கோலோச்சுமன்றோ! இல்லற வாழ்வில் இனிமை தவழப் பொருள் தேவையான ஒன்று.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்" (குறள், 751)

என்ற திருவள்ளுவரின் பொருள் பற்றிய சிந்தனை சமுதாய உறவு நன்கு தழைக்க வழிவகுக்கின்றது.

"அறவழியில் இல்வாழ்க்கை நடத்திப் பெறமுடியாத ஒன்றையும் துறவறத்திற் சென்று பெற்றுவிட முடியாது என்ற வள்ளுவரின் துணிகரமான கருத்து இந்தியச் சிந்தனையின் பழைய வரலாற்றில் ஒரு புதுமை" என்று ஆல்பெர்ட் சுவைட்சர் (Indian Thoughts and its Development, p.200) கூறி வியக்கின்றார்.

திருமணம் முடிந்து கணவன் மனைவியாக வாழும் இல்லற வாழ்வில் குழந்தைப்பேறு வாய்த்தல் வேண்டும். மழலை இன்பம் மனித இனத்தின் தொடர் கதையல்லவா? குழந்தை பெறவில்லை என்றால் இவ்வுலகம் பெண்ணை 'மலடி' என்ற கொடுஞ்சொற் கொண்டு பழிப்பதைப் பார்க்கிறோம்.

குறட் சமுதாயத்தில் மழலைச் செல்வங்களின் தேவை உணரப்பட்டிருந்தது. ஆகவேதான் திருவள்ளுவர்,

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" (குறள், 66)

என்று கூறி இல்லற வாழ்வின் ஏற்றத்தை எடுத்துச் சொல்வார். அம்மழலைச் செல்வங்கள் துரியோதனன் மற்றும் அவன் தம்பி மார்களைப் போல் வந்து தோன்றிவிட்டால் என் செய்வது? இதனை

யுணர்ந்த வள்ளுவப் பெருந்தகை மழலை இன்பத்தின் சிறப்பை உணர்த்த மக்கட்பேறு என்று ஓர் அதிகாரமே படைத்து மகிழ்ந்தார். அவர் தம்மையும் உளப்படுத்திக் கூறிய இடங்கள் திருக்குறளில் மூன்று என்பர். அதில் ஒன்றுதான்

> *"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த*
> *மக்கட்பேறு அல்ல பிற"* (குறள், 61)

என்னும் குறளாகும். குறட் சமுதாயம் அறிவார்ந்த சமுதாயமாக நீடு நிலைத்து வாழ வேண்டுமானால்,

> *"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
> *மன்னுயிர்க் கெல்லாம் இனிது"* (குறள், 68)

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் எண்ணம் செயலுக்கு வருதல் வேண்டும். தம் மக்கள் பண்புடையவர்களாக - அறிவுடையவர்களாக - அன்பு நிறைந்தவர்களாக வளரவேண்டும்! கற்றறிவு நிறைந்த மக்களினால் சமுதாயத்திற்குப் பெருமைதானே!

> *"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்*
> *உடைப்பெரும் செல்வ ராயினும் இடைப்படக்*
> *குறுகுறு நடந்து சிறுகை நீட்டி*
> *இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும்*
> *நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்*
> *மயக்குறு மக்களை இல்லோர்க்குப்*
> *பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே"* (புறம். 188)

என்று பாண்டியன் அறிவுடைநம்பி கூறுவது கொண்டும் மழலைச் செல்வத்தின் மதிப்பையும் மாண்பையும் நாம் உய்த்துணர ஒண்ணும். ஒரு சமுதாயத்தில் குடும்பவாழ்வு சிறந்திருக்குமானால் அந்த நாடும் சிறப்புற்று விளங்கும். நோய் நொடி இல்லாமல், மனக்கசப்புகள் இல்லாமல், பிற குடும்பங்களுடன் இணைந்தும் பிணைந்தும், உள்ளன்புடன் உறவாடியும் மன்பதையில் மக்கள் நல்வாழ்வு வாழ்வார்கள் எனில் அதுவே குறள் போற்றிய சமுதாயம் ஆகும்.

### வறுமையின்மை

உணவு, உறைவிடம், உடுத்த உடை இவை மூன்றும் மனித இனத்தின் இன்றியமையாத தேவைகள் ஆகும். இம்மூன்று

அடிப்படைகளில் குறைபாடு நிலவுமானால் அச்சமுதாயத்தில் ஒழுக்கம், பண்பாடு, இல்லற ஒழுங்கு, சமுதாய உறவும் சிதைவுறும்! இதனை எண்ணியே,

*"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்"* *(குறள், 996)*

*"உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க*
*பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு"* *(குறள், 992)*

என்னும் குறட்பாக்களைக் குறள்வேந்தர் படைத்துள்ளார். 'பண்புடைமை' என்று ஓர் அதிகாரம் அவர் படைத்தமையின் நோக்கமே ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குவதற்காகவே எனலாம். இத்தகைய பண்பட்ட சமுதாயத்தில் பசி, வறுமை, கொலை, கொள்ளை, ஒழுக்கம்கெடல் போன்றவை நிகழா. 'பசிவந்திடப் பத்தும் பறந்து போம்' என்பது பழமொழி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நம் இராமலிங்க வள்ளலார் பயிர்கள் வாடுவதைக் கண்டு வாடியதோடு நின்று விடவில்லை! 'பசியறாது வீடுதோறும் இரந்த வெற்றரைக் கண்டு உளம் பதைத்தார்'. பசியின் கொடுமையும் வறுமையும் மனித சமுதாயத்தை அலைக்கழித்து அல்லற்படுத்தும் நோய்கள் ஆகும். இவற்றை எண்ணி வருந்திய ஔவைப் பெருமாட்டியார்,

*"இன்னா இளமை வறுமைவந்து எய்திக்கால்*
*இன்னா .......... .......... ..........."* *(மூதுரை, 3)*

என்று ஒருவனுடைய இளமைப்பருவத்தில் வந்து துன்புறுத்தும் வறுமை பற்றிக் கூறுவார். அவரே இன்னும் ஒரு படிமேலே சென்று,

*"ஒருநாள் உணவைஒழி என்றால் ஒழியாய்*
*இருநாளுக்கு ஏல்என்றால் ஏலாய் - ஒருநாளும்*
*என்நோவு அறியாய் இடும்பைகூர் என்வயிறே*
*உன்னோடு வாழ்தல் அரிது"* *(நல்வழி, 11)*

என்று பசியின் கொடுமையைப் பாட்டிலே சுட்டிக்காட்டுவார். பசியின் கொடுமை சமுதாயத்தில் இருந்து அகலவேண்டும் என்பதே திருவள்ளுவரின் பெருவிருப்பம் ஆகும். அவ்விருப்பத்தின்

விளைவில் முளைத்த குறள்தான் இறைவனையும் சொற்களால் சாடும் குறள். அது இதோ:

*"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்" (குறள், 1052)*

நம் சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் உணவு கிடைக்கவேண்டும் என்று எண்ணிய திருவள்ளுவரின் மனவளம் மனிதவள மேம்பாட்டின் அடித்தளமாய் அமைகிறது. வறுமையின் கொடுமையை இன்றைய புதுக்கவிதை,

*"தலையைச் சொறி!*
*நாக்கைக் கடி!*
*பல்லை இளி!*
*முதுகை வளை*
*கையைக் கட்டு*
*காலைச் சேர்*
*என்ன இது?*
*வயிற்றைக் கேள்*
*சொல்லு மது" (ஷண்முகசுப்பையா கவிதைகள், ப.59)*

நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்றது. 'கொடிது கொடிது வறுமை கொடிது' அல்லவா! 'இல்லை என்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன்' என்று பாடிய பாரதியாரைப் போல்,

*"பசித்தவர் எழுச்சி பெறின்*
*பாறைகளும் உருகும் காணீர்*
*இரை இழுக்கும் எறும்புகள்" (காற்றின் கைகள், ப.60)*

என்னும் அமுதபாரதியின் புதுக்கவிதைக் குரல் நம் செவிகளில் விழுகின்றது. 'இளமையில் கல்' என்றார் ஔவையார் ஆத்திசூடியில். ஆனால் இன்று மழலைப் பள்ளியில் குழந்தையைச் சேர்க்கவோ கட்டுக்கட்டாய்ப் பணம் செலவழிக்க வேண்டியுள்ளது.

*"வயிற்றுப் பசியால்*
*இளமையில் கல் - தலையில்*
*முதியோர் பள்ளி" (சின்ன நதிகள், ப.73)*

ஆமாம்! கற்க மனம் இருந்தும் கல்சுமக்க யோகமுள்ளது இன்றைய இளஞ்சிறுவர்களுக்கு. இச்சூழ்நிலையில் எங்கே நம் சமுதாயம் வள்ளுவர் வழியில் முன்னேறப் போகிறது என்ற ஏக்கம் நம்மனத்தில் ஏற்படுவது இயல்புதானே! இந்த வாழ்வியல் முரண்பாடுகள் அடியோடு இல்லாமற் போதல் வேண்டும்.

கல்விக்கு மட்டுமோ இவ்வளவு இடர்ப்பாடு. இல்லை! இல்லை!! வேலைக்கும் அப்படித்தான் என்கிறது இப்புதுக்கவிதை:

*"இருபதாயிரம் கொடுத்தபின்தான்*
*வேலை கிடைத்தது எனக்கு*
*கையூட்டு ஒழிப்புத்துறையில்"* *(தீவின்தாகம், ப.39)*

## உயிரினும் மேல்

வறுமை, பசிக்கொடுமை இவை சமுதாயத்திலிருந்து நீங்கி விட்டால் அச்சமுதாய மக்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாய் விளங்குவர் என்பது திண்ணம். ஒழுக்கம் சிதைந்த சமுதாயம் அழிந்து போகும். அறம், பண்பாடு போன்ற நற்பண்புகளை அங்கே காண முடியாது. "உயிர் எல்லாப் பொருளையும்விடச் சிறந்ததே. ஆயினும் அந்த உயிருக்கும் சிறப்புத் தரவல்லதாக ஒழுக்கம் விளங்குகின்றது. ஆகையால் உயிரைவிட ஒழுக்கமே சிறந்ததாகக் கொண்டு காகக வேண்டும்" என்று அறிஞர் மு.வரதராசனார் (திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், ப.340) தெளிவுறுத்துவார். சமுதாயத்தில் ஒழுக்கம் எவ்வளவு பேணப்படவேண்டிய ஒன்று என்று ஆழ்ந்து எண்ணிய குறளாசான்,

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்"* *(குறள், 131)*

என ஒழுக்கமுடைமை அதிகார முதற்குறளில் முத்தாய்ப்பாக வைத்துக் கூறினார். தனி மனித ஒழுக்கம் குடும்ப ஒழுக்கமாக மலர்ந்து அவர்கள் வாழ்கின்ற சமுதாய ஒழுக்கமாகப் பெருவளர்ச்சியுறுகிறது. அடுத்த குடும்பத்தைக் கெடுத்தாவது அழித்தாவது தன் குடும்பம் பேணும் மடமை இன்று பெருகி வளர்ந்து விட்டது. நகர் மயமாகிய அடுக்ககங்களில் வாழ்வோர் எதிர் வீட்டுக் காரருடன் ஒரு பகைமை உணர்வோடே ஓர் எதிரியைப் பார்க்கின்ற

மனப்பாங்கு வேகமாக இன்று வளர்ந்து வருகின்றது. கூட்டுக் குடும்பநெறி சிதைந்து போனதன் விளைவு முதியோர் இல்லங்கள் வீதி தோறும் முளைத்துவிட்ட கொடுமை. போதாக்குறைக்கு இந்தப் பலமாடி அடுக்கக வாழ்வு மனிதநேயத்தை - மக்கள் உறவைச் சிதைத்துச் சீரழிக்கும் நச்சு வேலியாக வளர்வது நமக்குப் பெரும் மனத் துன்பத்தையே தருகிறது. இந்த அவலநிலை அகல வேண்டுமானால் திருக்குறள் சுட்டும்.

> "குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
> சுற்றமாச் சுற்றும் உலகு" (குறள், 1025)

என்னும் குடிக்கோட்பாடு சமுதாயத்தில் வேரூன்ற வேண்டும். சங்க இலக்கிய நரிவெரூஉத்தலையார் மொழிவது போல்,

> "நல்லது செய்தல் ஆற்றி ராயினும்
> அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
> எல்லாரும் உவப்ப தன்றியும்
> நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே" (புறம், 195)

என்னும் சமுதாய அறம் - ஒழுங்கு நிலவவேண்டும். குடும்ப வாழ்வு - ஞால வாழ்வின் நல்ல சூழலுக்கு அடிகோலும் என்பதனை இன்றைய மன்பதை எண்ணிச் செயலாற்ற வேண்டும். இன்றைய சமுதாயத்தில் எப்படிப் பொருள் சேர்க்கிறோம் என்பதனைப் பற்றி யாரும் கவலை கொள்வதில்லை. மனச்சாட்சியைத் தூக்கி எறிந்து விட்டு 'நாய் விற்ற காசு குரைக்கவா செய்யும்?' என்று தமக்குத்தாமே ஒரு சமாதானத்தைச் சொல்லிக்கொண்டு வாழ்வோர் பெருகி விட்டனர். "தீவினை விட்டு ஈட்டல் பொருள்" என்னும் ஔவையின் வாழ்வியல் நெறியைக் காற்றோடு காற்றாய்ப் பறக்கவிட்டு விட்டனர். இல்லறத்தாரின் கடமை பொருள் சேர்த்தல். இதனைத் திருக்குறளும் ஏற்றுக் கொள்கின்றது. ஆனால் அது பழியஞ்சிச் சேர்க்கப்பட்ட பொருளாக இருக்கவேண்டும். அப்படிப் பழிக்கு அஞ்சிப் பொருள் சேர்த்துப் பகிர்ந்துண்டு வாழவேண்டும் என்று பொதுமறை எதிர்பார்க்கிறது.

> "புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
> உலகுடன் பெறினும் கொள்ளலர்" (புறம், 182)

என்னும் சங்கச் சான்றோர் கூறிய வாழ்வியல் நெறிதான் குறள் கூறும் நெறியாகும். பகிர்ந்துண்டு வாழும் பண்பு அருகி வருவதால்தான் எங்கும் தீவிர வாதம், கிளர்ச்சி, இனப்போராட்டம் எனப் பல்வகையான இடையூறுகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. இளைதாக முள்மரம் கொல்ல வேண்டுமானால் குறளாசான் கூறும்,

*"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை*
*வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்" (குறள், 44)*

பகிர்ந்துண்டு வாழும் பண்பு மனிதனுக்கு எப்படி வரும்? இதற்கு வள்ளுவர் வழிசொல்கிறார். அவ்வழி இதோ: அளவற்ற அன்பு மக்களிடம் தோன்றுமானால் சமுதாய உறவு நல்ல முறையில் தழைக்கும் என்று நீள நினைந்த திருவள்ளுவர்,

*"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு" (குறள், 72)*

என்று வகுத்துரைப்பார். குறுகிய பொருட்பற்று இன்று குடும்பங்கள் தோறும் தலைவிரித்து ஆடுகிறது. இது படிப்படியாகச் சமுதாய உறவைத் துண்டித்துவிடும். இத்தகைய விளைவை உண்டாக்கும் தீமையை எண்ணிய வள்ளுவப் பேராசான் ஒப்புரவுக் கொள்கை பற்றி ஆழமாக வலியுறுத்தினார். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பது நமக்குத் தெரியும்!

*"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள், 212)*

என்று எண்ணும் மனப்பான்மை பரவுமாயின் குறளுக்குக் கிடைத்த வெற்றி இது என்று நாம் பெருமிதம் கொள்ளலாம். "கல்வி அறிவெல்லாம் உப்பு வீழ் பால் போலத் திரிந்து நிறப, நன்மக்களும் அழுக்குற்றுப் பொருள் வேட்டையாடக் கண்ட வள்ளுவர், 'அஃகியகன்ற அறிவு என்னாம்' (175) என்று கடிந்துரைப்பர்" என்பது வள்ளுவம் (வள்ளுவம், வ.சுப.மா ப.72) வாழ்க்கைச் செலவிற்கு நேர்வழியிற் பொருளீட்ட வேண்டும்; அது இயலும் என்பது வள்ளுவரின் துணிபு. இதனை எண்ணியே அவர்,

*"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*
*எஃகதனிற் கூரியது இல்" (குறள், 759)*

"அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" (குறள், 754)

வள்ளுவர் வகுத்துச் சென்ற சமுதாயத்தில் மனத்தூய்மை பெரிதும் போற்றப்பட்டு வந்துள்ளமையினை மறந்துவிடுதல் கூடாது. கல்வியாயினும், அறிவாயினும், பொருளாயினும், வினையாயினும் எங்கும் தூய்மையே வேண்டும் என்று வள்ளுவர் வாழ்வியல் அடிப்படையைக் கூறினார்.

"தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்" (குறள், 364)

"மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்" (குறள், 455)

வள்ளுவரின் எண்ணம் எங்கும் சமுதாயத் தூய்மையை வலியுறுத்துவதே!

மக்கள் மனத்தைப் பொறுத்தே நாட்டின் மேன்மை பலராலும் பேசப்படும். ஔவையார் தெளிவுறுத்துவது போல்,

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம், 187)

என மக்கள் விளங்குதல் வேண்டும். அப்போது சமுதாயம் மேம்படும்.

"எண்ணிய முடிதல்வேண்டும், நல்லவே எண்ணவேண்டும்" என்பது பாரதியாரின் கொள்கை 'செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை' (656), 'இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்' (654) எனவும் வள்ளுவர் கூறுவன இவண் எண்ணத்தகுவன. அண்ணல் காந்தியடிகள் 'எண்ணும் குறிக்கோள் தூய்மையுடையதாக இருத்தல் வேண்டும்; அதுபோன்று அந்தக் குறிக்கோளை அடையும் வழியும் தூய்மையானதாக இருக்கவேண்டும்' என்று வலியுறுத்தினார். வள்ளுவர் சொன்ன தூய்மை நெறியே அண்ணல் காந்தியடிகள் மொழிந்த வழியும் ஆகும்.

## விழிப்புடன் வினையாற்றுக

நினைவாலும், சொல்லாலும், செயலாலும் பொய்யான வாழ்வு வாழ்ந்து உலகை ஏமாற்றி வாழும் எத்தர்கள் பெருகி இந்தச் சமுதாயத்தை - சமுதாய அறத்தைச் சிதைக்கத் தலைப்பட்டு விட்டனர்! அதன் விளைவுதான் இளஞ்சிறார்களைக் கொன்று கால்வாயிலே புதைத்துக் களித்த நொய்டா நிகழ்ச்சிகள். புறக் கோலத்தில் புதுமை; அகக்கோலத்தில் கருமை; வஞ்சகம், வன்கண்மை, எங்கும் அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்த மனிதர்கள். சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தை நிதிநிறுவனத்தில் பெருவட்டிக்கு ஆசைப்பட்டு முதலீடு செய்தோர் தம் முதலை இழந்தவர்களும், விழுங்கி ஏப்பம் விட்டுத் தலைமறைவாய் வாழ்ந்துவரும் முதலைகள் - இப்படிப் பொய்யான வாழ்வு வாழ்வார் சமுதாயதிற்குக் கேடு சூழ்பவர்கள் மட்டுமல்லர்; அவர்கள் சமுதாயத்திற்கு நோயும் ஆவர். சமுதாய உறவைத் தகர்த்தெறிகின்ற இத்தகையவர்களைக் 'கயவர்'கள் என்று வள்ளுவர் வசைச் சொல்லால் கூறி இனங்காட்டியுள்ளார்.

"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்" (குறள், 293)

"மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்" (குறள், 278)

என்று அவர்களை இனங்காட்டித் திருவள்ளுவர் நமக்கு எச்சரிக்கை செய்துள்ளார். இத்தகையோர் வாழ்வில் மேன்மையுடன் இருப்பது போல் இன்று நமக்குத் தோன்றினாலும், அவர்களிடம் 'ஆக்கம் பெருகுவது போலக் கெடும்' (குறள், 283) என்பதே உண்மை. அவர்கள் கானல்நீர் போன்றவர்களே!

"சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று" (குறள், 660)

என அறிவுறுத்தும் குறள் வழியே குறட்சமுதாய வழியாகும். அறிவும், ஆற்றலும் உடையவனால் இவ்வுலகத்தில் பிறருடைய உதவி இல்லாமல் வாழ முடியாது. உலகில் பலருடைய உழைப்பாகிய உதவி இல்லாமல் தனி ஒருவன் வாழ்க்கை நடத்த இயலாது. இந்த உண்மையை உணர்ந்தவர்க்குத் தம் வாழ்க்கை

முழுதும் பிறருக்குப் பயன்பட வேண்டும் என்ற ஆர்வம் தோன்றும். எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் பிறருக்கு உதவவேண்டும் என்ற நல்ல எண்ணம் இயல்பாக அவர்கள் உள்ளத்தில் தளிர்விடும். இத்தகையவர்களே ஒப்புரவாளர்கள். ஒப்புரவாளர்களின் வாழ்க்கை மழைபோன்றது என்கிறார் திருவள்ளுவர். இவர்கள் 'தன்னலம் கருதாப் பிறர்க்குரியாளர்கள்' ஆவார். ஒப்புரவு எண்ணம் உள்ளவர்கள் வாழ்வதனால்தான் உலக உறவு சீராக உள்ளது. அவ்வுணர்வு உள்ளவர்களே மண்ணில் உயிருடன் வாழ்பவர்கள் ஆவர். மற்றையோர் உயிருடன் இருந்தாலும் அவன் செத்தாருள் ஒருவனாகவே கருதப்படுவான் என்று திருவள்ளுவர் அத்தகையோரைக் கடுமையாகச் சாடுகின்றார். இதனை வலியுறுத்தும் குறட்பா வருமாறு:

*"ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்"* (குறள், 214)

உலக நடப்பை அறிந்து நடக்கவேண்டும் என்பது சரிதான். ஆனால் அதற்காகத் தன் மதிப்பை இழந்து - பிறருக்கு வளைந்து கொடுக்கவேண்டும் என்று வள்ளுவர் எங்கும் சுட்டவில்லை.

திருமணம் ஆனவர் பலர் இன்று வழக்குமன்றங்களில் வாயிற்படியை எண்ணிக் கொண்டிருக்கின்றனரே ஏன்? விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாமையே! வள்ளுவர் வாய்மொழியில் இது கண்ணோட்டம் ஆகும். 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்பர். இந்த அடிப்படையில் காமத்துப்பாலில் வள்ளுவர் இல்லற வாழ்வின் இயல்புகளை எடுத்துப் பேசியுள்ளார். மக்களுக்கு உரிய பண்பு உடையவர்களாக மக்கள் வாழ்தல் வேண்டும். அறிவு மேம்பட்டு மக்கட் பண்பு இல்லை எனில் அவர்கள் மரம் போன்றவரே! அவர்கள் அஃறிணைப் பொருளாகவே கருதத்தக்கவர். இத்தகையவர்களால் சமுதாயத்திற்கு எந்தப் பயனும் விளையப் போவதில்லை! எனவேதான் அவர்,

*"அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்*
*மக்கட் பண்பு இல்லாதவர்"* (குறள், 997)

*உறுப்பொத்தல் மக்கள்ஒப்பு அன்றால்; வெறுத்தக்க*
*பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு"* (குறள், 993)

மக்கட்பண்பு உடையவர்களே குறட்சமுதாயத்தில் வாழ்வோராக இருக்கவேண்டும் என்பதனாலேதான் திருவள்ளுவர் மனித உறுப்பு, அறிவுத்திறம் இவை மட்டும் ஒருவனுக்கு ஒத்துவிளங்குதல் போதா. மக்கட்பண்பு என்னும் சமுதாயக் குருதியோட்டம் ஒத்து விளங்குதல் வேண்டும். அப்படிப்பட்ட சமுதாயமே நின்று நிலைத்து வாழும்.

> "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
> மண்புக்கு மாய்வது மன்" (குறள், 996)

என்பது குறட் சமுதாயத்திற்கு வள்ளுவர் வகுத்த எல்லைக்கோடு.

> "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்"

என்று கலித்தொகை கழறுதல் இங்கு எண்ணத்தகும்.

## குறள் கூறும் ஆட்சி

வள்ளுவர் வாழ்ந்த நாளில் மன்னராட்சி நிலவியது; எனினும் மன்னன், வேந்தன், இறை - இனைய சொற்கள் பொருட்பாலுள் பயின்று வருகின்றன. இருப்பினும் திருக்குறள் கூறும் பொது அரசியல் அறம் இன்றைய மக்களாட்சி முறைக்கும் பொருந்தி வருவதாக உள்ளது. ஐம்பெருங்குழு, எண்பேராயம், அமைச்சர்கள் இப்படி வேந்தனின் செங்கோலாட்சிக்கு உறுதுணை செய்வோர் அன்று மிகுதியாக இருந்து செயலாற்றினர்; மன்னர்களும் அவர்களைக் கேட்டுச் செயலாற்றினர்; இதற்கு,

> "அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
> திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
> மெலிகோல் செய்தே னாகுக" (புறம், 71)

என்னும் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் வஞ்சினக்காஞ்சியே சான்று. இன்று மன்னர்கள் ஆள்வோராக இல்லை. சட்ட மன்றங்களும், நாடாளுமன்றங்களும் நம்மையும் நாட்டையும் ஆள்கின்றன. இன்றும் சட்டங்களும் நீதிகளும், இன்னபிற பொதுஅறம் காக்கும் அவைகளும் இருக்கத்தான் செய்கின்றன. இருப்பினும் நாட்டில் தீவிரவாதம், கொலை, கொள்ளை, ஏமாற்று, ஊழல், அடுத்துக் கெடுத்தல் இப்படிப் பல தீய நிகழ்வுகள்

நிகழத்தான் செய்கின்றன. தனிமனித வாழ்வில், குடும்ப வாழ்வில் பல்வேறு பண்புச் சிதைவுகள் நிகழ்கின்றன.

> "புதுப்பெண்ணை வரவேற்றது
> வாசலில்
> கியாஸ் சிலிண்டர்" (புல்லிலும் பூக்கள் பூக்கும், ப.41)

எனத் தீய நிகழ்வுகள் நம்கண்முன் நடைபெறுகின்றன. அவை சமுதாயத்தை மிகுதியும் பாதிக்கக் காண்கின்றோம். இதோ ஒரு புதுக்கவிதை நம் காலச் சமுதாயத்தைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது.

> "அன்னப் பறவை
> பாலைக் குடித்து
> நீரை ஒதுக்குமாம்
> அரசியல் வாதியும்
> இரத்தத்தைக் குடித்துச்
> சக்கையை உமிழ்ந்தான்
> அரசியல் வாதியே
> நீயுமொரு
> அன்னம்தான்!" (கதம்பம், ப.19)

இது இன்றைய அரசியல். வள்ளுவர் காலத்து அரசியல் சமுதாயத்தில் ஆள்வோரை இடித்துரைக்க முடிந்தது. இன்று இடித்துரைத்தால் அவர்களை அடித்துரைப்பர். வாக்களித்து வெற்றி பெறச் செய்தபின் மக்களின் நிலை என்ன என்பதனை ஒரு புதுக்கவிதை,

> "ஒன்றின்மேல் ஒன்றைக்
> குறிபார்த்து எறிந்து
> குண்டு விளையாடினோம்.
> இன்று
> எவரெவரோ வந்து
> எறிந்து விளையாட
> நாமே
> குண்டானோம்" (ஊர்வலம், ப.60)

என்ற கவிதை ஐந்தாண்டுக்கு ஒருமுறை வரும் தேர்தல் என்னும் செப்படி வித்தையைச் செதுக்கிக் காட்டுகிறது. நாட்டில் நாடோறும்

முறை செய்த மன்னர்கள் அன்று ஆண்டனர். இதனைக் கருத்திற் கொண்டே திருவள்ளுவர்,

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்" (குறள், 553)

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்" (குறள், 563)

என்று கூறி எச்சரிக்கைக் குரல் கொடுத்தார். ஆயின் இன்றோ அரசியல்வாதிகள் தேர்தல் முடிந்த பின் 'தன் வீடு, சோறு, சம்பாத்யம் இவையுண்டு தானுண்டு' என்று தன்னலத்தில் மூழ்கியவர்களாய் உள்ளனர்.

"பிறந்த பையன்
கொள்ளைக்காரனாய்
வருவான் என்று
ஜோசியர் சொன்னது
அப்பனுக்கு அதிக சந்தோஷம்
மகன்
மந்திரி ஆனானென்று"

என்ற புதுக்கவிதை இன்றைய அரசியல் நிலையை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. அமைச்சர்கள் அரசனுக்கு நல்லறிவு புகட்டுவோராயும், அறம் வழுவாச் செங்கோல் ஆட்சிக்கு அடித்தளம் அமைப்போராகவும், மக்கள் நலம் பேணும் மதிநுட்பம் உடையவர்களாகவும் துலங்குதல் வேண்டும். இது,

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு" (குறள், 632)

என்னும் குறள்வழியே தெளிவாகின்றது. இந்தச் சமுதாய அவலம் குறட் சமுதாய அமைப்பிலேதான் அகலும்! இன்று அமைச்சர் ஆவதற்கு மேற்கண்ட ஐந்து தகுதிகள் தேவை இல்லை. ஒரே தகுதி மக்களை எப்படியாவது ஏமாற்றத் தெரியவேண்டும்.

"ஊருக்கு உழைத்தவன்
ஆண்டியானான்

*பாருக்குப் பாடுபட்டவன்*
*போண்டியானான்*
*அவனைஏலி வேலைவாங்கியவன்*
*மந்திரியானான்"* *(மயன் கவிதைகள், ப.121)*

என்ற அரசியல் சதுரங்க விளையாட்டு நிலைமாற வேண்டுமானால் குறட்கோமானின் தூய எண்ணம் சமுதாயத்தில் வேரூன்ற வேண்டும்.

## வாழ்வின் இயல்பு

வாழ்வில் துன்பம் வருதல் இயல்பு. அதற்காக ஒருவன் வாழாமல் அஞ்சி ஓடுதல் கூடாது; அது நிழல்போலத் தொடரத்தான் செய்யும். துன்பம் அடைதலை இயல்பு என்று எண்ணுவார் நிறைந்த சமுதாயத்தில் துன்பம் உறுவார் இலராவர். ஆகவேதான் வள்ளுவர்,

*"இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்*
*துன்பம் உறுதல் இலன்"* *(குறள், 628)*

என்ற மனித சமுதாயத்திற்கு அமைதிகூறி நல்வாழ்வு வாழ்வதற்கு ஆற்றுப்படுத்தினார். சமுதாயத்தில் வறுமை அகல வேண்டும்.

*"வெளியேறு வெளியேறு*
*என்றால்*
*எருமையே வெளியேறாது*
*வறுமையா வெளியேறும்?*
*போடு போடு என்றால்*
*மயில் இறகு போடாது*
*போடு போடு என்று*
*போட்டால்தான் போடும்"* *(ஊர்வலம், ப.73)*

"வறுமையைப் போக்குவதற்குக் கொடையை எதிர்பார்ப்பதைத் தவிர வேறுவழியிருப்பதாக வறியவரான சாதாரண மக்களுக்கு வள்ளுவர் காலத்திலே தெரியவராது. அத்தகையோர் தொழில் செய்து வறுமையைப் போக்கலாம் என வள்ளுவர் கருதினது உழவு என்ற அதிகாரத்திலே தெரிவிக்கப்பட்டது. ஈதலை வற்புறுத்தியும், ஏற்பதை இழித்துக் கூறியும் வள்ளுவர் இங்கும் சமுதாய ஒழுங்கு காண முயன்றுள்ளார்" என முனைவர் ஆ.வேலுப்பிள்ளை (தமிழ்

இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப.61) கூறுவது நம் எண்ணத்தில் பதியவைக்க வேண்டிய கருத்தாகும்.

இன்று உலக மக்களின் வயிற்றுப்பசி பஞ்சாய்ப் பறந்து போகிறது என்றால் அதற்கு உழவர்களின் உண்மையான சமுதாயத் தொண்டுதான் காரணம் ஆகும். இன்றைய உழவன் கூறுவது,

*"நாங்கள் சேற்றில்*
*கால் வைக்கா விட்டால்*
*நீங்கள் சோற்றிலே*
*வைவைக்க முடியாது"*

என்பதுதான்! இதனை எண்ணியே பாரதிப்புலவரும்,

*"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்*
*வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனைசெய்வோம்"*

என்று உரத்தகுரல் கொடுத்து உழவையும் தொழிலையும் போற்றினார். இக்குரல்களுக்கெல்லாம் அடித்தளம் அமைத்தவர் திருவள்ளுவர் ஆவார்.

*"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை"* (குறள், 1031)

*"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது*
*எழுவாரை எல்லாம் பொறுத்து"* (குறள், 1032)

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்"* (குறள், 1033)

எனவரும் குறட்பாக்கள் சான்றாகும். "திருவள்ளுவரின் 'உழவு' என்னும் அதிகாரத்தைக் கற்கும்போது, இக்காலத்து உழவர்களின் நிலையை நினைந்து நினைந்து வருந்த வேண்டியுள்ளது. இன்று வறுமையின் எல்லையைக் காணவேண்டுமானால், அறியாமையின் முழுமையைக் காணவேண்டுமானால், நோய்களின் ஆட்சியைக்

காணவேண்டுமானால், இன்னல்களின் இருப்பைக் காணவேண்டுமானால், ஏய்ப்பும் ஏமாற்றமும் குறைவறப் பலிக்கும் இடத்தைக் காணவேண்டுமானால், புறக்கணிப்பின் பொல்லாங்கைக் காண வேண்டுமானால் உழவர்களின் வாழ்வையே காணவேண்டும்" என்று அறிஞர் மு.வரதராசனார் 1948-ஆம் ஆண்டில் (திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், ப.255) கவலையுடன் கூறிய கருத்துக்கள் இன்று வேறுவகையில் விரிவடைந்து உழவர்களின் வாழ்வைப் பெரிதும் பாழ்படுத்தி வருகிறது. எனவே உழவின் தலைமையை அதன் இன்றியமையாத் தன்மையை வள்ளுவப் பேராசான் வலியுறுத்தி முதன்மை தந்தமையின் நோக்கம் குறட்சமுதாய அமைப்பு வளமும் செழிப்பும் உடையதாக அமைதல் வேண்டும் என்பதனாலேதான்.

## முடிவுரை

விடாமுயற்சியும் விழிப்புடன் செயலாற்றும் திறனும் தனிமனித முன்னேற்றத்திற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் தேவையானவை என்பதனை உணர்ந்தவர் வள்ளுவப் பெருந்தகை. அதனால் அவர் தேவைப்படும் இடங்களில் தெய்வத்திரு எதிர்ப்புக்குரல் கொடுக்கவும் தயங்கவில்லை என்பது பின்வரும் குறளால் உறுதியாகின்றது.

> "தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்" (குறள், 619)

தெய்வத்தால் எல்லாம் கைகூடும் என்று மனித சமுதாயம் நம்புகிறது. அத்தெய்வமே தரா விடினும் முயற்சி உறுதியாக உனது உடல் உழைப்புக்கு ஏற்ற கூலியைத் தரும். எனவே தெய்வத்தைப் பற்றி எவனொருவன் கவலைப்படாது தன்னுடைய உழைப்பை நம்பி இருப்பானென்றால் உயர்வடையலாம் என்பது திருவள்ளுவர் காட்டிய சமுதாயக் கோட்பாடாகும்.

"அறத்துப்பாலில் இல்லறவியல் என்ற தலைப்பிலான 20 அதிகாரங்களும் நேரடியாக இல்வாழ்க்கை பற்றிப் பேசுவன. பொருட்பாலில் அமைந்துள்ள விடயங்கள், பொதுவாக இல்வாழ்க்கையை அடிப்படைக் கூறாகக்கொண்ட சமுதாயத்தின்

இயல்பு, சிந்தனை, செயல் என்பன பற்றிப் பேசுவனவாகும். இல்வாழ்க்கையின் செம்பாகமாகிய அகவாழ்வின் சுவையே காமத்துப்பாலின் உள்ளீடாகும். எனவே குறள் துறவை மதித்தாலும் இல்வாழ்க்கையையே முதன்மைப்படுத்தி நோக்கி உருவான சிந்தனை என்பது தெளிவாகிறது" *(இந்தியச் சிந்தனை மரபு, ப.77)* என்னும் கலாநிதி சுப்பிரமணியத்தின் கருத்து குறட்சமுதாயச் சிந்தனைக்கு மகுடம் சூட்டுவதாக அமைகிறது. குறள் போற்றிய சமுதாயச் சிந்தனை காலத்தால் முற்பட்டது; அப்படிக் காலத்தில் முற்பட்ட இது, முதன்மையான இந்தியச் சிந்தனை என்ற பெருமை திருக்குறளுக்கு நனி பொருந்தும்.

ஃ

# தமிழ்க் காப்பியக் குமுகாயம்

முனைவர் அ.அறிவுநம்பி
தமிழியற்புல முதன்மையர்
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

தமிழ் இலக்கியவுலகின் பரப்பு விரிவானது. பரந்த நிலையில் காணப்பெறும் தமிழ் இலக்கியங்களின் வளத்தையும் நலத்தையும் கணக்கிடுதல் எளிதானதில்லை. தமிழ் இலக்கியங்களைக் கால வரிசையின் அடிப்படையில் சங்ககால இலக்கியங்கள், சங்கம் மருவிய கால இலக்கியங்கள், பத்திநெறிக் கால இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், சிற்றிலக்கியக் கால இலக்கியங்கள், புத்திலக்கியங்கள் போன்ற தலைப்புக்களின் கீழ் அடக்குவர் பலர். வேறுசிலர் இலக்கிய வகைமைகளை முதன்மைப்படுத்தி அக இலக்கியங்கள், அறநூல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், சிறுகதை, புதினங்கள், நாடகங்கள் எனப் பாகுபடுத்திக்கொள்வர். அவ்வகையில் மேலைநாட்டாரின் வருகைக்கு முந்திய தமிழ்க் காப்பியங்களை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்க் காப்பியக் குமுகாயச் செய்திகளை முன்நிறுத்த இவ்வெழுத்துரை முனைகின்றது.

காப்பியம் என்பது இனிய தமிழ்ச்சொல். ஆனால் சில கூட்டத்தார் வடமொழியின் 'காவ்யம்' என்பதே தமிழில் காப்பியம், காவியம் என வழங்கப்பெற்றது எனக்கூறுவர். தமிழரின் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். சங்க இலக்கியப் படைப்பாளர் களில் காப்பியாற்றுக் காப்பியனார் என்ற பெயர் தென்படுகிறது. எனவே தமிழருக்குக் காப்பியம் என்ற சொல் பண்டைக் காலத்திலேயே வழக்கத்திலிருந்து காலங்காலமாகப் பயன்பட்டு வரும் சொல் என்பது உறுதியாகிறது. தண்டியலங்காரம் எனப் பெயரிய இலக்கணநூல் காப்பியத்திற்குரிய இலக்கணத்தைக் கூறுகிறது. அந்நூல் உருவாகும் முன்னரே காப்பியத்தை

வடிவமைத்தவர்கள் தமிழர்கள். காப்பியம் என்ற சொல் அப்பனுவல்களில் இல்லை என்பதைத் தவிரத் தண்டியிலக்கணம் கூறும் அனைத்துக் கூறுகளும் பண்டைத் தமிழரின் காப்பியங்களில் இடம்பெற்றுள்ளன. இளங்கோவின் சிலப்பதிகாரம் காப்பியத்துக்கான எல்லாக் கூறுகளையும் பொதிந்து வைத்துள்ளதை ஒரு பதச்சோறாகக் கருதவியலும். தன்னேரில்லாத் தலைமை, வணக்கம், நாடுநகர் வண்ணனை இன்னபிற கூறுகளைச் சிலப்பதிகாரமும் அதையொத்த மணிமேகலையும் கொண்டுள்ளன.

தமிழில் காணப்பெறும் காப்பியங்களைப் பொதுவாக மூன்று வகையுள் அடக்குவர்.

1. தமிழ் நிலத்துத் தோன்றியவை (எ-டு) சிலப்பதிகாரம்

2. பிறநிலத்துத் தோன்றித் தமிழுக்கு இறக்குமதி ஆனவை (எ-டு) சிந்தாமணி

3. சமயப்பின்புலத்தில் உருவானவை (எ-டு) மணிமேகலை

இராமாயணம், மகாபாரதம் இரண்டும் இதிகாசங்கள் என்ற பெயரின. எனினும் அவற்றையும் காப்பியப்பகுதியில் அடக்குவர் கல்வியாளர்கள். பெரியபுராணமும் காப்பியமே என வாதிடுவாரும் உண்டு. கம்பராமாயணத்தைப் பொறுத்தவரை அது தமிழ்மயமாக்கப் பெற்றதால் அதனைத் தமிழ்க்காப்பிய வரிசையில் இணைத்துக் கொள்வது மரபு. ஐஞ்சிறு காப்பியங்கள் என்ற பிரிப்பும் பிற்காலக் காப்பியங்களின் பட்டியலும் நோக்குதற்குரியன.

தமிழ்க் காப்பியக் குமுகாயம் காண முற்படுதலே இவ்வண்மையப் பணியாதலின் தமிழ் மண்ணில் தோன்றிய, தமிழ்மக்களைத் தலைமாந்தர்களாகக் கொண்டுள்ள காப்பியங்கள் மட்டுமே கருதப் பெறுகின்றன. நல்ல காப்பியங்கள் என்ற தலைப்பின் கீழே கிருத்துவ, இசுலாமியக் காப்பியங்களும் இடம்பெறும். எனினும் தமிழ் மண் சாராதவை அவை. அவை தமிழ்மக்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொள்ளவுமில்லை. எனவே இவ்வெழுத்துரை,

1. முழுமையான சிலப்பதிகாரம்

2. மதம் தவிர்த்த மணிமேகலை

ஆகிய நூல்களையே முதன்மைப்படுத்துகிறது. தேவையான இடங்களில் கம்பரும் பிறரும் கருதப்பெற்றுள்ளனர். இந்த மூன்று பனுவல்களிலும் தமிழ் மாந்தர், தமிழ் நிலம், தமிழ் மன்னர்கள் இடம் பெறுமாற்றையும் கருதுவது தருவது.

## சமுதாயம்

ஒரு குறிப்பிடத்தகுந்த அடிப்படையில் ஒரே இடத்தில் ஒருங்கிணைந்த குழுவைச் சமூகம் என்கிறோம். வாழ்மனைகளின் உறவுநிலை சமூகவியலின் பார்வைக்கு உட்பட்டது. பெரும்பான்மையும் செய்யும் தொழிலையே அடிப்படையாகக் கொள்வர். மருத்துவர் சமூகம், மாணவர் சமூகம், தொழிலாளர் சமூகம் என்ற சொல்லாடல்கள் நடப்புலகில் பரவலாக இடம் பெறுபவை. மனித வருக்கத்தினர் ஒருங்குகூடி, ஒரு பொது அடிப்படையில் வதியுங்கால் சமூகம் இயல்புற அமைகிறது. சமூகவியல் நிறுவனங்கள் பல. அவற்றில் குடும்பம், அரசு, மக்கட் சமூகம் ஆகியவை பார்வைக்கு உட்படுத்தப்பெறுகின்றன.

## குடும்பம்

சமூகவியல் வரையறையின்படி ஓர் ஆடவன், ஒரு பெண் இவர்களின் இல்லறவாழ்வே குடும்பம் எனக் கூறவேண்டும். இதுவே குடும்பத்தின் மையக்கரு. குடும்பத்தைத் தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம் என்றவாறெல்லாம் பிறகு வகை தொகையாக்கம் நிகழ்ந்துள்ளது. தமிழகச் சூழலில் காப்பிய உருவாக்கம் மலர்ந்த காலத்தில் தனிக்குடித்தனம் நடைமுறையில் இருந்திருக்க வேண்டும். காப்பியக் காலத்திற்கு முந்திய சங்ககாலத்தில் கூட்டுக் குடும்பம் இருந்தமையைச் சான்றுகள் சில சுட்டும். ஒரு சான்று: புறப்பாட்டு ஒன்றில் முதல்நாள் போருக்குத் தந்தையை அனுப்புகிறாள் ஒரு நங்கை. மறுநாள் அவளால் அனுப்பப் பெறுபவன் அவளுடைய கணவன். மூன்றாம் நாள் தன் மகனுக்குப் போருடை தரித்து அமர்க்களம் காணுமாறு பணிக்கிறாள் அதே நங்கை. இவர்கள் யாவரும் ஓரில்ல உறுப்பினர்கள். பிசிராந்தையார் பாடலிலும் தன் இல்லத்துறைவார் பட்டியல் இடம்பெறுகிறது. அங்கும் உறவுகள் பல இடம்பெறுகின்றன.

காப்பியங்களில் தனிக்குடித்தனம் எனப்பெறும் தனிக்குடும்பம் விழுமிய இடம்பெறுகிறது. கோவலன்-கண்ணகி திருமணம் முடிந்தபின் அவர்கள் தனித்து வாழ்ந்ததை மனையறம்படுத்த காதை விவரிக்கும். கணவனைப் பிரிந்து வாழும் தேவந்தி உறவுகளுடன் ஒன்றுகூடி வாழாது, பிரிந்தவனை நினைந்து வாழுகிறாள். மாதரி, ஐயை போன்றோரின் குடில்களில் பிறவுறவுகள் ஏதுமில்லை. மணிமேகலையில் குடும்பவாழ்வுச் சித்திரிப்பில்லை. பெரியபுராணக் குடும்பங்கள் - சிறுத்தொண்டர், இயற்பகை நாயனார், இரும்புல்ல நாயனார் உட்படப் பலரின் குடும்பங்கள் - முன்வைக்கும் செய்தியாகத் தனிக்குடும்ப அமைப்பையே பெறமுடிகின்றது.

குடும்ப அமைப்பில் முதன்மைபெறுவது திருமணம். காப்பியங்களுக்கு முன்னர் அமைந்த சங்கப்பாக்கள் ஒரு நங்கையின் மனம்பற்றிய செய்திகளில் ஈடுபடும் மாந்தராகத் தாயையே முன்நிறுத்துகின்றன. காதல்வயப்படும் தலைவியை இற்செறிப்புச் செய்வது, வேலனைக்கொண்டு வெறியாட்டுச் செய்வது, தலைமகனைத் தேவைப்பட்டால் சந்திப்பது, உடன்போக்குச் சென்றகாலை தேடுவது போன்ற பணிகள் தாயாருக்குரியவை. நற்றாய், செவிலித்தாய் என்ற இரு சொல்லாட்சிகளும் உற்றுநோக்கத் தக்கவை. மங்கையொருத்தியின் களவு, கற்பு, வாழ்க்கை பற்றிய கூறுகளில் தாயின் பங்களிப்பே இடம்பெறுகின்றது. இல்லத்தில் உள்ள தந்தை, அண்ணன், தம்பி, மாமா இன்னபிற உறவுடையோரைத் தலைவியின் மணவாழ்வு நிகழ்வுகளில் கூற்று நிகழ்த்துநராகக்கூட அப்பாக்கள் இடந்தரவில்லை. மகளைச் சுற்றிய மணநிகழ்வுச் செய்திகளில் ஆணிவேராகத் தாய் மட்டுமே நிற்கிறாள் ஆனால் சிலப்பதிகாரம் மறுதலையான போக்கைக் காட்டுகிறது. மாநாய்கன், மாசாத்துவான் எனத் தலைமக்களின் பெயர்களை மட்டுமே நுவலுகின்ற சிலம்பு,

> "இருபெருங் குரவரும் ஒருதனிநாளில்
> ஒருங்குடன்கூடி .... மாநகர்க்கீந்தார் மணம்"

எனப்பாடும். சிலம்பில் தாய்மாரின் பெயர்கள் - மாதவியின் அன்னை பெயர் உட்பட - எங்கும் குறிக்கப்பெறவில்லை. இதன்

தொடர்ச்சியையே பெரியபுராணத்தும் காணலாம். காரைக் காலம்மையாராக மாறிய புனிதவதிக்குத் தன்னையொத்த வணிகனை மணாளனாக்குவது அவளுடைய தந்தையே!

தாய்வழிச் சமூகம், தந்தைவழிச் சமூகமானதால் இந்தப் போக்கு ஏற்பட்டதென்னும் கருத்து இவண் சிந்திக்கத்தக்கது. சமூக அமைப்பில் ஏற்படும் தலைமை மாறுதல் போன்ற கூறுகள் மணம், கல்வி போன்ற உட்கூறுகளிலும் பரவும் என்பதற்கு இதனை நல்ல சான்றாக்கலாம். மகளிர்தம் காதல், களவுவாழ்க்கை, கற்பு வாழ்க்கை என எல்லாக் கட்டங்களிலும் தன் பங்களிப்பை மேற்கொண்ட தாயர் காப்பியக்களங்களில் காணாமல் போனமை சமூக அமைப்பு மாறுபாட்டைத் தெளிவுற எடுத்துரைக்கும்.

மணநிகழ்வுக்கு முதன்மைக் காரணமாகத் தந்தை திகழ்ந்த போதிலும் குடும்பச்சூழலை முறைப்படுத்துபவளாகவும், மாற்றங்கள் தேவையெனில் அவற்றை இயற்றுபவளாகவும் நங்கையே அமைகிறாள். தன் வாழ்வை முடிவுசெய்யும் முழு வுரிமையையும் அவளே பெற்றிருப்பதைத் தமிழ்க் காப்பியங்கள் இலகுவாகச் சுட்டும். சிலப்பதிகாரத்தில் தன்னையொத்த நிலையில் கணவனைப் பிரிந்துவாழும் தேவந்தி என்ற தோழி சோமகுண்டம், சூரிய குண்டம் மூழ்கி, இறையை ஏத்த அழைக்கும்போது பீடன்று என்பவள் கண்ணகி. தனக்குரியவனை எவ்வாறு மீளப்பெற வேண்டுமென்ற முடிவு அவளாலேயே கருதப்பெறுகின்றது. கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருசன் என்ற பயில்மொழி பரவலான மொழி. சங்க இலக்கியத்தில் இடம்பெறாச் செய்தியாகத் தன் கணவனின் முகத்துக்கெதிராகப் போற்றா ஒழுக்கம் புரிந்தீர் என்ற கண்ணகியின் கனற்சொற்களை எடுத்துரைப்பர். கணவனின் நேர் எதிரே நின்று அவனைப்பற்றிய தன் மதிப்பீட்டை - முடிவை - வெளிப்படையாகக் கூறுபவள் கண்ணகி. புகாரை நீங்கி மதுரைக்குப் புறப்படச் சொன்ன கணவனை மறுத்துரைக்கும் வலிமையுடைய கண்ணகி புறப்பட்டமைக்கான தன்முடிவு எதனால் என்றும் கூறுகிறாள்.

> *"மாற்றா இயலா வாழ்க்கையேன் ஆதலின்*
> *ஏற்றெழுந்தனன்"*

கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்லெனக் கோப்பெருந்தேவி அழுதுமடிந்ததைப் போலக் கண்ணகி அழுது நிற்கவில்லை. அவள்,

"பட்டாங்கு நானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்"

எனப்பெறுகின்ற முடிவு கருதத்தக்கது. எனவே குடும்பவாழ்வு, சமூக வாழ்வு இரண்டிலும் முடிவெடுக்கும் மாந்தராகப் பெண்ணிருப்பதை உணரலாம்.

மேகலையில் நடனமாட மறுப்பது, துறவு பூணுவது போன்றவை பெண்டிரின் முடிவுகளே. புனிதவதியார் கணவனைப் பிரிய நேரிட்ட காலை, இறையையெண்ணித் தனித்திருக்கலாம். ஆனால் பேய்வடிவு என்பது அவள்முடிவு. மங்கையர்க்கரசியின் முடிவால் மன்னன் நலம்பெறுதல் மற்றுமொரு சான்று. போற்றத்தக்க பெண்முடிவாக ஒன்றைக் குறிக்கவியலும். தனக்கு மணாளனாக வருவான் எனக் கலிப்பகையாரைக் கண்டு மகிழ்கிறார் திலகவதி. திருமணம் நிகழும் முன்பு போரில் வீரமரணம் எய்துகிறார் கலிப்பகையார். வேறுமணமில்லை என்ற முடிவும் தம்பிக்காக உயிர்வாழ்வது என்ற முடிவும் திலகவதியாரால் மேற்கொள்ளப் பெறுகின்றன.

## அரசு

அரசு என்ற சமூகநிறுவனமும் சங்ககால மரபுகளிலிருந்து மாறுபட்ட ஒன்றாகவே காப்பியங்களில் இடம்பெற்றுள்ளது. சங்கப் புறப்பாடல்கள் மன்னனின் வீரம், கொடை இவற்றை முன்வைத்தன. அங்கே அரசாள்பவனே நாயகன்; பாட்டுடைத்தலைவன். மக்கள் இரண்டாமிடந்தான். சிலப்பதிகாரம் முதல் பெரியபுராணம் வரை மக்கள் முதல்நிலையினர்; மன்னர்கள் பிறகுதான். சிலப்பதிகாரத்தைக் குடிமக்கள் காப்பியம் எனத் தெ.பொ.மீ போன்ற தமிழறிஞர் பெருமக்கள் போற்றிப் புகழ்ந்ததைக் கணக்கிலெடுக்க வேண்டும். தனக்குக் கேளாமலேயே வரும் போலிருந்த அரசாள் உரிமையை இளங்கோ மறுதலித்தார்; ஆனால் இளங்கோவடிகள் என உலகம் போற்றும் காப்பியப் புலவனார் மன்பதையை

ஆள்வது என்ற ஆவலைவிடவும் புலவராயிருந்து மக்களோடு வாழ்வதே சிறந்ததெனப் பலரும் கருதியமையைக் காப்பியங்கள் காட்டுகின்றன.

பாண்டியன் நெடுஞ்செழியன், கண்ணகிமுன் தவறிழைத் தோனாக நின்றபோது, "யானோ அரசன்" எனக் கூறியமை சிலம்பின் பதிவு. அரசப் பதவியை விடவும் அறப்பதவியை மாந்தர்கள் விழைந்தனரென்பது இதனாற் புலப்படும். சங்ககாலப் பாடல்களில் தலையானங்கானத்துச் செருவென்றானையும் 'குளமுற்றத்துத் துஞ்சியா'னையும் பற்றியவை அடங்கும. மண், பெண், பொன் ஆகியவற்றின் மீதான போறெதெதுவும் காப்பியங்களில் இல்லை. மாறாக, மொழி, பண்பாடு, இனம் கருதப்பெற்ற சூழலைச் சிலம்பு கூறும். கற்பு என்ற கருத்துருவின் அடிப்படையில் பத்தினிக் கோட்டம் எழுவதும், இலங்கைக் கயவாகு போன்றார் ஒருங்கிணைந்து பத்தினியை வழிபடுவதென்பதும் சங்க மரபுகளிலிருந்து மாறுபட்டவை. மணிமேகலைக் காப்பியம் முன்நிறுத்தும் இளந்திரையன் தமிழ் மன்னர்களில் ஒருவன். சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய மேகலை வாழும் நாட்டில் அறத்தை வளர்க்கும் அரசனாக அவன் உலாவருதலைக் காணலாம்.

பெரியபுராணத்தில் அரசர்கள் இடம்பெறுகின்றனர். மெய்ப்பொருள் நாயனார் இறையடியாராகவும் அமைகிறார். சமயம் அந்நூலின் அடிநாதம். எனவே போர்ப்பாங்கு, மரபு, இன்னபிற மிகுதியும் பயின்று வரவில்லை. எனினும் "நாமார்க்கும் குடியல்லோம்; நமனை யஞ்சோம்" என்ற வரி மன்னனுக்கஞ்சாத உணர்வை எடுத்துரைக்கும். படையெடுத்துப் பகைவரைத் தோற்கடித்து நாடு திரும்பியபின் இறையடியாராக மாறிய சிறுத்தொண்டர்களையும், திருத்தொண்டர்களையும் இந்நூலில் காணலாம். இவைபோன்ற எடுத்துக்காட்டுக்கள் காப்பியக் குமுகாயத்தில் அரசிற்கு விழுமிய, முதன்மை இடம் தரப்பெறவில்லை என்பதையே அறிவிக்கின்றன.

சங்க மரபிலிருந்து மாறாத இரண்டொரு கூறுகள் காப்பியத்தும் காணப்பெறுகின்றன. மன்னர் மகனே அடுத்த மன்னனாவான் என்ற பழம் முறைமை அவற்றுள் ஒன்று. "மூத்தோன் வருக என்னாது அவருள் அறிவுடையோனாறு அரசும் செல்லும்" என்ற

வைரவரிகளை நினைவூட்டுமாப்போல் சேரன் செங்குட்டுவனிருக்க, இளங்கோவை நிமித்திகன் அரசனாகும் தகுதிப்பாட்டாளான் எனக் கூறியதை எண்ணலாம்.

போர் தொடங்கப்பெற்றவுடன் "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" எனத்தொடங்கிச் சிலபேரை மட்டும் "நும் அரண் சேர்க" எனச் செப்புகிறது புறப்பாடல் ஒன்று. இவ்வரிகளைச் சற்றே மாற்றிப் பசு, பத்தினி, பார்ப்பார் போன்றாரைவிடுத்துத் 'தீத்திறத்தார் பக்கமே சேர்க' என்று நெருப்புக்கு ஆணையிடுகிறாள் கண்ணகி. இவை போல்வன சங்கச் சாயல் பதிந்த இடங்கள். அரசருக்குரிய ஈட்டல், வகுத்தல் போன்ற பணிகளில் பெரிய மாறுபாடுகளில்லை. போரைத் தவிர்த்து, மக்கள் நலனை விரும்பும் அரசு உருவான விதத்தையும் வளர்ந்த போக்கையும் தமிழகக் காப்பியங்கள் உரைக்கின்றன.

## சமூகம்

மக்கள் எனப்பெறும் மனிதவருக்கத்தாரின் ஒருங்கிணைந்த வாழ்வே சமூகவாழ்வு ஆகிறது. சங்கப் பாடல்களில் சாதீயம் இல்லை. தொழில் முறைமைகள் கருதப்பெற்றனவே தவிரத் திருமாலை, செவ்வேளைப் பாடும்போது மதவுணர்வுகள் ஏதுமில்லை. பூசல்களுமில்லை. நிறுவனமயமாகாத சமயமே சங்ககாலத்தது. நடுகல் வழிபாடு உட்படப் பல வழிபாடுகள் இருந்துள்ளன. அவற்றில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை.

காப்பியக் காலத்தில் சமயங்களின் செல்வாக்கு அழுத்தமாகி விட்டது. மணிமேகலையைப் பௌத்தநூல் என்பர். சிந்தாமணி சைனநூலாம். திருத்தொண்டர்புராணம் சைவத்தைப்பாடும். எல்லாச் சமயங்களையும் பாடும் சிலம்பைக்கூடச் சைனநூல் எனச் சிலர் கூறுவதில் மகிழ்வர். பக்தி இயக்கங்களின் தொடர்ச்சியாக வந்த கம்பராமாயணம் வழிநூல் எனப்தால் மூலநூலின் சாயலில் விளைந்தது அது. சிலப்பதிகாரத்திலேயே பெரிய கடவுள்களும், சிறிய கடவுள்களும் மக்களிடையே செல்வாக்குக் கண்டன. அருகதேவனைத்தவிர வேறெவனையும் எந்நா பாடாது எனக்கூறிய கவுந்தியடிகள், "நாராயணா என்னா நா என்ன நா" எனக் கேட்கும் ஆய்ச்சியர், (குறமக்களின் வழிபாடடைக் காணுங்கால்) முருகன்-வள்ளியை வணங்குவோர், இயக்கிக்குப் பால்மடை

கொடுத்துப் பெயரும் மாதரி போன்றாரை ஒரே பனுவலில் காணலாம். சமயக்காப்பியங்கள் என முத்திரை குத்தப்பெற்றவை பிற காப்பியங்கள். மக்களிடையே மதம் பெற்ற இடத்தை இதனாலறியலாம்.

வாணிகம், உழவு, பிற செழித்திருந்த சமூகத்தைத் தமிழ்க் காப்பியங்கள் முன்நிறுத்தின. பசிப்பிணியறுத்தல் தலைமை யறமாகக் கூறப்பெற்றது. பெரியபுராணத்தில் அரசர், அந்தணர், துணி வெளுப்பர், யாழ்ப்பாணர் எனப் பெயர்கொண்டதாழ்த்தப்பெற்ற வகுப்பார், பிறர் பாடப்பெற்றனர், சாதியப் போரில்லை. ஆனால் மதமேகங்கள் சூழ்ந்திருந்தன. அதனால், ஆவுரித்துத் திரிகின்ற புலையரேனும் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே எனச் சமயக்குடையின் கீழ் அனைவரையும் அமர்த்திக் கொண்டனர்.

மக்களின் உரிமைகள் பாழ்படுத்தப்பெறவில்லை. காப்பிய நிகழ்ச்சிகள் சில புதிய வெளிச்சங்களை நமக்குத் தருகின்றன. தனியொருமகள் கொண்டவனை இழந்துநின்ற புதிய மண்ணில் நாடாளும் மன்னனையே வழக்காடி வென்ற சிறப்புறு செய்தி மகளிர் கடமையைக் கூறும் சிலம்புச் செய்தியாகும்.

தன் இனத்தை, பண்பாட்டை ஏளனம் செய்தவர்கள் வடபுலத்தார் என்றவுடன் சேரன் படையொடு புறப்பட்டமை இனப்போருக்கான முதல் முயல்வு எனலாம். உதயகுமரன் கதை மணிமேகலையின் ஊடுவரும் கதை. பழைமைக் கூறுகள் செல்லுபடியாகா என்பதையும் துறவுபோன்ற புதுவரவுகள் தலைமாந்தரை மாற்றும் என்பதையும் அந்நூல் கூறும். பெரிய புராணத்தில் வரும்போர்ச் செய்திகள் வம்புக்குப் போரிட்ட நிலையைச் சுட்டவில்லை. மெய்ப்பொருள் நாயனாரின் மீதான பொறாமையே அங்கு இடம்பெற்றது. மன்னனைவிடவும் மெய்யான அடியார் இறையால் ஏத்தப்பெறுவார் என்பதைப் பூசலார் கதையும், இறையருள் இருந்தால் கடலில் மிதந்து கரையேறலாம் என்பதை நாவுக்கரசர் வாழ்வும் காட்டும். சமய உணர்வுகளுக்குத் தனிமதிப்புத் தரப்பெற்றது.

மக்கள் மத்தியில் தோன்றிய வேறுசில மாற்றங்களையும் குறிப்பது தேவையாகிறது. விரிச்சிகேட்ட புறநானூற்றுத் தமிழர்கள்

சோதிடத்தை மறுத்துள்ள பகுதிகள் காப்பியங்களில்உள. தேவந்தியிடம் 'பீடன்று' எனப்பேசும் கண்ணகியும், நிமித்திகளின் சோதிடத்தைப் புறந்தள்ளிய இளங்கோவும் நற்சான்றுகளாவர், பல்துறைக் கல்வி இருந்தமையைக் கோவலனிடம் காணலாம். பாய்கலை மந்திரம் கூறல், வடநூற்செய்தி பேசல், இசையாக்கல் போன்றவை அதற்குரிய எடுத்துக்காட்டுக்கள். பெரியபுராணம் பேசும் அனல்வாதம், புனல்வாதம் போன்ற வாதப்போர்களும் அவ்வாறே.

மரபிலிருந்து விலகிப் புதிய மலர்ச்சியைக் காப்பியங்கள் சில விதந்தோதும். அவற்றில் சில:

1. பெண்ணுக்கு நடுகல் எடுத்தமை. அதுவும் அரசக் குடும்பத்தைச் சாராத நங்கைக்கு.

2. காலங்காலமாக வழக்கிலிருந்து வரும் பரத்தமையை ஒழிக்கச் சிலம்பு பேசியமை.

3. சிலம்பால் மன்னனை வெல்வது, தனிமகளாயிருந்து பசிப்பிணியொழிப்பது, பேயுருவந்தாங்குவது போன்ற தனிமனித வெற்றிகள்.

4. காப்பியப் பெயர்கள், தலைமாந்தர்கள் ஆகிய கூறுகளில் பெண்மைக்கு முன்னுரிமை தந்திருப்பது. சிலம்பில் முதல் மாந்தராகக் கண்ணகி அறிமுகமாதல், இறைவனே காரைக் காலம்மையைப் பாரித்து "என் அம்மை" என்று போற்றல் போன்றவை சில சான்றுகள்.

தமிழ்க்காப்பியங்களில் காணலாகும் குமுகாய அமைப்பை விரித்துச் சொல்ல நாட்கள் போதா. சமூக நிறுவனங்களின் எண்ணிக்கையும் அதிகம். தமிழ்க்காப்பிய வரிகளின் ஊடாகத் திரட்டமுடிந்த குடும்பம், அரசு, சமூகம் போன்ற செய்திகள் பல மாற்றங்களையும், புதிய வரவுகளையும் முன்நிறுத்துகின்றன. அகலமாகவும் ஆழமாகவும் தேடற்பணி அமையின் இன்னும் செய்திகள் கிடைக்கும், ஏராளமாக.

# இதிகாசக் குமுகாயம்

*முனைவர் ம.சா.அறிவுடைநம்பி*
*தமிழ்ப் பேராசிரியர்*
*சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்*
*புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி 605 014*

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்த என் இளமை வாழ்க்கை நினைக்க நினைக்க இனிக்கின்றது. தூத்துக்குடிக்கருகில் மீனாட்சிபட்டி என்ற கிராமத்தில் இளமையில் கேட்ட கதைகளை நினைத்தாலும் இன்பம் பொங்குகிறது. அந்தக் கிராமத்தில் மின் விளக்குகள் வருவதற்குமுன் பொழுது சாய்ந்ததும் ஊர் அடங்கி விடும். ஒரு மௌனம் - எங்கும் நிறைந்த பெருமௌனம் ஒன்றே அமைதி பொங்கும் இரவில் இன்பக் கூத்தாடும். மாலை ஆறு மணிக்கெல்லாம் சோறு முடிந்துவிடும். வீட்டின் திறந்தவெளி முற்றத்தில் குழந்தைகள், சிறுவர் சிறுமியர் அனைவரும் ஒன்றாகக் கூடிவிடுவோம். 'பூட்டி' ஆச்சியைச் சுற்றி, ஒரு கதை! ஒரு கதை! என்று அன்பு கனியக் கூறிச் சூழ்ந்து கொள்வோம். இருட்டை மறப்போம்; வீட்டை மறப்போம்; ஏன் இந்த உலகையே மறப்போம். அரசனும் அரசியும், அழகும் கடவுளும், பேசும் விலங்குகளும் பாடும் மரங்களும் எங்களைச் சுற்றிச்சுற்றி வரத் தொடங்குவர். என்ன என்ன கதைகள் என இப்போது எண்ணிப் பார்க்கிறேன். சிறுத்தொண்ட நாயனார் கதை; திருவிளையாடல்கள்; அரிச்சந்திரன் கதை; துரியோதனன் கதை; இராமர் கதை; நளன் கதை; அர்ச்சுனன் கதை. அவற்றையெல்லாம் இன்று நினைத்தால் பெரிய வியப்பாகத் தோன்றுகிறது.

பின்னர்ப் பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றும் கேட்டும் வந்த கதைகள் அனைத்தும் முடிமக்கள் கதைகளாகவே இருந்தன. இராமாயணம், பாரதம், அரிச்சந்திரபுராணம், நளவெண்பா,

பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் என்பவையே பாடமாக வந்தன. தமிழில் மட்டும் இந்த நிலை காணப்படவில்லை. இந்தியா முழுவதிலும் வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழப்பெறுவது வான்மீகியின் இராமாயணமேயாகும். உலக நாடுகளில் பார்த்தால்கூடக் கிரேக்கர்களின் பழங்காப்பியம் எனப் பாராட்டுவது ஹோமர் பாடிய இலியட், இலத்தீன் மொழியின் பழங்காப்பியமாகத் திகழும் வர்ஜில் என்ற கவிஞர் பாடிய ஈனிட் ஆகியவையேயாகும்.

இவ்வாறு உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை பழங்கதைகள் வாய்மொழியாக வழிவழியாகப் பாட்டி, தாத்தா போன்றவர்களால் கிராமப்புறங்களிலும், நகரங்களிலும் கூறப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. விக்கிரமாதித்தன், மதனகாமராசன், அரிச்சந்திரன், இராமன், துரியோதனன், கர்ணன் போன்ற இவர்களின் கதைகள் இன்றும் மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றன.

இக்கதைகளில் எல்லாம் முடிமக்கள் கதைதான் இடம் பெறுவதுண்டு. முடியரசர்கள் காலம் முடிந்துவிட்டாலும்கூட இக்கதைகள் இன்றும் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றிருக்கின்றன. இலக்கியம், நாட்டுப்புறப்பாடல், தெருக்கூத்து, கதை இசை உரை (கதா காலட்சேபம்), கதகளி, பாகவதமேளம், நாடகம், திரைப்படம், சின்னத்திரை முதலான பல்வேறு வகையான ஊடகங்களில் இத்தகைய கதைகள் காலத்திற்கேற்ற முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

## குமுகாயம்

குமுகாயம் என்ற சொல் பரந்துபட்ட விரிந்த பொருளுடையது. இன்னது என்று குறிப்பிட்டு வரையறுக்க இயலாதது. இந்தியக் குமுகாயத்தில் வாழ்வோர் பல்வேறு குமுகாயத்தைச் சேர்ந்தவர்கள். பொதுவான சமயம், இனம், மொழி, மரபு ஆகியவற்றின் அடிப்படையில் இணைந்து வாழும் மனிதக்கூட்டம் குமுகாயம் எனப்படும்.

அரசியல், சமயம், சாதி, குடும்பம் முதலானவற்றை உள்ளடக்கிய இக்குமுகாயத்தில் இதிகாசக் குமுகாயத்தை ஆராய்வது நோக்கமாகும். இலக்கிய வரலாற்றைப் பொறுத்த அளவில் தொல்காப்பியம் தொடங்கி இன்றைய காலம் வரையிலும் நிலவிய

குமுகாய நிலையை அறிவதற்கு அவ்வக்காலத்தில் எழுந்த இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு, ஆவணம் போன்றவற்றில் பதிவு செய்திருப்பவை சான்றுகளாகத் திகழ்கின்றன. இதிகாசக் குமுகாயம் என்பது பரந்துபட்ட ஒரு தலைப்பாகும். ஏறத்தாழ இரண்டு முனைவர் பட்டம் பெறுவதற்குரிய தலைப்பாகும். காலம் கருதி, சுருக்கமான முறையில் ஓரளவு சுட்டிக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது. திறனாய்வின் அடிப்படையில் இராமாயணத்திற்கு மிக அதிக அளவில் அறிஞர்கள் ஆராய்ந்து பல்வேறு கோணத்தில் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். ஆயின் பாரதத்திற்கு மிகக் குறுகிய அளவிலேயே திறனாய்வு நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்திருக்கின்றன.

## இதிகாசம்

இதிகாச வகையில் அடங்கும் தமிழ்க் காப்பியங்கள் இராமாயணமும் மகாபாரதமுமேயாகும். 'இதிகாசம்' என்ற வடசொல்லுக்கு 'இவ்வாறு முன் இருந்தது' என்பது பொருள். எனவே இதிகாசம் என்பது 'இவ்வாறு முன்னர் நடந்தது' என்று மக்களால் உண்மையாக நம்பப்படும் ஒரு 'கதைப்பாடல்' ஆகும். ஒரு நாட்டின் முற்கால வரலாறாகவும் இதிகாசத்தைக் கூறுவதுண்டு.

> "குறிப்பிட்ட வீரன் ஒருவன் அடுத்தடுத்து நிகழும் தனது வீரச் செயல்களினாலே தன் தேச மக்களின் கதியை அல்லது அவர்களை இயக்கி வந்த நோக்கத்தை முற்றுவிப்பதே இதிகாசத்தில் கூறப்படும் பொருளாகும்"[1]

என்பர் ச.வையாபுரிப்பிள்ளை.

இந்திய மொழிகள் அனைத்திலும் பொதுவான இதிகாசங்களாக இராமாயணமும், மகாபாரதமும் கருதப்பட்டு வருகின்றன. திருமாலின் அவதாரங்களுள் இராமாவதாரத்தை இராமாயணமும், கண்ணன் அவதாரத்தைப் பாரதமும் கூறுகின்றன. இருபெரும் காவியமும் திருமாலை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. ஆயின் ஆறுமுக நாவலர் தம் பாலபாடத்தில் இதிகாசம் என்பவை மூன்று, அவை சிவரகசியம், இராமாயணம், பாரதம் ஆகும் என்று

1. ச.வையாபுரிப்பிள்ளை, காவிய காலம், ப.279

கூறுகின்றார். சைவ சமயத்தைச் சார்ந்த நாவலர் இதிகாசத்தில் சிவரகசியத்தையும் சேர்த்து மூன்றாகக் கூறுகின்றார். இது ஆய்வுக்குரியது. தமிழில் சங்க காலந்தொட்டுப் பல இராமாயணங்களும், மகாபாரதங்களும் வெவ்வேறு புலவர்களால் இயற்றப்பட்டுள்ளன. இவற்றில் கம்பரின் இராமாயணமும், வில்லியின் பாரதமும் குறிப்பிடத்தக்கன.

## இராமாயணம்

இந்திய இராமாயணங்களில் வால்மீகியின் வடமொழி இராமாயணம், துளசிதாசரின் இந்தி இராமாயணம், கம்பரின் தமிழ் இராமாயணம் ஆகியன குறிப்பிடத்தக்கன. இதன் காலம் பற்றிய கருத்துக்களில் அறிஞர்கள் பல்வேறு கருத்துகளைக் கூறியுள்ளனர்.

இராமாயணக்கதைகள் செவிவழியாகவும், பழந்தமிழ் இலக்கியங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ‘இராமாயணம்’ என்ற சொல் ‘இராம’, ‘அயனம்’ என்று பிரியும். ‘அயனம்’ என்றால் ‘உறைவிடம்’ என்பது பொருள். ‘இராமனுடைய இனிய குணங்களுக்கு உறைவிடமாகத் திகழ்வது’ இராமாயணம்.

அகநானூற்றுப் பாடல் ஒன்றில் இராமகாதை நிகழ்ச்சி ஒன்று பேசப்படுகிறது. காதலில் ஈடுபட்டிருக்கும் தலைவி ஒருத்தியைப் பற்றி ஊரார் பழிதூற்றிக் கொண்டிருந்தனராம். ஒருநாள் அத்தலைவி அத்தலைவனையே மணம் முடித்துக் கொண்டாள். அன்றே ஊரார் வாய் அடங்கிப்போயிற்றாம். அதுவரை ஊர்ப்பெண்கள் பழிதூற்றிக் கொண்டிருந்தது. மாலை நேரத்தில் மரக்கூடுகளில் வந்து பறவைகள் கலகல என்று பெரும் சப்தம் செய்துகொண்டிருப்பதைப் போல இருந்ததாம். அவ்வாறு பறவைகள் ஓயாது ஒலி செய்து கொண்டிருந்த ஒரு மரத்தின் அடியில் இலங்கைப் படையெடுப்பின் போது இராமன் வந்து தங்கித் தன் உடன் வந்தவர்களுடன் மந்திராலோசனை தொடங்கினானாம். அவன் கூட்டம் தொடங்கியவுடன் மரத்தின் மேலிருந்த பறவைக்கூட்டம் ‘கப்’ என்று தம் ஒலிகளை அடக்கிக் கொண்டனவாம். இந்தப் பறவைகளைப் போலவே கலகலவென்று பழிதூற்றிக் கொண்டிருந்த பெண்கள் அப்பறவைகள் ஒலி அடங்கியதைப் போலத் திருமணத்தின் பின்னர் வாயடைத்துப் போயினராம். இக்கருத்தை,

"வெல்வேல் கவுரியர் தொல் முதுகோடி
முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம்போல
ஒலி அவிந்தன்று இவ் அழுங்கல் ஊரே"[2]

என்று பேசுகிறது.

அதேபோன்று புறநானூற்றில் நகையை உண்டாக்கும் ஒரு நிகழ்ச்சியைக் கூறும்பொழுது இராமகாதை பேசப்படுகிறது. சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர் பாடிய பாடலில் இந்நிகழ்ச்சி இடம் பெறுகிறது.

சோழனுடைய அரண்மனையில் பாணர்கள் தடாரிப் பறையை முழக்கிக்கொண்டு, பகைவற்மேற் செல்லும் அவனுடைய சிறப்பைப் பாடினர். உடனே, சோழன் மிகச் சிறந்த பொன் அணிகலன்களை வாரி வாரி வழங்கினான். முன்னர்ப் பின்னர் அணிகலன்களைப் பார்த்தறியாத அப்பாணரின் துணைவியரான விறலியர் எந்த அணிகளை எவ்வாறு எந்த உறுப்பில் அணிய வேண்டும் என்பதை அறியாதவராக இருந்தனர். அதனால் விரல்களில் போடவேண்டிய மோதிரத்தைக் காதுகளிலும், காதிற் போடவேண்டியவற்றை விரல்களிலும், இடையில் கட்ட வேண்டியவற்றைக் கழுத்திலும், கழுத்தில் அணியவேண்டியவற்றை இடையிலும் அணிந்து கொண்டனராம். இச்செயல் எதுபோல உள்ளது என்று கூறவந்த கவிஞர்,

"மிக்க ஆற்றலை உடைய இராமனுடன் வந்திருந்த சீதையை வன்மையுடைய அரக்கன் (இராவணன்) கவர்ந்து சென்ற பொழுது, சீதையிடத்திருந்து நிலத்தில் விழுந்த மதிப்புயர்ந்த அணிகலன்களை, (கிட்கிந்தையிலுள்ள) சிவந்த முகத்தையுடைய குரங்கின் கூட்டம் எடுத்து (எவ்வாறு அணிவது என்று தெரியாமல்) அணிந்து கொண்டு பெருநகைக்கு இடம் அளித்தது போல உள்ளது"

என்ற பொருளில்,

2. அகநானூறு70 : 13 - 17.

"எமக்கு எனவகுத்த அல்ல, மிகப்பல,
மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந்தோனே; அதுகண்டு,
இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்,
விரல்செறி மரபின செவித் தொடக்குநரும்,
செவித் தொடர் மரபின விரல் செறிக்குநரும்,
அரைக்கு அமை மரபின மிடற்று யாக்குநரும்,
கடுந்தெறல் இராமனுடன் புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை,
நிலம்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப் பொலிந்தாஅங்கு
அறாஅ அருநகை இனிது பெற்றிகுமே"[3]

என்று பாடியுள்ளார். இராமகாதையின் இந்நிகழ்ச்சியைப் புலவர் போகிறபோக்கில் உவமை வாயிலாக எடுத்துக் கூறியுள்ளார். மக்கள் மத்தியில் இக்கதை நன்கு தெரிந்திருக்க வேண்டும் என்பதையே இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

சங்கப் பாடல்களை அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரத்தில் இராமகாதையின் இரு நிகழ்வுகள் காணப்படுகின்றன. இராமன் தன் தாதையாகிய தயரதன் ஆணையின் பேரிலேயே மனைவியுடன் காடு சென்றான். அக்காடுறை வாழ்க்கையில் மனைவியை இழந்து பெருந்துயர் உழந்தான் என்ற செய்தியை,

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வன் பயந்தோன் என்பது
நீ அறிந்திலையோ? நெடுமொழி அன்றோ?"[4]

எனும் பகுதியில் இளங்கோவடிகள் கூறுகின்றார். இராமன் தந்தை ஏவலில் காடு சென்று மனைவியை இழந்த கதையை 'நெடுமொழி' என்று சிலம்பு கூறுவதைக் கொண்டு இராமகாதை பல்லாயிரம் ஆண்டுகளாக இத்தமிழ்நாட்டில் வழங்கி வந்திருத்தல் கூடும் என்பதை அறியமுடிகிறது.

---

3. புறநானூறு 378 : 11 - 22
4. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், ஊர்காண் காதை 46-49

அடுத்த நிகழ்வாக இராவணவதத்தையும்,

"மூஉலகும் ஈர்அடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோஅரணும் போர்மடியத் தொல் இலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவி என்ன செவியே?"[5]

எனும் பாடலில் இளங்கோவடிகள் கூறுகின்றார்.

சிலப்பதிகாரத்தின் பின்னர்த் தோன்றிய மணிமேகலையில் இராமகாதையின் நிகழ்ச்சி ஒன்று பேசப்படுகிறது. காயசண்டிகை எனும் பெண் யானைத்தீ என்னும் நோயால் பீடிக்கப்பெற்றாள். எவ்வளவு உண்டாலும் அவள் பசி அடங்கவில்லை. வாய்வழிச் சென்ற உணவு அவள் பசியை அடக்காமல் மறைந்த புதுமைக்கு உவமை கூறும் முறையில், இராமன் சேதுவில் அணை கட்டிய பொழுது குரங்குகள் எடுத்து எறிந்த கற்கள் கடலினுள் சென்று மறைந்து விட்டதைக் கூறுகிறாள்.

"நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடல் அருமுந்நீர் அடைத்த ஞான்று
குரங்கு கொணர்ந்து எறிந்த நெடுமலை எல்லாம்
அணங்கு உடை அளக்கர் வயிறு புக்காங்கு"[6]

என்பது அப்பாடல். இளங்கோடிவகளும், சாத்தனாரும் இராமன் திருமாலின் அவதாரம் என்ற கருத்தைக் கூறியதைக் காண முடிகின்றது. இளங்கோவடிகள் வெளிப்படையாகக் கூற, சாத்தனாரோ மயக்கத்தினால் (அவித்தையால்) நெடுமால் இராமனாகப் பிறந்தான் என்று கூறுகிறார். "இராமன் திருமாலின் அவதாரம்" என்பதை ஏறத்தாழச் சங்க காலத்திலிருந்தே தமிழர்கள் ஏற்றுக்கொண்டு வந்துள்ளனர் என்பதையே இத்தகைய சான்றுகள் காட்டுகின்றன.

தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியலுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,

---

5. இளங்கோடிவகள், சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை.
6. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, உலக அறவி புக்க காதை 9 - 13.

"ஆள்வினை முடித்த அருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய இராமன் அவனொடு
மிதிலை மூதூர் எய்திய ஞான்றை
மதியும்பட்ட மடக்கண் சீதை
கடுவிசை வில்ஞாண் இடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்டம் எய்தித்
துயில் லெழுந்து மயங்கினள்"[7]

என்று மேற்கோளாக இப்பாடலைக் காட்டுகின்றார். அதாவது, விசுவாமித்திர முனிவர் தன் வேள்வி முற்ற இராமன் துணையை கொண்டான். அது முடிந்தபின் அவனொடு மிதிலையாகிய பழைய ஊரை அடைந்தபொழுது, இராமனுடைய மனத்தில் தோன்றிய காதல் உணர்வு அவன் கண் மூலம் வெளிப்பட்டதைக் கண் மூலம் பார்த்து அறிந்துகொண்ட அழகிய கண்களையுடைய சீதை, மறுநாள் வில் ஒடிக்கப்பட்ட ஓசையால் துயிலெழுந்து, அதை ஒடித்தவன் யார் என்று அறியமுடியாமையால் மனங்கலங்கி இருந்தாள் என்பதை நச்சினார்க்கினியர் எடுத்தாண்டுள்ளார்.

கேரளத்தில் கம்பனைச் சிவபெருமானே என்று போற்றி வருகின்றனர். கேரளாவில் கம்பராமாயணம் மூன்று வகையாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் இராமாயணத்தை மலையாள எழுத்தில் எழுதி இன்றும் அங்குப் பலர் பொதுமக்களைக் கூட்டி ஓதி வருகின்றனர். இஃது ஒருவகை.

திருவிழா முதலிய பொது நிகழ்வுகளில் கம்பராமாயணத்தை ஓதுகின்றவர் ஒருவரே பலவகைப் பாத்திரங்களாக இருந்து நடித்து வருவது மற்றொரு வகை.

மூன்றாவது வகை பாவைக் கூத்தாகும். அதாவது பாவைக் கூத்துக்குக் கம்பராமாயணம் உயிர்நிலையாக இருந்து வருகிறது.

பொதுவாகப் பார்க்கும்பொழுது சங்க காலந் தொடங்கி இன்றைக்கு வரை பல இராமாயணங்கள் வெளிவந்துள்ளன.

7. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் 54 உரை மேற்கோள்.

## இராமாயண நோக்கம்

கம்பராமாயணம் ஒரு பெருங்கடல். சொன்ன சொல் தவறாமல் உயிர்விடுதல், தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று வனம் போதல், உடன்பிறந்தார் ஒற்றுமைப் பண்பு, பெரியோரைக் காப்பாற்றுதல், கற்பின் திறம், உண்மை வீரத்தின் உயர்வு ஆகிய இவையெல்லாம் இராமாயணத்தில் தோன்றின. எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறை இருந்தாள் ஏற்றம் என்பதே முக்கியமான நோக்கமாகும். சீதையின் சிறைவாசம் ஒரு சத்தியாக்கிரகப் போர். இராவணன் செய்த கொடுமை எல்லாம் பெண்ணின் உயர்வைப் பழித்ததேயாம். இந்த உயர்வை அறியாமையாலேயே வாலியும் உயிர் விடுகின்றான். கம்பன் இந்த உண்மையை எல்லாம் உலகக் குடும்ப வளர்ச்சியின் பெருவிளக்கமாகக் காட்டுகின்றான்.

குகனை இராமன் தம்பி என்று பாராட்டிய பண்பாடு மன்னர் மனத்தை உருக்கியது. இதைப் பின்பற்றிக் கம்பன் இராம குடும்ப வளர்ச்சியாகவே இராமன் கதையைக் காண்கிறான். இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கனன் என்று நால்வராய்த் தோன்றிய குடும்பம் குகனொடும் ஐவராயிற்று. சுக்கிரீவனொடும் அறுவராயிற்று. விபீடணனொடும் எழுவராயிற்று.

## புலனடக்கம்

மனிதனிடம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகள் உள்ளன. இவற்றை ஆட்டிப் படைப்பது மனம். இந்த மனம் இந்தப் பொறிகளின் மூலம் தொழிற்பட்டுத் தேவையற்ற சிக்கல்களை விலை கொடுத்து வாங்குகிறது. ஒவ்வொரு பொறியும் அறிவு ஆணையிடும் முறையில் தொழிற்பட்டால் அதுவே புலனடக்கம் எனப்படும். எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், எத்தகைய வியத்தகு சக்தி பெற்றவர்களாக இருந்தாலும் புலனடக்கம் செய்ய முடியாமல் வழுக்கி விழுந்து விடுவர்.

> *"சினம் இறக்கக் கற்றாலும் சித்திஎலாம் பெற்றாலும்*
> *மனம் இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே"*[8]

---

8. தாயுமானவர் பாடல்கள், பராபரக்கண்ணி 169.

என்பது தாயுமானவர் வாக்கு. அதாவது ஒருவன் சினத்தை அடக்கிப் பல்வேறு சித்திகளைப் பெற்றாலும் அவனுடைய மனம் அறிவின் ஆணைப்படி அடங்கி நிற்கவில்லை எனில், அவனை ஞானி என்றோ, சித்தன் என்றோ கூறமுடியாது. சாதாரண வித்தை காட்டுபவனே ஆவான் அவன்.

மனிதன் முன்னேற்றம் பெற வேண்டுமானால், உறுதியாக அவனிடம் இருக்கவேண்டிய ஒன்று புலனடக்கமாகும். இதுவே வாழ்வின் ஒரு குறிக்கோளுமாகும். அதனால்தான் அப்பர் பெருமான், 'குறிக்கோள் இலாது கெட்டேன்'' என்றார். ஒருவன் சாதாரண மனிதனாக இருக்கும் நிலையைக் கடந்து மகாத்மாவாக ஆகவேண்டுமானால், அருளுடையவனாக இருத்தல் வேண்டும். அதற்கு முதலில் அன்புடையவனாக ஆதல் வேண்டும். அன்புடையவனாக ஆதற்குத் தன்னலத்தைத் தியாகம் செய்ய வேண்டும். தன்னலத்தைத் துறப்பதற்குப் புலனடக்கம் தேவை. எனவே எல்லாவற்றிற்கும் அடிப்படை புலனடக்கமே என்பது தெரியவருகிறது.

அன்பு ஒன்றே மனித வாழ்வின் அடித்தளம் என்பதைத் தமிழர்கள் கண்டு அதைத் தமிழ் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர்.

இதையெல்லாம் உணர்ந்த கம்பர் புலனடக்கம், அன்புடைமை, அருளுடைமை என்பவற்றை முற்றிலும் கைவரப்பெற்ற ஒரு தலைவனாக இராமனைப் படைத்தான்.

### அகப்பகை

ஒரு மனிதன் காமம் (ஆசை), குரோதம் (சினம்), உலோபம் (பேரவா), மோகம் (காமமயக்கம்), மதம் (செருக்கு), மாச்சர்யம் (பொறாமை, பகைமை) ஆகிய அகப்பகை ஆறையும் வெல்ல வேண்டும்.

காமம் என்ற சொல்லுக்கு ஆசை என்பது பொருள். காமத்தால் உயிர் துறந்தவர் தயரதர். தன் மகன் இராமன் மீது அளவுகடந்த ஆசை

9. அப்பர் தேவாரம், 4.67.9

வைத்தார். அதனால், மகனுடைய பிரிவு என்ற துயர் அவருடைய உயிருக்கு இறுதியை நல்கியது. இதன் மூலம் மக்கள் மீது அன்பு வைக்கவேண்டுமே அல்லாமல் ஆசை வைக்கக்கூடாது என்பதைக் கம்பர் உணர்த்துகின்றார். மகன் மீது அன்பு வைத்த கோசலை வாழ்ந்தாள். ஆசை வைத்த தயரதன் மாண்டான். அதாவது அன்பு ஒருவரை வாழ வைக்கும்; ஆசை தாழ வைக்கும்.

ஒரு மனிதனிடத்தில் பல நற்குணங்கள் அமைந்திருந்தாலும் பேராசை என்ற ஒரு தீயகுணம் இருந்தால் அந்த ஒன்று ஏனைய நற்குணங்கள் அனைத்தையும் அழித்துவிடும். "தாடகை என்ற பெண், கேடே இல்லாத வளம் நிறைந்த மருத நிலத்தை எல்லாம் அழித்துப் பாலை நிலமாக மாற்றிவிட்டாள். உலோபமானது சகல நற்குணங்களையும் அழிப்பது போல் என உணர்க" என்று இராமருக்கு விசுவாமித்திர முனிவர் கூறுகின்றார்.

"உளப்பரும் பிணிப்பு அறா உலோபம் ஒன்றுமே
அளப்பரும் குணங்களை அழிக்கு மாறுபோல்
கிளப்பரும் கொடுமைய அரக்கி கேடுஇலா
வளப்பரு மருத வைப்பு அழித்து மாற்றினாள்"[10]

என்பது அப்பாடல்

அதே போன்று காமமயக்கத்தால் இராவணன் முழுவதும் அழிந்தான். தன் மனைவியருடன் அவன் இனிதாக வாழ்ந்திருக்கலாம். பிறன் மனைவியாகிய சீதை மீது காமம் வைத்து, மூவுலக ஆட்சியை முற்றிலும் துறந்து இறந்தான்.

## அகப்பற்றும் புறப்பற்றும்

'நான் நான்' என்ற எண்ணந்தான் அகப்பற்றாகும். நான் செய்தேன், நான் சம்பாதித்தேன். நான் எல்லோரையும் காப்பாற்றினேன், நான் நடத்தினேன் என்ற எண்ணங்களை அடியோடு தொலைக்க வேண்டும். இந்த 'நான்' என்ற எண்ணம் என்றைக்கு நீங்குகிறதோ அன்றைக்கே மெய்யறிவு தலைப்படும். அதனால்தான் மணிவாசகர்,

10. கம்பர், கம்பராமாயணம், பாலகாண்டம், தாடகை வதைப்படலம் 25.

"நான் கெட்டவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ"[11]

என்று அருளிச் செய்தார்.

'எனது எனது' என்பதே புறப்பற்றாகும். என்னுடைய வீடு, என்னுடைய பாத்திரம், என்னுடைய நிலம், என்னுடைய கை, என்னுடைய உடல் என்று கூறுவதுவே புறப்பற்று.

இராவணனை அழித்த பின்னர் இராமர் அயோத்தி மாநகரை ஆட்சி செய்து கொண்டிருந்தபொழுது, ஒருநாள் சுமித்திரை இராமரிடம் வந்து,

"எனது அறியாமை விலக மெய்யறிவைக் கற்பிக்க வேண்டும்"

என்றாள். அதற்கு இராமர்,

"அம்மா நீ யார்? என்பதை முதலில் கூறுவாயாக! அதன் பிறகு உனக்குக் கற்பிக்கிறேன்; நின் இருக்கை புக்கு ஆராய்க"

என்றார். சுமித்திரை மீண்டும் தன் மாளிகைக்கு வந்து,

"நான் யார்? நான் என்ன குலம்? குலம் என்பது உடம்பைப் பற்றியது அல்ல; உடம்புக்குக் குலமில்லை; உயிருக்கும் குலமில்லை; எனவே, நான் அந்தண குலமுமல்ல; அரச குலமுமல்ல; வைசிய குலமுமல்ல; வேளாண் குலமுமல்ல. நான் தேவமாதா? அசுரமாதா? மானுட மங்கையா? என்றால், நாடகம் நடிப்பவன் எப்படி மாறிமாறி வேடம் தரிப்பானோ, அப்படி மாறிமாறிப் பிறக்கிறேன். ஆதலால் நான் எந்தவகை மாதுமல்ல. சரி, நான் என்பது எது? உடம்பிலுள்ள உரோமமா? அவ்வுரோமம் படர்ந்த தோலா? தோலால் மூடிய தசையா? அத்தசையில் ஊறும் உதிரமா? ஆங்குள்ள எலும்பா? மூளையா? உடம்பிலுள்ள புழுக்களின் கூட்டமா? வயிற்றுள் இருக்கும் மலக்குவியலா? இவ்வுடம்பை நன்றாகக் கட்டி வைத்துள்ள நரம்பா? எக்காலத்தும் பிரியாதிருக்கும் நோயா? நான் என்ற பொருளே இல்லை. உடம்புக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையானதால் உடம்பு நானல்ல"

11. மாணிக்கவாசகர், திருவாசகம். திருத்தெள்ளேணம் 18.

என்று ஆராய்ந்து தெளிவடைந்தாள். மறுநாள் சுமித்திரை இராமரிடம் வந்து,

"இராமனே! எனக்கு அறிவு பிறந்தது. இனி நீ எனக்குக் கற்பிக்க வேண்டியதில்லை. நான் என்ற பொருளே இல்லை. நான் என்ற எண்ணம் நீங்கிப் பெருவாழ்வை அடைந்தேன்"

என்று கூறினாள். இராமர் மகிழ்ந்து,

"அம்மா நன்கு ஆராய்ச்சி செய்தாய்; நல்லுணர்ச்சி பெற்றாய். இனி உனக்குப் பிறவி இல்லை; நின் இருப்பிடம் சென்று நலமுடன் இருப்பாயாக!

என்றார்.

அதன் பிறகு கோசலை ஒருநாள் இராமனிடம் வந்து,

"மகனே! பிறவிக் கடலைத் தாண்டுவதற்கு நீ எனக்குக் கற்பிக்க வேண்டும். உயிர்க்கட்டாகிய அழுக்குகளால் கலங்கிய என் இதயமாகிய தடாகத்தை நின் கற்பித்தலாகிய தேற்றாங் கொட்டையால் தெளியச் செய்ய வேண்டும்"

என்றாள். இராமர் அன்னையின் மொழியைக் கேட்டுப் புன்னகை புரிந்தார்.

"அம்மா! நாளைக் காலையில் எழுந்திருந்து பசுக்களைக் கட்டியிருக்கும் தொழுவத்திற்குச் சென்று சற்றுநேரம் ஆவின் கன்றுகளின் ஒலியைக் கேட்டு, அதனை மனத்தில் ஆராய்ச்சி செய்து, பிறகு என் அருகில் வருவாய்; நான் பின்னர் உனக்குக் கற்பிக்கிறேன்"

என்றார். கோசலை தன் மகனின் வார்த்தையைக் கேட்டு வியப்புற்றாள். மகன் சொன்னபடி மறுநாள் காலையில் பசுத் தொழுவத்தை அடைந்தாள். பசுவின் கன்றுகள் ஒலியை உற்றுக் கவனமாகக் கேட்டாள். பசுவின் கன்றுகள் 'அஹம்மா' 'அஹம்மா' என்று கூவிக் கொண்டிருந்தன. அந்த ஒலியைக் கேட்ட கோசலை இந்தக் கன்றுகள் 'அஹம்மா' என்று ஏன் கூறுகின்றன? இந்த ஒலியின் தத்துவமென்ன? என்ற ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினாள்.

அறியாமை நீங்கப் பெற்றாள்; மெய்யறிவு பெற்று விளங்கினாள்; உள்ளத்தில் உவகை ஊற்றெடுத்தது. உடனே இராமரிடம் வந்து,

"குழந்தாய் கன்றுகளின் ஒலியைக் கேட்டு மெய்யறிவு பெற்றேன்; இனி நீ கற்பிப்பதை நான் விரும்பவில்லை"

என்றாள். அன்னையின் அருமொழியைக் கேட்ட இராமர்,

"அம்மா, கன்றுகளின் ஒலியால் உனக்கு எவ்விதம் அறிவு உதித்தது? அவ்வொலியிலிருந்து நீ எதைத்த தெரிந்து கொண்டாய்? விவரமாகக் கூறுதி!"

என்று வினவினார். கோசலை,

"மகனே! ஆவின் கன்றுகளின் அஹம்மா என்ற ஒலியைக் கேட்டு, அதன் தத்துவத்தைக் கருத்தூன்றிக் கவனித்தேன்; அதன் பொருளை உணர்ந்தேன். அக்கன்றுகள் மனிதர்களை நோக்கி ஏ! மக்களே அஹம்மா (அஹம்-நான், மா-இல்லை) நான் இல்லை என்று சொல்லுங்கள். 'நான் நான்' என்று எண்ணுகின்றவரைப் பிறவிப் பெரும்பிணி நீங்காது. 'அஹம்மா நான் இல்லை என்று உணருங்கள்' என்று தெரிவிக்கின்றன. இவ்வரிய செய்தியை மனிதர் அறியவில்லை. இப்போது என் அறிவு தெளிந்துவிட்டது. 'நான்' என்ற எண்ணம் விலகிற்று"

என்றாள். அதுகேட்ட இராமர் மனமகிழ்ந்து,

"அம்மா! நீ மெய்யறிவை அடைந்தனை இனி உனக்குப் பிறவி இல்லை; நீ அரண்மனைக்குச் சென்று நலமுடன் வாழ்வாய்"

என்று கூறினார். கோசலை தன்னிருப்பிடம் சென்று நான் என்ற அகப்பற்றை ஒழித்த அறிவுமயமாய்த் திகழ்ந்தாள்.

ஒருநாள் கைகேயி இராமரிடம் வந்து,

"மரகதவண்ணா! கருணை நிறைந்தவனே! நான் அறியாமையால் உனக்குச் செய்தவற்றை மன்னிக்க வேண்டும். உனக்குச் செய்த குற்றத்தை எண்ணியெண்ணி உள்ளம் வருந்துகிறேன். பிறவிப்

> பெருங்கடலில் வீழ்ந்து இடர்ப்படுகின்ற என்னை உன்னுடைய கற்பித்தலாகிய தோணியைக் கொண்டு கரைசேர்க்க வேண்டும். எனது அறியாமை அகலுமாறு எனக்குக் கற்பிக்க வேண்டும்"

என்றாள். இராமன் புன்முறுவல் கொண்டு,

> "அம்மா வருந்தாதே! நீ எனக்கு ஒருபோதும் தீங்கு புரிந்ததில்லை; என் எண்ணத்தின்படிக் கலைமகள் உன் நாவிலிருந்து வரம் கேட்டு என்னை வனத்திற்கு அனுப்பச் செய்தனள். உன்னிடம் எனக்கு ஒரு சிறிதும் சினமில்லை. நீ உண்மையான அறிவை அடைவாயாக. நாளையதினம் இலக்குவன் உன்னை அழைத்துக் கொண்டுபோய் கற்பிப்பான்; செல்வாயாக!"

என்று கைகேயிக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

மறுநாள் இலக்குவன் கைகேயியைக் கண்டு இராமரின் கட்டளையைக் கூறி அவளைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு அயோத்தி மாநகரைக் கடந்து, சரயு நதிக்கரையில் ஆட்டுக் கூட்டங்கள் இருக்குமிடத்தில் அழைத்துச் சென்றான். அம்மா! 'இந்த ஆடுகளின் ஒலியைக் கவனிக்குமாறு இராமருடைய கட்டளை' என்று கூறினான். உடனே கைகேயி ஆடுகளின் ஒலியை உற்றுக் கேட்டாள். ஆடுகள் 'மே! மே!' என்று கூவிக்கொண்டிருந்தன. இந்த ஆடுகள் எதற்காக 'மே! மே!' என்று ஓயாமல் கூவுகின்றன என்று சற்று நேரம் ஆராய்ச்சி செய்தாள். உடனே அவள் அந்த ஒலியின் இரகசியத்தைத் தெரிந்துகொண்டாள். அறியாமை விலகி அறிவு உதித்தது. அவள் முகத்தில் ஞானஒளி வீசிற்று, அகமகிழ்ந்தாள். இலக்குவனை நோக்கி, குழந்தாய்! பற்றற்ற மெய்யறிவை அடைந்தேன்; இராமரிடம் என்னை அழைத்துக் கொண்டு செல்வாயாக!" என்றாள்.

இலக்குவனனும் கைகேயியைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு இராமரிடம் அழைத்துச் சென்றான். மலர்ந்த முகத்துடன் கைகேயி இராமனைப் பார்த்து,

> "மகனே! உனது கருணையினால் ஆடுகளின் ஒலியைக் கேட்டு ஆராய்ந்து பார்த்தேன்; என் அறியாமை விலகிற்று; மெய்யறிவு

*விளங்கப் பெற்றேன். இனி உனது கற்பித்தலை நான் விரும்பவில்லை; கற்பிக்காமலே கற்றுக் கொடுத்துவிட்டாய்"*

என்றாள். இராமர் இளநகை கொண்டு,

"*அம்மா! எவ்வாறு நீ மெய்யறிவு பெற்றாய்? ஆடுகளின் ஒலியிலிருந்து நீ எதைத் தெரிந்து கொண்டாய்? உன் ஆராய்ச்சியின் தன்மையை விவரமாகக் கூறுதி!*"

என்றார். கைகேயி,

"*ஆட்டுக் கூட்டங்களில் சென்று அவற்றின் ஒலியைக் கேட்டு ஆராய்ந்தேன். அந்த ஆடுகள் மே! மே! என்று எனக்காகவே கூறின. உலகிலுள்ள மக்கள் எல்லோரும் பசுக்கள், மனைவி, மக்கள், வீடுகள், ஆடை அணிகலன்கள் முதலானவற்றை என்னுடையது என்னுடையது என்று சொல்கின்றனர். அந்த எனது என்ற பற்றை இந்த ஆடுகள் மறுத்துக் கூறுகின்றன. அவ்வாடுகள் மனிதர்களை நோக்கி, ஏ மக்களே! எனது என்ற பற்றை அறவே நீக்க வேண்டுமே; நாங்கள் சென்ற பிறவியில் எனது எனது என்ற என்று சொல்லிக் கொண்டிருந்தோம். அதனால் இந்தப் பிறவியில் ஆடுகளாகப் பிறந்திருக்கிறோம். ஏ மனிதர்களே! எப்போதும் எனது என்ற பற்றை அடையாதீர்கள். அதனை உடனே விட்டு விடுங்கள். அப்படி விடாமல் போனால் நீங்களும் எமது நிலையை அடைவீர்கள். நாங்கள் 'மே' (எனது) 'மே' (எனது) என்று ஓயாமல் கூவிக் கொண்டிருக்கிறோம். உண்மை உணருங்கள் என்று எப்போதும் மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றன. இராமனே! எனது வீடு, எனது ஆடை, எனது அணிகலன், எனது நாடு, எனது அன்புடைய தோழியாகிய கூனி என்ற கெட்ட எண்ணங்கள் என் மனத்தில் குடி கொண்டிருந்தன அல்லவா? அவற்றை விட்டுவிட வேண்டுமென்று அந்த ஆடுகள் எனக்கு அறிவுறுத்தின. அதனால் 'எனது எனது' என்ற பற்றானது என்னைவிட்டு நீங்கிற்று. எனது உடல் என்ற எண்ணத்தையே விட்டுவிட்டேன். இதனால் இன்பமுமில்லை, துன்பமுமில்லை*"

என்றாள். இராமர் கைகேயியின் பேச்சைக் கேட்டுப் புன்முறுவல் பூத்து,

"அம்மா! நீ நன்றாக அறிவைச் செலுத்தி ஆராய்ச்சி செய்தாய். அறியாமையிலிருந்து விடுபட்டாய். மெய்யறிவு பெற்றாய். பற்றற்ற இன்பத்தை அடைந்தாய். நின் உறைவிடம் சென்று மகிழ்ச்சியாக வாழ்வாயாக!"

என்று கூறினார்.

சுமத்திரை, கோசலை, கைகேயி ஆகிய மூவருக்கும் இராமர் வாக்கால் கற்பிக்காமல் இருந்ததற்குக் காரணம், கற்பிக்கிறவன் குருவாக ஆகிறான்; இராமர் இந்த மூவருக்கும் மகன்; பெண்களுக்குக் கணவன்தான் குரு; எப்போதும் கணவனைத் தவிர அவர்களுக்கு வேறு கதியில்லை. ஆதலால்தான் இராமர் தாயர் மூவருக்கும் நேர்முகத்தில் கற்பிக்கவில்லை.

இந்த அகப்பற்றையும் புறப்பற்றையும் அறவே நீங்கப் பெறாதவர்கள் எத்தனைக் கோடிக் காலம் தவம் இருந்தாலும் கடவுளை அவர்களால் காண முடியாது.

## தந்தை சொல் கேட்டல்

இராமர் தன் தந்தை சொல்லை நிறைவேற்றும் பொருட்டு, வெயில் மழை காற்று பனி குளிர் பசி தாகம் முதலிய எல்லாவிதமான துன்பங்களையும் தாங்கிக்கொண்டு, பதினான்கு ஆண்டுகள் கானகம் சென்றார்.

## உடன்பிறந்தாரது ஒற்றுமை

இராமர், பரதர், இலக்குவன், சத்துருக்கனன் என்ற நால்வரும் மிகுந்த ஒற்றுமையாக இருந்தனர். ஒருவருக்கு வந்த இன்ப துன்பங்களை, மற்றொருவர் தமக்கு வந்ததாகக் கருதினர்; பரதருடைய இராமபக்தி இமயமலையினும் உயர்ந்தது.

## சொல் தவறாமை

சொன்ன சொல்லை இறுதிவரை உறுதியுடன் காப்பாற்றுதல், வாய்மை காத்துத் தயரதர் தம் உயிரையே தியாகம் செய்துவிட்டார். இராமர் வாய்மையைக் காத்து நின்றார்.

"புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்"[12]

என்ற திருவள்ளுவரது திருமொழிக்கு இலக்கியமாக வாழ்ந்தார்.

## ஒருவனுக்கு ஒருத்தி

இராமர் ஒரே மனைவியுடன் வாழ்ந்து உலகிற்கு அதன் முக்கியத்துவத்தைக் காட்டினார். பிறன்மனை நயத்தல் என்பது ஒரு பெரிய பாவம் என்பதையும் காட்டினார். பல பெண்களை மணம் செய்த வாலியையும், இராவணனையும் இராமர் தருமத்தின் வடிவாகிய தன் கோதண்டத்தினால் கொன்றார்.

## எல்லோரையும் உடன்பிறந்தோர் எனறு கொள்ளல்

இராமர் காட்டில் கால் வைத்த அன்றே, கங்கைக் கரையில் வாழ்ந்த ஓடம் விடும் வேடனைத் தம் தம்பியாகக் கருதினார். குகன் பரம ஏழை. கல்வி கேள்விகள் இல்லாதவன். அவனை அன்பாக இராமர் தழுவிக் கொண்டார்.

குரங்கின் தலைவனாகிய சுக்கிரீவனையும் தம்பி எனக் கொண்டார். இலங்கையில் வாழ்ந்த வீடணனையும் தன் தம்பி என்று கொண்டு மகிழ்ந்தார். இதைத்தான் கம்பர்,

"குகனொடும் ஐவர் ஆனேம் முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம் எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல்ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்
புகலரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை"[13]

என்கின்றார்.

## ஒன்றாகக் காணல்

'ஒன்றாகக் காண்பதுவே காட்சி' என்றார் ஔவையார். இராமர், நாட்டையும் காட்டையும் ஒன்று போலவே பார்த்தார்.

---

12. திருக்குறள் 298.
13. கம்பராமாயணம், யுத்த காண்டம், வீடணன் அடைக்கலப் படலம் 143.

"இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்"[14]

என்ற வள்ளுவர் வாக்குக்கேற்ப ஒரு வைரத்தூண் போல் நின்றார்.

"மெய்த் திருப்பதம் மேவுஎன்ற போதிலும்
இத்திருத்துறந்து ஏகுஎன்ற போதிலும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்"[15]

எனும் இப்பாடல். அசோகவனத்திலிருந்த சீதை தன் கணவரை நினைக்கின்ற நினைவைக் காட்டுகின்றது. அதாவது, நாடு உனக்கு என்றபோதும், காடு உனக்கு என்றபோதும் இராமருடைய திருமுகம் சித்திரத்தில் எழுதிய செந்தாமரையைப் போல மலராமலும், குவியாமலும் இருந்தது என்கின்றார் கம்பர்.

## மூளும் வினை

ஒருவன் செய்த வினை மறுபிறப்பில் வந்து எய்தும் என்று கூறுவதுண்டு. ஆனால் சிலருக்கு அவர்கள் செய்த வினை அப்பிறப்பிலேயே மூளுவதும் உண்டு. கோசலநாட்டை ஆண்ட தயரதன் ஒருநாள் தன் படையினருடன் யானை வேட்டையாடச் சென்றான். பகலில் யானைகள் கிடைக்கவில்லை. இரவில் நீர் பருகும்போது யானைகளைக் கொல்லக்கருதி ஒரு நதிக்கரையில் ஒரு புதரில் மறைந்திருந்தான்.

காசிபன் மகன் விருத்தசேனன், அவனுடைய மகன் சலபோசனன். சலபோசன முனிவரும் அவர் மனைவியும் கண் பார்வை தெரியாதவர்கள். இவர்களுடைய மகன் சுரோசனன். இவன் தன் தாய் தந்தையரைக் காவடியாகச் சுமந்து வந்தான். தாய் தந்தையர் நீர் வேண்டினார்கள். ஒரு மணல் மேட்டில் அவர்களை அமரவைத்து, சிறு வாயுள்ள கமண்டலத்தை நதியில் அழுத்தினான். குறுகிய வாயில் நீர் 'குடகுட' என்ற ஒலியுடன் சென்றது.

---

14. திருக்குறள் 629.
15. கம்பராமாயணம், சுந்தர காண்டம், காட்சிப் படலம் 20.

அந்த ஒலியைக் கேட்ட தயரதன் யானை நீர் பருகுவதாக நினைத்துத் தன் கையிலுள்ள 'சப்தவேதி' என்ற அம்பை வில்லில் தொடுத்து எய்தான். அந்த அம்பு சுரோசனன் மார்பில் பட்டது. 'சிவசிவா' என்று அலறி நிலத்தில் அவன் வீழ்ந்தான்.

இளம் பாலகனுடைய அழுகுரலைக் கேட்ட மன்னன் திடுக்கிட்டான். 'அந்தோ? கெட்டேன்' என்று கூறி வில்லை எறிந்து விட்டு ஓடோடி வந்து அச்சிறுவனை எடுத்துத் தம் மார்பின்மீது அணைத்து, முகத்தில் நீர் தெளித்து, ஆடையினால் விசிறி உபசரித்தான்.

சுரோசனன் மெல்லக் கண்விழித்து,

"ஐயா! கண்ணில்லாத தாய் தந்தையர்க்குத் தண்ணீர் எடுக்க வந்த என்னை யாரோ ஒரு பாவி அம்பு எய்து கொன்றான். உயிர் பிரியும் போது தாய்போல் கருணையுடன் ஆதரவு புரியும் தாங்கள் யார்?"

என்று தழுதழுத்த குரலில் கேட்டான்.

அச்சிறுவன் துயரத்தைக் கண்ட மன்னன் கண்கள் நீர் பொழிந்தன. உள்ளம் துடித்தது.

"மகனே! நான் அயோத்தி மன்னன்; தயரதன்; யானை வேட்டையாட வந்தேன். பகலில் யானைகள் கிடைக்க வில்லை. இரவில் நதியில் நீர் குடிக்கவரும் என்று கருதிப் புதரில் மறைந்து வில்லில் அம்பு தொடுத்து நின்றேன். நீ தண்ணீர் முகந்தபோது உண்டான ஒலியை யானை என்று மாறி உணர்ந்து அம்பை உன்மீது விட்டேன். அறியாமல் நேர்ந்த பிழை. என்னை மன்னிக்க வேண்டும்"

என்றான்.

"வேந்தனே! என் வினை என்னைக் கொன்றது. தங்களை யான் நோவ மாட்டேன். கண்ணில்லாத தாய் தந்தையரை நினைந்து வருந்துகிறேன்"

என்றான்.

"மகனே! உன் தாய் தந்தையரைக் கண்ணை இமை காப்பது போல் நான் காத்தருளுவேன். நீ வருந்தாமல் இருப்பாயாக!"

என்று மன்னன் அவனுக்கு ஆறுதல் மொழிகளைக் கூறினான்.

'சிவ சிவ' என்று சுரோசனன் வாய் முணுமுணுத்தது. உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

தயரதன் கமண்டல நீரை எடுத்துக்கொண்டு சலபோசன முனிவர் இருக்குமிடம் சென்றான். அவரை வணங்கினான்.

"மகனே! ஏன் இத்தனை நேரம்?"

"தபோதனரே! அடியேன் தயரதன். அயோத்தியை ஆள்பவன், யானை வேட்டையாட வந்தேன். இரவில் நதித்துறையில் நீர் பருகும்போது கொல்லலாம் என்று பதுங்கி இருந்தேன். அந்த நேரத்தில் தங்கள் மகன் நீர் முகர்வதைக் கேட்டு யானை என்று தவறாக எண்ணி அம்பை விட்டுவிட்டேன். அறியாமல் நிகழ்ந்த இந்தப் பிழையை மன்னித்து அருளவேண்டும். தங்கள் மகன் வானுலகம் சென்றார். கருணைக் கடலே என்னைப் பொறுத்தருளும்"

முனிவர் செய்திகேட்டு அலறினார். மன்னன் காவடியாக அவர்களைச் சுமந்து மகனுடைய உடலின் அருகில் விடுத்தான். மகனுடைய உடம்பைத் தடவித் தடவிப் பெரிதும் புலம்பி அழுதனர். "மகனே! இன்றுதான் எங்கள் கண் போயிற்று. எங்களை இரவு பகலாகக் காத்து உதவினாயே. இனி எப்பிறப்பில் உன்னைக் காண்போம்? ஆ! ஆ! எங்களை விட்டுச் சென்று விட்டாயோ?"

"அரசனே! நாங்கள் அந்தணர். உன்னைச் சீறுவதில் பயன் யாது? சிலகாலம் சென்ற பின்னர், உனக்கு நான்கு மகன் பிறப்பர். எந்த மகன் மீது அதிகமான அன்பு செலுத்துகின்றாயோ அந்த மகன் பிரிய, உன் உயிர் பிரியும். அப்பொழுதுதான் மகன் இழந்த சோகத்தை நீ நுகர்வாய்"

என்று முனிவரும் முனிவருடைய மனைவியும் கூறி விண்ணுலகு எய்தினர்.

அதைக் கண்ட மன்னன் தாங்க முடியாத வேதனை அடைந்தான். நெடுங்காலத்துக்குப் பிறகு அந்த முனிவர் கூறியபடி இராமர், பரதர், இலக்குவன், சத்துருக்கனன் என்ற நான்கு மகன்களைப் பெற்றான். இராமர் மீது அன்பு கொண்டு அவன் பிரிவினால் பெருந்துயருற்று மாண்டான். வினை மூண்டது.

## பணிவு

மனிதனுடைய நற்குணங்களுள் பணிவு என்பதும் ஒன்று. இப்பணிவு இருந்தால் பெருமை பெற்று வாழ்வில் சிறப்படைவர். அதனால்தான் திருவள்ளுவர்,

> "எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
> செல்வர்க்கே செல்வம் தகைத்து"[16]

என்றார். அதாவது பணிவுடன் அடங்கி வாழ்வது எல்லோருக்கும் பெருமையைத் தரும். அதுவும் செல்வர்களுக்குச் சிறப்பாகப் பணிவு இருந்துவிட்டால் அது அவர்களுக்கு மற்றொரு செல்வம் சேர்ந்து விட்டது போன்ற சிறப்பை உடையதாகும். திருவள்ளுவர் மற்றோரிடத்தில் 'பணியுமாம் என்றும் பெருமை'[17] என்கின்றார். அதாவது பெருமைப் பண்பு உடையவர்கள் எக்காலத்தும் அடக்கமாய் இருப்பர் என்பதையே வள்ளுவர் கூறுகின்றார்.

விசுவாமித்திரர் மிதிலைக்குத் தன்னுடன் இராமரையும், இலக்குவனையும் உடன் அழைத்துச் செல்கின்றார். சனகருடைய அரசவையில் அமர்ந்திருக்கிறார். தம் ஆசிரியராகிய விசுவாமித்திரர் அருகில் தம்பி இலக்குவனுடன் இராமர் ஒரிருக்கையில் அமர்ந்திருக்கிறார். உருத்திரருடைய வில்லைப்பற்றிச் சதானந்தர் கூறினார். அந்தப் பெரிய வில்லை அங்கு ஒரு மேடைமீது வைத்திருந்தனர்.

"இந்த வில்லை நீ எடுத்து வளைப்பது போல் ஒடித்து எறிவாய் என்று தம் கண் குறிப்பினால் இராமருக்குக் கட்டளை இட்டார். இராமர் விசுவாமித்திரரின் முகக்குறிப்பை உணர்ந்து வில்லைப் பார்க்கின்றார். இந்நிகழ்வைக் கம்பர்,

---

16. திருக்குறள் 125.
17. மேலது 978

"நினைந்தமுனி பகர்ந்தவெலாம் நெறியுன்னி அறிவனும்தம்
புனைந்தசடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலும்அம் மாதவத்தோன்
நினைந்தவெலாம் நினைந்துஅந்த நெடுஞ்சிலையை நோக்கினான்"[18]

என்பார்.

இப்பாடலில் 'வனைந்தனைய திருமேனி' என்று இராமரைக் கம்பர் புகழ்ந்து கூறுகின்றார். பிறிதோரிடத்தில் வாலி 'ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தோய்!' என்று இராமனைப் பார்த்து அழைக்கின்றான். ஆனால் இந்த இடத்தில் ஒரு நல்மாணக்கர் ஆசிரியர் அருகில் இருக்கும்போது கைகால் உடம்பு இவற்றை அசைக்காமல் சித்திரம் போல் இருப்பர். எனவேதான் இராமராகிய நல்மாணவர் ஆசிரியராகிய விசுவாமித்திரர் அருகில் சித்திரம் போல் அடக்கமாக, ஆடாமல் அசையாமல் இருந்தார். இதைத்தான் கம்பர் 'வனைந்தனைய திருமேனி வள்ளல்' என்றார்.

அதேபோன்று அனுமனைப்பற்றிப் பேசும்பொழுதுகூட அவர் எப்படி அடக்கமாக, பணிவாக இருந்தார் என்பதையும் கம்பர் குறிப்பிடுகின்றார். அறிவு உயர உயர அடக்கம் உயர வேண்டும். அடக்கம் என்பது அறிவின் மிகுதியைத் தெரிவிக்கின்ற ஓர் அடையாளமாகும். அனுமன் இராமரிடம் பேசும்பொழுது வணங்கிய தலையை உடையவனாகவும், கைகளால் வாயை மறைத்தும், நுணுக்கமான கேள்வியறிவு உடையவனாகவும் நிற்பார் என்பதை,

"வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியன் நுவல்ல தாயினான்"[19]

எனும் பாடலில் கூறுவதைக் காணமுடிகின்றது.

### மகளிர் நிலை

கோசலக் குமுகாயத்தில் வாழ்ந்த பெண்கள் கல்வியும், செல்வமும் பெற்றிருந்தனர். வறுமையால் வாடி வந்தார்க்கு ஈதலும், நாள்தோறும் விருந்தினரை வரவேற்பதும் கோசலநாட்டில்

---

18. கம்பராமாயணம், பால காண்டம், கார்முகப் படலம் 25.
19. கம்பராமாயணம், யுத்த காண்டம், வீடணன் அடைக்கலப் படலம் 84.

நடைபெறுகின்றன. மேலும் இவர்களது நற்பண்புகளில் அழகு நின்றன; நியாயங்கள் பொய் கலவாத உண்மையில் நின்றன; அறங்கள் மகளிருடைய அன்பில் நின்றன; பருவ மழை அம்மகளிரின் கற்பில் நின்றன என்பதை,

*"பொற்பின் நின்றன பொலிவு; பொய்இலா*
*நிற்பின் நின்றன நீதி; மாதரார்*
*அற்பின் நின்றன அறங்கள்; அன்னவர்*
*கற்பின் நின்றன, கால மாரியே"*[20]

எனும் பாடலில் கம்பர் கூறுகின்றார். இப்பெண்களுடைய கல்வியும் செல்வமும் கோசல நாட்டுக்குப் பயன்பட்டன. இவர்களிடம் இருந்த கல்வியும் செல்வமும் அம்மகளிரை ஆணவம் கொள்ளச் செய்ய வில்லை. இம்மகளிர் புலனடக்கம் பெற்றிருந்த காரணத்தினாலேயே இவர்கள் தன்னலம் கருதாமல் பிறரிடம் அன்பு செலுத்தி வந்தனர். அன்பை வளர்ப்பதற்கு அவர்கள் பெற்ற கல்வி பயன்பட்டது.

ஒரு குமுகாயத்தில் ஆடவர் எத்துணைச் சிறந்தவர் ஆயினும், அக்குமுகாயம் ஆவதும், அழிவதும் அதிலுள்ள மகளிரால்தான் என்பது வரலாறு கண்ட உண்மை. ஆண்கள் அறம்பற்றிக் கூறுவன வற்றை வீட்டில் இருந்து கடைப்பிடிப்பவர்கள் பெண்களேயாவர். மேலும் ஒரு குமுகாயத்தின் எதிர்காலம் அதில் வாழும் குழந்தைகளைப் பொறுத்தது ஆகும். அக்குழந்தைகளைப் பெற்று அவர்களுக்குப் பாலையும், பண்பாட்டையும் கொடுத்து வளர்ப்பவர் மகளிரே. எனவே, ஒரு குமுகாயத்தில் மகளிர் எந்த வகையிலாவது ஒழுக்கம் தவறினால் அக்குமுகாய அழிவை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இவை அனைத்துமே புலனடக்கம் என்ற ஒன்றினால்தான் தோன்ற முடியும். எனவேதான் கம்பர் அத்தனைப் பண்புகளையும் மகளிர்பால் வைத்து மொழிந்தான்.

## அரசியல்

குமுகாயத்தில் முக்கிய இடம் பெறுவனவற்றுள் அரசியல் என்பதும் ஒன்று. இராமாயணமும் பாரதமும் பெரிதும் அரசியல் நிகழ்ச்சிகளையே சான்றாகக் கொண்டுள்ளன.

---

20. கம்பராமாயணம், பாலகாண்டம், நாட்டுப் படலம் 59.

இராமாயணத்தைப் பொறுத்த அளவில் காப்பியக் கதை கோசலம், கிட்கிந்தை, இலங்கை ஆகிய மூன்று அரசுகளோடு தொடர்பு கொண்டிருக்கிறது. கோசலத்தில் உருவான அரசியல் சிக்கல் கதையின் நிகழ்ச்சிப் போக்கால் கிட்கிந்தையிலும் இலங்கையிலும் அரசியல் விளைவுகளை உண்டாக்குகிறது. மூன்று அரசுகளிலும் ஏற்பட்ட குழப்பங்களுக்கும் சிக்கல்களுக்கும் அரசியல் நெறிகளின் சீரழிவு மட்டுமன்றித் தனி மனிதப் பலவீனங்களும் காரணம் என்பதைக் கம்பர் புலப்படுத்துகின்றார்.

கோசலப் பேரரசு சரயுநதி தீரத்தில் அமைந்திருந்தது. அரசர்க்கு அரசனாகத் தயரதன் இருந்தான். கம்பரது உன்னதக் கற்பனையில் உதித்த இலட்சிய நாடாக இருந்தது. கோசலத்தில் பாவமும் அதனால் விளைந்த அருந்துயரும் இருந்தன. இங்கு வறியவரும் இருந்தனர். கோசலத்து உழவர்கள் 'வறியவர்க்கு உதவினர்'[21], 'வருந்தி வந்தவர்க்கு ஈந்தனர்'[22], 'தேறல் மாந்தி சூது உந்தி'[23]ப் பொழுது போக்கும் மாந்தர் இருந்தனர்; ஆடவர் மட்டுமல்லாது மகளிரும் மது உண்டு மயங்கினர்[24] பரத்தையரும் அயோத்தியில் இருந்தனர்.

> "வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர்
> உள்ளமும் ஒருவழி ஓட நின்றவன்"[25]

கள்ஊறு செவ்வாய்க் கணிகையரும்[26] இருந்தனர்.

மூத்தவனுக்கே முடி சூடும் உரிமை என்பது முடியாட்சியின் மரபு. தயரதன் மக்கள் விருப்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மரபைப் பலி கொடுத்து விடுகிறான்.

வரம்பிலா முடியாட்சியின் நடைமுறைகளுள் ஒன்றாக இருந்த வாய்மொழி ஆணை பல நேரங்களில் தீய விளைவுகளையே உண்டாக்கும் என்பதைக் கம்பன் காட்டுகின்றான்.

---

21. கம்பராமாயணம், பால காண்டம், நாட்டுப் படலம் 20.
22. மேலது 37.
23. மேலது, நகரப் படலம் 69
24. மேலது பால காண்டம், உண்டாட்டுப் படலம் 5 - 24.
25. மேலது அரசியற் படலம் 6.
26. மேலது அயோத்தி காண்டம், நகர் நீங்கு படலம் 105.

தயரதன் கைகேயியின் வரங்களுக்கு இணங்கினானே அன்றி, அவ்வரங்கள் அரசாணையாக வடிவம் பெறவில்லை. ஆனால் கைகேயி 'என்று இயம்பினன் அரசன்' என்று தானே அதை அரசாணையாக மாற்றி இராமனிடம் கூறுகின்றாள்.

அயோத்தியில் அரசியல் குழப்பங்களுக்குத் தயரதனின் பலவீனங்களும் காரணமாகின்றன. நான்கு மகன்களில் இராமன் மீது மட்டும் அவன் காட்டிய மிகுதியான ஆசை; மூன்று பட்டத்து அரசிகளுள் ஒருத்தியாகிய கைகேயியிடம் அவன் கொண்ட காமமயக்கம். அரசனின் இத்தகைய பலவீனங்கள் அரசியலில் விரும்பத்தகாத தீமைகளை விளைவிக்கும் என்பதைத் தயரதன் மூலம் கம்பர் காட்டுகின்றார்.

அயோத்தி அரசியலின் நெருக்கடியான நேரத்தில் அமைச்சர்கள் அவர்களுக்குரிய இலக்கணங்களுக்கேற்பத் தங்கள் கடமையைச் செய்யாதவராக அல்லது செய்யும் ஆற்றல் அற்றவராகவே காணப்படுகின்றனர்.

அமைச்சர்கள் பிற மன்னர்கள் 'இது தகாது' என்று கூறுவதை விட்டுவிட்டு மக்களோடு சேர்ந்து 'பெட்டைப் புலம்பல்' புலம்புகின்றனர்.

வானரர்க்கு மட்டுமே உரிய சமுதாய அரசாகக் கிட்கிந்தை அரசு விளங்கியது. துங்கபத்திரையின் இடது தீரத்தில் உயர்ந்த, அகன்ற இயற்கை வளம் நிறைந்த மலையின்மேல் இந்த அரசு அமைந்திருந்தது. வானரர்கள் தோற்றத்தில் குரங்குகளாகவும் செயலில் மனிதர்களாகவும் காணப்படுகின்றனர். இந்த வானரர்கள் பேசுபவர்களாக இருந்தனர். நாநலம் மிக்கவனாக அனுமன் காட்டப் படுகின்றான். இவர்கள் ஆடை அணிந்திருந்தனர். தாரை கைம்மைக் கோலம் பூண்டு, 'பொங்கு வெம்முலைகள் பூகக் கழுத்தோடு மறையப் போர்த்தி'[27]க் கொண்டிருந்ததாகக் கம்பர் கூறுகின்றார். இந்த அரசில் அறிவிற் சிறந்த அனுமன் போன்ற பல அமைச்சர்களும், அரச தூதர்களும், பொறியியல் கட்டிடக்கலை வல்லுநர்களும் மருத்துவர்களும் இருந்தனர்.

---

27. கம்பராமாயணம், கிட்கிந்தா காண்டம், கிட்கிந்தைப் படலம் 52.

இங்கு வாலி, சுக்கிரீவன் ஆகியோர் ஆட்சி மாறி, மாறி நிகழ்கிறது.

வாலியை 'நிரம்பினான் ஒருவன் காத்த நிறையரசு'[28] என்று இராமன் பாராட்டுகின்றான். அறிவு, ஆண்மை, பெருமை எனும் குணங்களால் நிரம்பியவன்; சிறந்த சிவபக்தன்; பாற்கடலைத் தனியொருவனாகக் கடைந்தவன்; நிலம் நீர் நெருப்பு காற்று எனும் நான்கு பூதங்களின் ஆற்றலை உடையவன்; தன்னோடு போர் தொடுக்கவருவோரின் வலிமையில் பாதியைத் தான் அடைகிறவன்; இராவணனையும் வென்று அடக்கியவன்; எழுபது வெள்ளம் சேனைகளை உடையவன் என்று வாலியின் பெருமைகள் பேசப்படுகின்றன.

இத்தகைய பெருமை பெற்ற வாலி அறத்தைக் காக்கும் இராமனின் வில்லுக்கு இரையாகின்றான்.

தம்பியின் மனைவியைக் கவர்ந்து கொண்ட வாலியின் செயலுக்கு வாலி கூறும் கூற்றுக்கள் செய்த தவற்றை நியாயப்படுத்துவனவாகவே உள்ளன. ஆயின் வாலியின் கூற்றில் வானரர்களின் குமுகாய நிலை காணப்படுகிறது.

> "இராமனைப் போன்ற உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களுக்கு விதித்ததைப் போல் ஒருவனை மணந்து அந்த ஒருவனையே புணரும் கற்புநெறியைப் பிரமன் தங்களுக்கு விதிக்கவில்லை; நேர்ந்தால் நேர்ந்தபடித் துய்ப்பவர்களாகவே தங்களைப் படைத்திருக்கிறான்"

> "மனம் போன வழியே செல்வதுதான் தங்கள் ஒழுக்கம்; வேத நெறிப்படிச் செய்யும் மனமோ உயர்குலத்தார்க்குரிய குணமோ தங்களுக்கு இல்லை.

வாலி வரம்பிலாப் பேராற்றல் பெற்றவன்தான். இருப்பினும் இந்த ஆற்றலினால் விளைந்த செருக்கு அவன் அறிவை மறைக்கிறது. அவன் செருக்கு மாற்றான் வலிமையை அறியவிடாமல் தடுக்கிறது.

---

28. கம்பராமாயணம், கிட்கிந்தா காண்டம், கிட்கிந்தைப் படலம் 4143.

நாகரிக முதிர்ச்சி அடையாமல் விலங்குக்கும் மனிதத்துக்கும் இடையில் ஊசலாடும் ஒரு குமுகாயத்தின் தலைவனாக வாலி சித்திரிக்கப்படுகிறான். ஆணவம், கோபம், காமம் ஆகிய மூன்று குற்றங்களும் வாலியிடம் அமைந்திருந்தன. அவன் தன் குற்றம் காணாமல் பிறர் குற்றம் காண்பவனாகவும் இருக்கிறான். கல்வி கற்றிருந்தும் அதற்குத் தக அவன் நிற்கவில்லை. தம்பியின் மனைவியையே கவர்ந்து வலிந்து துய்க்கும் இழிந்த ஒழுக்கத்தில் ஈடுபடுகிறான். யார் பேச்சையும் மதிக்காதவனாகவும், இரக்க மற்றவனாகவும் நடந்து கொள்கிறான். இவையெல்லாம் ஓர் அரசனுக்கு இருக்கக்கூடாத பண்புகளாகும். இந்தக் குற்றங்களே அவன் அழிவுக்குக் காரணமாகின்றன. அரசனின் தீய ஒழுக்கங்கள் அவன் ஆட்சியை எவ்வாறு சீரழிக்கும் என்பதை வாலியின் வாயிலாகக் கம்பர் காட்டுகின்றார். பக்குவம் பெறாதவன் பதவி பெற்றால் பதவிச் சுகத்தில் மயங்கித் தவறு செய்ய வாய்ப்புண்டு என்பதைச் சுக்கிரீவன் வாயிலாகக் கம்பர் உணர்த்துகின்றார்.

பொதுவாக நாகரிக முதிர்ச்சி அடையாத அரசில் இத்தகைய குற்றங்கள் தோன்றுவதில் வியப்பில்லை. அந்த அரசு மாற்ற முடியாத முடியாட்சியாகவும் அமைந்துவிட்டால் அந்தக் குமுகாயம் எத்தகைய துன்பங்களை அனுபவிக்கும் என்பதையும் கிட்கிந்தை அரசின் மூலம் கம்பர் உணர்த்திக் காட்டுகின்றார்.

திரிகூட மலையின் சிகரத்தில் இலங்கை அரசு அமைந்திருந்தது. பார்ப்பதற்கு அமராவதி போல அழகாக இருந்தது. இலங்கையின் குடிகளாகிய அரக்கர் இரவும் பகலும் ஆடுவதும் பாடுவதுமாக இன்பம் நுகர்கின்றனர். கவலைப்படுவோர் ஒருவர்கூட இலங்கையில் இல்லாததைக் கண்ட அனுமன் வியப்படைகிறான். இந்தச் செல்வமும் வாழ்க்கையும் இராவணன் மெய்ம்மை தவறாமல் ஆற்றிய தவத்திற்கு வரமாகப் பிரமனால் பெற்றது.

இராவணன் தான் செய்த தவத்தின் பயனாகப் பிரமனிடமிருந்து மூன்றரைக் கோடி வாழ்நாளும், முப்பத்து முக்கோடித் தேவர்கள் யாராலும் வெல்லப்படாத தன்மையும், சிவபெருமானிடமிருந்து 'சந்திரகாசம்' என்ற வாளும், கவசமும் வரங்களாகப் பெற்றவன். இந்த வரபலத்தால் மூவுலகங்களையும் வென்றவன். ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவன். இத்தகைய பேராற்றலும் பேரறிவும் படைத்த இராவணன் தான் வரங்களினால்

பெற்ற வலிமையால் ஆணவம் கொண்டான். வழியலா வழிமேல் செல்லத் தொடங்கினான். அதுவே அவன் அழிவுக்கு வழி வகுத்து விட்டது. வரங்களைப் பெற்றவன் சாபங்களைப் பெறத் தொடங்கினான். ஒருமுறை இராவணன் தான் செல்லும் வழியில் இடையூறாக நின்றது என்று, தான் வணங்கும் சிவபிரான் வீற்றிருக்கும் கயிலை மலையைப் பேர்த்து எறிய முயன்றான். அதனால், 'ஓர் விலங்கிடம் தோற்பாய்' என்று நந்தியால் சபிக்கப்பட்டான். வேதவதி என்ற பெண்ணிடம் தகாத முறையில் நடக்க, 'உன்னை அழிக்கும் நோயாக நான் தோற்றுவேன்' என்று அவளால் சபிக்கப்பட்டான். இந்த ஆணவத்தோடு சீதையிடம் அவன் கொண்ட தகாத காமமும் அவன் அழிவுக்குக் காரணமாயிற்று. இந்த இரு குற்றங்களும் அவன் மேலும் மேலும் பல குற்றங்களைச் செய்வதற்குத் தூண்டின. மேலும் அவன் செய்த குற்றங்களை இலக்குவன் பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகின்றான்.

> *"தேசியைச் சிறையில் வைத்தான்; தேவரை இடுக்கண் செய்தான்;*
> *பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான்; மன்னுயிர் புடைத்துத் தின்றான்;*
> *ஆசையின் அளவும், எல்லா உலகமும் தானே ஆள்வான்;*
> *வாசவன் திருவும் கொண்டான்; வழிஅலா வழிமேல் செல்வான்"*[29]

இவ்வாறு கம்பராமாயணத்தில் குமுகாயம் விளங்குகிறது. மேலும் விரிப்பின் பெருகும். எனவே பாரதத்தில் காணப்படும் குமுகாய நிலையை ஆராய்வோம்.

### பாரதம்

சங்க காலம் முதல் இக்காலம் வரை பாரதம் பற்றிய பல காப்பியங்களும், கதைப்பாடல்களும் உரைநடை நூல்களும் எழுந்த வண்ணம் இருந்துகொண்டிருக்கின்றன.

சங்க காலத்தில் ஒரு பாரதம் இருந்ததாகச் சின்னமனூர்ச் செப்பேடு கூறுகிறது. 'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்பது சாசனக் குறிப்பாகும்.

---

29. கம்பராமாயணம், யுத்த காண்டம், தூதுப் படலம் 4.
30. தென்னிந்தியச் சாசனங்கள் 3, ப.454

அடுத்து அமைவது பெருந்தேவனார் பாரதம். 'இரண்டு பெருந்தேவனார்கள் பாரதம் பாடியுள்ளனர்' என்று மயிலை சீனி.வேங்கடசாமி 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்ற நூலில் கூறுகின்றார். ஒருவர் சங்கத்தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார். இவரைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்றே குறிப்பது வழக்கம். இவர் பாடிய பாரதம் ஆசிரியப்பாவில் அமைந்துள்ளது. இவர் காலம் கி.பி.5 ஆம் நூற்றாண்டாகும். தொல்காப்பியம் பொருளதிகார உரையில்[31] நச்சினார்க்கினியர் காட்டும் ஆசிரியப்பாவில் அமைந்த பாரதச் செய்யுட்களை இப்பெருந்தேவனார் இயற்றியதாகக் கூறுவதுண்டு.

மற்றொருவர் 'பாரத வெண்பா' பாடிய பெருந்தேவனார். இவர் காலம் நந்திவர்மப் பல்லவன் காலமான கி.பி.9ஆம் நூற்றாண்டாகும். தொல்காப்பியப் பொருளதிகார உரையில்[32] 'உரை' பற்றிக் குறிக்கும் நூற்பாவில் பேராசிரியர் ஒழிந்த பாட்டிற்கு இவ்வாறே பொருள் எழுதின் அது ஒக்கும்; அவை பாரதம் பருப்பதம் முதலான என்று குறிப்பது இப்பாரத வெண்பாவாகும். இது இடையிடையே உரைநடை கலந்து வரப்பெற்றது.

திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் வாழ்ந்த வில்லிபுத்தூரார் பாடிய பாரதம், நாடு நகர வருணனைகள் இல்லாமல் நேரடியாகக் கதை தொடங்கப்பட்டு 18ஆம் நாள் இரவில் நடந்த போரோடு முடிந்து விடுகிறது. பங்காளிகளின் சண்டையால் விளையும் கேட்டினை வில்லியார் உணர்தற்காக அவருடைய புரவலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இதை எழுதினார். பல இடையூறுகளுக்குள்ளே சிக்கியும், எதிர்பாராதவிதமாக அறம் வெல்லும் என்பதைப் பாரதக் கதை பாண்டவர்களுடைய அறவாழ்வாகவும், பொருள் வாழ்வாகவும், இன்ப வாழ்வாகவும், முடிவில் துறக்க வாழ்வாகவும் கூறிச் செல்கின்றது.

தவிர நல்லாப்பிள்ளை பாரதம், செவ்வைச்சூடுவார் பாரதம் போன்ற நூல்கள் எழுதப்பட்டுள்ளன. பாரதத்தில் வரும் கிளைக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள காப்பியங்களில்

31. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் 17 நச்சினார்க்கினயர் உரை.
32. மேலது, செய்யுளியல் 173 பேராசிரியர் உரை

நளன்-தமயந்தி, அரிச்சந்திரன் வரலாறு ஆகிய இரண்டும் குறிப்பிடத் தக்கனவாகும்.

இவ்வாறு காலந்தோறும் தோன்றிய பாரத நூல்கள் வருமாறு:

| வ.எ. | நூற்பெயர் | ஆசிரியர் | காலம் |
|---|---|---|---|
| 1. | சங்ககாலப் பாரதம் | பாரதம் பாடிய பெருந்தேவனார் | சங்க காலம் |
| 2. | பாரத வெண்பா | பெருந்தேவனார் | 9ஆம் நூற்றாண்டு |
| 3. | மாவிந்தம் | பெருந்தேவனார் | - |
| 4. | மாவிந்தம் | அருணிலை விசாகன் | 13ஆம் நூற்றாண்டு |
| 5. | வில்லிபாரதம் | வில்லிபுத்தூரார் | 13ஆம் நூற்றாண்டு |
| 6. | ஆதிபருவத்து ஆதிபருவம் | அம்பலத்தாடும் ஐயர் | 17ஆம் நூற்றாண்டு |
| 7. | அரங்கநாதக் கவிராயர் பாரதம் | அரங்கநாதக் கவிராயர் | 1753 |
| 8. | நல்லாப்பிள்ளை கவிராயர் பாரதம் | நல்லாப்பிள்ளை | 19ஆம் நூற்றாண்டு |
| 9. | பாரதசார வெண்பா | பெருமாள் சுவாமிகள் | 20ஆம் நூற்றாண்டு |

கௌரவ அரச குலத்தினரிடையில் ஒரு குடும்ப வழக்கு ஏற்பட்டுப் பெரிய யுத்தமாக அது முடிந்தது. இந்த யுத்தம் உண்மையில் நிகழ்ந்ததொன்றாகவே இருத்தல் கூடும். இதனைக் குறித்து நாடோடிப் பாடல்கள் வழங்கி வந்தன. இவற்றையெல்லாம் திரட்டி இன்னார் என்று அறிய இயலாத ஒரு பெருங்கவிஞர் வீரசரிதமாக அமைத்தனர். இச்சரிதையே மகாபாரதத்தின் உட்கருவாக அமைந்தது என்பார் ச.வையாபுரிப்பிள்ளை.[33]

கி.மு.1000இல் நடைபெற்ற உண்மை நிகழ்ச்சி மகாபாரதமாகும். எனினும் பாரதப்போர் நிகழ்ந்த காலம் குறித்துப் பல்வேறு கருத்துகள் அறிஞர்களிடையே நிலவுகின்றன. அவற்றுள் ஒருசில வருமாறு:

> "பாண்டவர் காலம் 4500 வருஷங்களுக்கு முற்பட்டது என்பது வெள்ளிடைமலை"[34]

என்பார் ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை,

33. ச.வையாபுரிப்பிள்ளை, இலக்கிய உதயம், ப.227.
34. ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை, செந்தமிழ் தொகுதி 3, ப.37.

"கலியுகத்தின் தொடக்கத்தில் - ஏறக்குறைய 5000 ஆண்டுகட்கு முன்னதாகப் பாரதப் போர் நடந்தது"[35]

என்று கூறுவர் ஆர்.சி. பண்டார்க்கர்.

"பாரதப் போர் துவாபரயுகத்தின் இறுதியில் கி.மு.3139 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது"[36]

என்று கூறுவார் கிருட்டினமாச்சாரியார்,

"பாரதப் போர் கி.மு.3102இல் நிகழ்ந்ததே"[37]

என்று அறுதியிட்டுரைப்பர் சி.வி.வைத்தியாவும், வின்சென்ட் சுமித்தும்.

மகாபாரதம் நிறைவளமுடைய ஒரு சுரங்கம். அதன் வளங்களை வெளிக்கொணரப் பல வழிகள் உண்டு. யார் ஒருவராலும் அதை முழுமையாகச் செய்துவிட முடியாது. எளிமையான கவிதை நடையில் வடமொழியில் ஒரு குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு பெரிய யுத்தமாக மாறியதை விவரிக்கும் ஒரு நூலின் பெயரே மகாபாரதம்.

மகாபாரதத்தை வியாசர் இயற்றினார் என்றும், அவர் இயற்றவில்லை என்றும், முன்னரே இருந்த பல செய்திகளைத் தொகுத்து அளித்தவர் வியாசர் என்றும் கருத்துக்கள் நிலவி வருகின்றன. 'வியாசர்' என்ற சொல்லுக்கு ஒழுங்குபடுத்தியவர், 'சரி செய்து கொடுப்பவர்', 'எல்லாவற்றையும் ஒன்று சேர்ப்பவர் என்பது பொருளாகும். மொத்தத்தில் பாரதம் ஓர் ஆசிரியர் இயற்றிய நூலோ ஒரு காலத்து எழுதப்பட்ட நூலோ அன்று. வேறுவேறு நூற்றாண்டுகளில் தோன்றிய பழைய புதிய பகுதிகளின் சேர்க்கையே என்ற கருத்தே மேலோங்கி இருப்பதைக் காணமுடிகிறது.

இராமாயணம் போல் மகாபாரதமும் ஒவ்வோர் இடத்திலும் பாடக்கூடிய கதையாக இருந்தது. மகாபாரதம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு 'சூதர்'[38]களிடமிருந்து 'பிருகு' என்ற பிராமண குலத்திற்குச் சென்றுவிட்டது.

---

35. R.C.Bhandarkar, Colleged Works of Sir R.C.Bhandarkar, Vol.III,p.267.
36. Krishnamachariyar, History of Classical Sanskrit Literature, p.54.
37. C.V.Vaidhya, Wincent Smith, History of Sanskrit Literature, Vol.I, Sec. IV, Oxford History of India, p.58.
38. சூதர் - சத்திரிய வகுப்பினருடன் தவறான உறவு முறையில் பிறந்த வகுப்பினர். அரசவையில் இவர்கள் பல பொறுப்புகளில் இருந்துள்ளனர்.

பல்லவர் காலத்திலிருந்து மகாபாரதக் கதை கோயில்கள் தோறும் ஓதப்பெற்றது. பாரதம் இந்தியக் கலைப் புதையல். எத்தனையோ கிளைக்கதைகள் இதனுள்ளே இடம் பெற்றுள்ளன. இக்கதைகள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைக் கூறுகின்றன. கீதை இதனுள்ளே ஒளிர்கின்றது. தலைமுறை தலைமுறையாக இக்கதையில் தமிழர் உள்ளம் தோய்ந்து வருகிறது. இன்றைக்கும் கிராமங்களில் கோடை காலங்களில் பாரதச் சொற்பொழிவும், கூத்துகளும் நடைபெற்று வருகின்றன. உலக இலக்கியங்களில் பாரதம் அளவால் பெரிய நூலாகும்.

## குடும்பம்

குமுகாயத்தின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். குடும்பத்தின் நிலை உயர்ந்தால் குமுகாயம் உயர்வுநிலை பெறும். ஆண், பெண் சேர்க்கை உறவைக் கொண்ட சிறிய குழு குடும்பம் எனப்படும். இக்குழு சாதாரணமாக ஒரு மனிதன், அவன் மனைவி, அவர்தம் குழந்தைகளையும் கொண்டு விளங்கும். உறவுமுறைச் சுற்றத்தின் அடிப்படையில் குடும்ப அமைப்பு அமைவதைப் பின்வரும் அட்டவணை மூலம் விளக்குவது பொருந்தும்.

குடும்பம்

| மணமுறையின் அடிப்படையில் | உரிமையின் அடிப்படையில் | உறவுமுறைகளின் அடிப்படையில் | குடும்ப அமைப்பின் அடிப்படையில் |
|---|---|---|---|
| 1. ஒருதாரமுறை (Monogamy) | தந்தைவழிக் குடும்பம் | பிறந்த குடும்பம் (Consanguine Kin) | தனிக் குடும்பம் |
| 2. ஒரு ஆண் பல பெண்களை மணம் செய்தல் (Polygamy) | தாய்வழிக் குடும்பம் | புகுந்த குடும்பம் (Family of Procreation) | கூட்டுக் குடும்பம் |
| 3. ஒரு பெண் பல ஆண்களை மணம் செய்தல் (Polygamy) | | சுருங்கிய குடும்பம் (Nuclear Family) | பொதுக் குடும்பம் |
| | | 4. கூட்டுக் குடும்பம் (Joint Family) | |
| | | 5. விரிந்து பெருகும் குடும்பம் (Extended Joint Family) | |

பண்டைக்காலம் முதல் தாய்வழிக் குடும்பம் இருந்து வந்ததாக வரலாறு கூறுகிறது. ஒருகாலத்தில் இத்தாய்வழிக் குடும்பம் பல நன்மைகளைப் பெற்று விளங்கியது. இத்தகைய குடும்பத்தில் வயது முதிர்ந்த பெண்ணே குடும்பத்தலைவியாக விளங்கினாள். அப்பெண்ணே குடும்ப நிர்வாகம் நடத்த உரிமை பெற்றவள். இத்தகைய குடும்பத்தில் பெண்களுக்கே உரிமை அதிகம். பெண்கள் மணமான பின்னர்ப் புகுந்த வீட்டிற்குப் போவதில்லை. சொத்துரிமை பெண்களுக்கு மட்டுமே உண்டு. ஆண்களுக்குக் கிடைப்பதில்லை. கணவன், மகன் இவர்களுக்கு உணவு, உறைவிடம் முதலியவை மட்டும் அளிக்கப்படும். இவர்கள் விருந்தினர் போலக் கருதப்படுவர். இவர்களுக்கு எந்த உரிமையும் தாய்வழிக் குடும்பத்தில் கொடுக்கப்படுவதில்லை. இத்தாய்வழிக் குடும்பம் நாளடைவில் பழக்கத்தில் இல்லாமல் போயிற்று.

இந்திய நாட்டில் பொதுவாகத் தந்தைவழிக் குடும்பமே காணப் படுகிறது. தந்தைவழிக் குடும்பம் என்பது மணம் புரிந்த ஓர் ஆண் குடும்பப் பொறுப்பை ஏற்பதாகும். அவர் குடும்பச்சுமையை ஏற்றும் சொத்துரிமைக்குப் பொறுப்பேற்றும் அக்குடும்பத்தில் வாழும் மணமாகாத தமக்கை தங்கையரைப் பாதுகாத்து இருப்பதுமாகும். உரிமை பெற்ற தலைவன் இறக்க நேரிடும் நிலையில் அவனுடைய முதல் புதல்வன் அப்பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவனாகிறான்.

காலத்திற்குக் காலம் சமூக நிலைக்கேற்ப அல்லது சமூக மாற்றங்களுக்கேற்பக் குடும்ப அமைப்புகளும் மாறிக்கொண்டே வருகின்றன. இவற்றை மாறுதல் என்று சொல்லாமல் சமூகவியலார் வளர்ச்சி பெறுவதாகக் கூறுவர்.

குடும்பத்தில் தாய், தந்தை இல்லாவிடில் மக்கள் பெருக்கம் இருக்க முடியாது. தாய் தந்தையரைத் தவிர வேறு எந்த அமைப்புக்களாலும் அன்பு, ஆதரவு முதலியவற்றை முழுமையாகக் கொடுக்க முடியாது. மனிதனுக்கு நன்னடத்தை, நற்குணம் போன்றவை அமைவதற்குக் குடும்பம் இன்றியமையாதது. குடும்பம் என்ற சமூக அமைப்பு இல்லாவிட்டால் மனிதன் ஓரளவிற்கு விலங்குகளைப் போல வாழத் தொடங்க நேரிடும். பண்பாடு, மரபு இவற்றை ஒட்டிக் குழந்தையின் ஆளுமையை வளர்க்கும் ஒரே ஒரு

நிறுவனமாகக் குடும்பம் விளங்குகிறது. குழந்தைகளைக் குமுகாய மக்களாக்குவது குடும்பத்தின் பொறுப்பாக விளங்குகிறது. மனிதனுக்கு வேண்டிய உறவை வளர்த்தலும், வசதிகளைக் கொடுத்துச் சமூக மனிதனாக்குவதும் குடும்பத்தின் கடமைகளாக அமைந்துள்ளன.

பாரதத்தில் கூட்டுக் குடும்பம், குருகுலக் குடும்பம் இருந்ததைக் காணமுடிகிறது.

## குழந்தைப் பேறு

மனைவி, கணவன் இல்லாமற் போனாலும் அல்லது கணவனுடன் வாழ்ந்தாலும் குழந்தைப் பேறு இல்லாத நிலையில் பிற ஆடவனுடன் சேர்ந்து குழந்தை பெற்றுக்கொள்ளும் நிலை பண்டு இருந்தது.

அந்தக் காலத்தில் வாரிசு இல்லாத அரசர்கள் புதல்வர்களைப் பெற்றுக்கொள்ளப் பிராமணர்கள் உதவியையும் வாழ்த்தைகயும் நாடுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிராமணன் அரண்மனையில் விருந்தாளியாக இருப்பான். தேவையான அளவிற்கு அவனுக்கு விருந்தளிப்பார்கள். அந்த வீட்டுப் பெண் அவனுக்காகக் காத்திருப்பாள்.

சந்தனு-சத்தியவதியின் இரண்டாவது மகன் விசித்திரவீரியன் குழந்தைப் பேறு இல்லாமல் விண்ணுலகு அடைந்துவிட்டான். அவன் மனைவியர் அம்பிகை, அம்பாலிகை ஆகிய இருவரிடத்தும் சேர்ந்து மகவை உண்டாக்குமாறு வீடுமனை வேண்டினாள் சத்தியவதி. வீடுமன் மறுத்து விடுகிறான். அதன்பின்னர் வீடுமரின் ஒப்புதலுடன் இறந்த அரசன் பொருட்டு வியாசனாற் குலத்தை உருவாக்க விரும்பினாள். வீடுமன் இதை ஏற்றுக் கொண்டான்.

> "பரசுராமனால் சத்திரிய குலத்திற்குக் கேடு நிகழ இருந்தபோது அரசமாதர் முனிவரைச் (வேதங்களைத் தொகுத்த வியாச முனிவர்) சேர்ந்து மகவைப் பெற்றாற் போலச் செய்விப்பதே முறை" (1-160)

என்று வீடுமன் தெரிவித்தான்.

"வியாதனைச் சேர்ந்த அம்பிகை - திருதராட்டிரனைப் பெற்றெடுத்தாள்"(1-167, 168)

"வியாதனைச் சேர்ந்த அம்பாலிகை - பாண்டுவைப் பெற்றெடுத்தாள் (170, 171)

"வியாதனைச் சேர்ந்த தோழி - விதுரனைப் பெற்றெடுத்தாள்" (1-175)

இந்நிகழ்ச்சி கணவன் இறந்துவிட்ட நிலையில் அரச குடும்பத்தை நிலைநிறுத்த வேண்டி மனைவி மேற்கொண்டது; அதுவும் மாமியார் விருப்பப்படி நடைபெற்றது.

ஆண்மை அற்ற பாண்டு குந்தியுடன் இணைந்து இன்பம் துய்க்க இயலாத நிலையில், குந்தி தான் அறிந்த மந்திரத்தைக் கொண்டு குழந்தைப் பேற்றை அடைந்தாள்; கணவன் பாண்டுவின் ஒப்புதலுடன் அவன் உயிருடன் இருக்கவே நிகழ்ந்த நிகழ்ச்சி இதுவாகும்.

"குந்தி யமனுடன் இணைந்து தருமனைப் பெற்றாள்" (1-222)

"வாயுவுடன் சேர்ந்து வீமனைப் பெற்றாள்" (1-231)

"இந்திரனுடன் சேர்ந்து அருச்சுனனைப் பெற்றாள்" (1-238)

"குந்தி தானறிந்த மந்திரத்தை மாத்திரிக்குக் கற்றுக்கொடுத்தாள். அவள் அசுவினி தேவர்களுடன் இணைந்து நகுல சகாதேவர்களைப் பெற்றனள்" (1-240, 241)

ஒரே குடும்பத்தில் தோன்றிய திருதராட்டிரன், காந்தாரி ஒருத்தியை மட்டும் மணந்தான். அவன் தம்பி பாண்டுவோ குந்தி, மாந்தரி ஆகிய இருவரையும் மணந்தான். அரச குடும்பத்தினரிடையே 'ஒருவன் ஒருத்தி' என்ற நிலை கிடையாது என்பதை இதன் மூலம் அறிய முடிகின்றது.

## மனைவி ஒருத்தி - கணவர் ஐவர்

அருச்சுனன் விற்போட்டியில் வெற்றி பெற்றுத் திரெளபதியை அடைந்தனன். திரெளபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவி ஆயினள்.

"தருமன் முதலான ஐவரையும் மணந்தாள்" (1-566-567)

நாரதரின் அறிவுரைப்படி ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஆண்டு திரெளபதியுடன் இணைந்து வாழ்தல் வேண்டும். அப்படி வாழும் அந்த ஓர் ஆண்டில் மற்றை நால்வரும் திரெளபதியைக் காணுதல் கூடாது என்ற உறுதிப்பாடு கொண்டனர்.

"காவியங் கண்ணினாளைக் கண்ணுறல் கடனதன்றே"(1-629)

அதை மீறிக் கண்டவர்கள் உருமாறி ஓராண்டு புனலாடச் செல்ல வேண்டும்.

## ஒருவனுக்குப் பல மனைவியர்

பாண்டவர்களில் ஒருவனாய் அருச்சுனன் திரெளபதி, சுபத்திரை, உலூபி, பாண்டியன் மகள் சித்திராங்கதை முதலியவர்களைத் திருமணம் செய்து கொண்டான்.

## ஒருவனுக்கு ஒருத்தி

பாரதக் குருகுலத்தாரிடையே 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நிலையும் காணப்படுகிறது. சான்றாகத் திருதராட்டிரன்-காந்தாரி இதற்குச் சான்றாகத் திகழ்கின்றனர். 'கணவனுக்குக் கண் தெரியாது' என்ற நிலையில், தன் கண்ணையும் கட்டிக்கொண்டு வாழ்ந்த காந்தாரி கற்பரசியாகத் திகழ்கின்றாள். பாரதத்தில் இத்தகையவர்கள் மிகுதியானவர்களாக உள்ளனர்.

## திருமணம் செய்து கொள்ளாமல் குழந்தைப் பேறடைதல்

குந்தி இளையவளாக இருந்த காலத்தில் துருவாச முனிவருக்குக் குற்றவேல் செய்த காரணத்தினால் ஒரு மந்திரம் கற்பிக்கப் பெற்றனள். திருமணமாகாத குந்தி மந்திரத்தை ஓதச் சூரியன் தோன்றிக் குழந்தைப் பேறு அளித்தனன். ஆனால் குந்தி அக்குழந்தையை ஆற்றில் கூடையில் வைத்துவிடுகின்றாள். அவனே கர்ணன். திருமணம் ஆகாத நிலையில் குழந்தைப் பேறு தவறு என்று நினைத்த குந்தி திருமணம் ஆன பிறகு - கணவன் அருகிருக்க அவன் ஒப்புதல் பெற்றுப் பிறருடன் இணைந்து குழந்தைப் பேறு அடைய விரும்பினாள்.

## திருமணமே செய்து கொள்ளாத சபதம் பூண்ட நிலை

சந்தனு கங்கையுடன் வாழ்ந்து வீடுமனைப் பெற்றான். மீண்டும் சத்தியவதியுடன் வாழ விரும்பிய நிலையில் சத்தியவதி தன் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கே அரசுரிமை கொடுக்கவேண்டும்; அப்பொழுதுதான் திருமணத்திற்கு உடன்படுவேன் என்று கூறினாள். வீடுமன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டித் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சபதம் பூண்டு, இறுதிவரை, திருமணம் செய்துகொள்ளாமல் இருந்து வாழ்ந்து காட்டினார்.

## வெற்றி பெற்றவன் மணமுடித்தல்

அருச்சுனன்-திரௌபதி திருமணம் போட்டி அடிப்படையில் நிகழ்ந்தது. மேலே சுற்றிக் கொண்டிருக்கும் மீன் இலக்கைக் கீழுள்ள நீரில் கண்டே வீழ்த்த வேண்டும். அரசர்கள் பலரும் இப்போட்டியில் கலந்துகொண்டு முயன்று தோற்று விடுகின்றனர். அந்நிலையில் அருச்சுனன் இலக்கினை வீழ்த்தித் திரௌபதியை மணம் செய்து கொண்டான். இது வீரத்திற்கு - திறமைக்குக் கிடைத்த வெற்றியாகும். அரச குடும்பத்தினரிடையே இத்தகைய ஒரு குமுகாயப் பழக்கம் இருந்து வந்துள்ளது.

தமிழ்நாட்டில் சங்க காலத்தில் முல்லை நிலத்தில் காளையை அடக்கினவன் திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் இருந்தது. குடிமக்களிடம் நிலவிய இவ்வழக்கம் இதிகாச காலத்தில் அரச குடும்பத்தினரிடையே நிலவி வந்துள்ளதைக் காணமுடிகிறது.

## தலைவனுக்கு அடங்கி நடக்கும் பண்பு

இதிகாச காலத்தில் அரச குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்கள் அமைப்புடையனவாகக் காணப்படுகின்றன. குடும்பத் தலைவன் சொற்படி நடத்தலைக் குமுகாய அறமாகக் கருதினர். சூதாட்டத்திற்கு தருமன் உடன்பட்டதும், சூதாடியதும், நாடு, மனை, மனைவி முதலானவற்றைப் பணயமாக வைத்து இழந்து விடுகிறான். ஆனால் வீமன் முதலான நால்வரும் தன் அண்ணன் தருமரிடம் ஏன் இப்படிச் செய்தாய் என்று ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை. குடும்பத்

தலைவனுக்கு அடங்கி நடப்பது, அவன் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்வது என்ற அக்காலக் குமுகாய நிலையையே இது காட்டுகிறது. குடும்பத் தலைவன் தவறு செய்தாலும் எதிர்த்துக் கேட்பது முறையன்று என்று அக்கால மக்கள் கருதினர். அந்தத் தவறும் சில சூழலால் நிகழ்ந்தது என்றே கருதப்பட்டது. அவ்வாறு தாங்கள் செய்த செயல்களுக்கும் அமைதி கற்பித்து வாழ்ந்தனர்.

பாண்டவர்களுக்குப் பல வகைகளிலும் தீங்குகள் செய்தவன் துரியோதனன். நூற்றுவருள் விகருணன் உயர்ந்தோன்; உத்தமன். இவன் தன் அண்ணன் துரியோதனன் செய்தவை தவறு என்று எடுத்துரைத்தான். துரியோதனன் இதைப் பொருட்படுத்தவில்லை. இருந்தாலும் விகருணன் துரியோதனனை விட்டுப் பிரிந்து வந்து விடவில்லை.

இவற்றின் மூலம் குடும்ப ஒற்றுமை கருதித் தலைமையை மதித்து நடப்பது அக்காலக் குமுகாயப் பண்பு என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## ஆநிரை கவர்தல்

சங்க காலத்தில் ஆநிரை கவர்தல் நிகழ்ந்ததைப் பல பாடல்கள் காட்டுகின்றன. தொல்காப்பியத்தில் புறத்திணையியலில் வெட்சித் திணை விரிவாகப் பேசுவதைக் காணமுடிகின்றது. உலகின் பல நாடுகளிலும் பரவியிருந்த குமுகாயப் பழக்க வழக்கம் குருகுலத்தாரிடையேயும் இருந்ததை இதிகாசக் குமுகாயம் காட்டுகிறது.

செல்வத்திற்கு அடையாளமாக ஆநிரைகள் இருந்தன. அதனால்தான் ஒரு நாட்டின் மீது படையெடுப்பதற்கு உரிய காரணமாக அக்காலத்தில் ஆநிரைகளைக் கவர்வதைக் கொண்டனர். துரியோதனன் பாண்டவர் இருப்பிடத்தை அறிந்துகொள்வதற்காக விராட மன்னனுடன் நேரடியாகப் போர் தொடுக்காமல் அவனுடைய ஆநிரைகளைக் கவர்ந்தான். அருச்சுனன் பிருகந்நளை வடிவில் உத்திரன் தேர் ஓட்டக் கௌரவர்களை முறியடித்தான். ஆநிரைகளை மீட்டான்.

## பாரதப் போரின் நேர்மை

பாரதப் போர் 18 நாட்கள் நடைபெற்றது. 18 அக்ரோணி[39] படை வீரர்கள் இருதரப்பிலும் சேர்ந்து கலந்து கொண்டனர். கண்ணன் துணையினால் பாண்டவர்கள் போரில் வெற்றிபெற்றனர். போரில் வெற்றி பெறுவதுதான் குறிக்கோளாக இருந்தது. அதை எந்த வழியில் அடைந்தாலும் அடையலாம் என்பதே அன்றைய காலக் குமுகாயப் போக்காக இருந்தது. இதற்குப் பின்வரும் செய்திகள் சான்றுகளாகத் திகழ்கின்றன.

1. தருமனுடன் நேரடியாகப் போர் செய்யாமல் சூதாட்டத்தின் மூலம் நாடிழக்கச் செய்தது பாரதப் போருக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

2. கர்ணனது கவசகுண்டலங்களை இந்திரன் மூலம் கண்ணன் பெறுதல்.

3. கர்ணன் நாகக்கணையை ஒரு முறைக்கு மேல் பயன்படுத்தக் கூடாது என்று குந்தி மூலம் வரம் பெறுதல்.

4. சயத்திரதன் கொன்றை மாலையைப் பயன்படுத்திப் பாண்டவர் படைகளை முன்னேற இயலாவண்ணம் தடுத்தது.

5. கண்ணன் தூது சென்றபொழுது அசுவத்தாமனுக்குப் படைத் தலைமை நல்காவண்ணம் நூற்றுவர் தலைவனைப் பகைத்தது.

6. கண்ணன் சக்கரப் படையால் சூரியனை மறைத்து, அருச்சுனனைக் காப்பாற்றினான். அருச்சுனன் சபதப்படி சயத்திரதனைப் பொழுது மறைவதற்குள் வீழ்த்தினன்.

7. களப்பலி இடுவதற்குத் துரியோதனன் நாள் குறிக்க, கண்ணன் அமாவாசை முதல் நாள் என்று அறிவித்து அரவானைக் களப்பலி இட்டனன்.

## தருமகுணம்

ஒரு மனிதரிடத்தில் பல தீயகுணங்கள் இருப்பினும், அள்ளிக் கொடுக்கும் உள்ளன்பாகிய தருமகுணம் இருந்தால் அத்தனைத்

39. 1 அக்ரோணி என்பது 21, 870 தேர், யானை, 65,610 குதிரை, 1,09,350 காலன் கொண்ட படையாகும். சான்று: கழகத் தமிழ் அகராதி, ப.7.

தீயகுணங்களையும் அது மறைத்துவிடும். உலகம் அவனைப் புகழும்; அவன் கொடைக்குணத்தைப் பாராட்டும். இதற்குச் சான்றாக இதிகாசக் கர்ணன் விளங்குகிறான். கர்ணன் பொதுவாக நல்லவன் அல்லன். ஒரு துரியோதனன் கெட்டதற்குக் காரணம் கர்ணன்தான். துரியோதனன் செய்த கொடுமைகளுக்கெல்லாம் கர்ணன் உடந்தையாக இருந்தான். அதாவது, துரியோதனன் பீமனைக் கயிற்றில் கட்டிக் கங்கையில் எறிந்தான்; தூங்கும்பொழுது அரவினங்களை ஏவிக் கடிப்பித்தான்; உண்ணும் உணவில் நஞ்சு கலந்து கொடுத்தான்; ஆற்றில் கழுநிறைத்துக் குதிக்குமாறு செய்தான்; குடியிருக்கும் வீட்டில் கொள்ளி வைத்தான்; சூது ஆடினான்; மாது நல்லாளை மரியாதைக் குறைவாக நடத்தினான். இத்தனைக் கொடுமைகள் செய்த துரியோதனனை, ஒருமுறையேனும் கர்ணன் தடுத்து நிறுத்தி அவனுக்கு அறிவுரை பகர்ந்தானில்லை. அவன் செய்த அத்தனைக் கொடுமைகளுக்கும் கர்ணனும் உடன் இருந்து உதவி செய்தான்.

அரசவையில் எவ்வித ஆதரவும் இல்லாமல் தனியளாக நின்று அழும் கற்புடையாளைப் பார்த்து, “திரௌபதையே! உன் கணவர்கள் அடிமைகளாகி விட்டார்கள். இங்குள்ள மன்னர்களில் ஒருவனை நீ கணவனாக வரித்துக்கொள்” என்று வாய் கூசாமல் கூறினான்.

இவ்வாறு பலப்பல தீக்குணங்கள் நிறைந்த கர்ணனை உலகம் புகழ்கின்றது. இதற்கு என்ன காரணம்? அவன் வரையாது வழங்கினான். பொன்னும் பொருளும் ஈந்து அவன் இரு கரங்களும் சிவந்தன. தன் உயிர்க்கு ஆதாரமாக இருந்த கவச குண்டலங்களை ஈந்தான். ஆதலால் கொடைக்குணம் கர்ணனுடைய தீமைகளை மறைத்துவிட்டது. எனவே பல தீக்குணங்களை மறைப்பது ஈகை என்பதைக் கர்ணன் படைப்பின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

## வினைப்பயன்

உயிர்களாகிய நாம் செய்த வினை வளர்ந்து பெருகி நம்மைத் துன்புறுத்தும். அதனால்தான்,

> “முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே”[40]

என்று பட்டினத்தார் கூறினார் போலும்!

40. பட்டினத்தார் பாடல்கள்

பாண்டு மன்னன் தன் மனைவியர்கள் குந்தியுடனும், மாத்திரியுடனும் வேட்டையாடச் சென்றான். மனைவியருடன் வேட்டையாடிக் கொண்டிருந்த அவன் மட்டற்ற மகிழ்ச்சியால் மயங்கி இருந்தான். கிந்தம முனிவர் தன் மனைவியுடன் பொருந்த விரும்பி, மான் உருவம் எடுத்துப் பொருந்திக் கொண்டிருந்தார்.

பாண்டு மான்மீது அம்பு தொடுத்தான். மானின் மார்பில் அம்பு பட்டது. மிகப்பெருந்துன்பமுற்று மான் வடிவத்தை விடுத்து முனிவர் உருவங்கொண்டு,

"ஏ! பாண்டு மன்னனே! நீ வேட்டை அறத்தை விடுத்தனை. அறத்தினைக் கெடுத்தனை. இளங்குழவியான விலங்கு களையும், புணர்கின்ற விலங்குகளையும், கிழப் பருவமுள்ள விலங்குகளையும், நோய்வாய்ப்பட்ட விலங்குகளையும் கொல்லக்கூடாது என்பது வேட்டை அறம். இதை மறந்த நீ, என் மனைவியுடன் நான் மான் உருவம் கொண்டு இன்புறலானேன். என்னை வீணாக அம்பு விட்டுக் கொன்றாய், நீ உன் மனைவியுடன் இன்புறுங்கால் உன் உயிர் பிரியும்"

என்று கூறி மாண்டார். மனைவியாருடைய ஆவியும் பிரிந்தது.

பாண்டு நடுங்கி ஒடுங்கி அஞ்சினான். அவனுடைய வாழ்வின் சிகரம் இடிந்தது. தன்னுடைய ஆடம்பரமான ஆடை அணிகலன்களைக் களைந்து தன் பணியாளர்களிடம் தந்து நகருக்கு அனுப்பினான். பாண்டு துறவு பூண்டான். இதையறிந்த திருதராட்டிரன் முதலானோர் வருந்தினர். பாண்டு முனிவனாக ஆனான். அவனுடைய மனைவியரும் துறவுக்கோலம் பூண்டனர். அவன் ஒரு மரத்தடியில் நிற்பான். பால் கறக்கும் நேரம் நிற்பான். தானே கனி உதிர்ந்தால் அதை எடுத்து உண்பான். இல்லையேல் அடுத்த மரத்தடியில் நிற்பான். இப்படி எட்டு மரங்களிடம் போவான். எட்டு மரங்களிலும் கனி உதிரவில்லையானால் ஒன்பதாவது மரத்திடம் போக மாட்டான். எட்டுக் கவளம் உண்பான். ஒரு வேளையே உண்பான். அவனுடைய மனம் பற்றற்று நின்றது.

புறப்பகையை வென்ற அவன் அகப்பகையையும் வென்றான். பின்னர் இறையருளால் குந்திக்கும் மாத்திரிக்கும் ஐந்து மகன்கள் பிறந்தனர். தருமர் பிறந்த பதினாறாவது ஆண்டில் விதி வயப்பட்டு

அவன் ஒருநாள் மாத்திரியை மருவினான். அந்தக் கனமே மாண்டான். வினை மூண்டு விட்டது. அவன் செய்த வினை அவனுக்கே சென்று சேர்ந்துவிட்டது. இதுதான் வினைப்பயன் என்பது. அதனால்தான் 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்று இளங்கோவடிகளும் கூறினார்போலும்!

## நாவடக்கம்

துரியோதனன், இந்திரப்பிரஸ்தத்தில் உள்ள அரசியல் மண்டபத்தில் புகுந்த போது, குளம் அல்லாத இடத்தில் சிற்பியின் திறமையால் குளமென மயங்கி, ஆடையை இடைவரை தூக்கிக் கொண்டான். பெரிய சபையில், திரௌபதி, "இவன் தந்தைக்குத்தான் கண்ணில்லை. இவனுக்கும் கண்ணில்லையா?" என்று கூறி நகைத்தாள். ஏற்கனவே நற்குணம் அமையப்பெறாத அவன் உள்ளத்தில், அவள் கூறிய அச்சொல் அதிக வேகத்தையும் கோபத்தையும் உண்டாக்கியது. அது காரணமாகவே சூதாடிப் பாண்டவர்களை வெற்றி கொண்டான். திரௌபதியை அரசவையில் மரியாதைக் குறைவாக நடத்த முயன்றான். திரௌபதியின் நாவடக்கமின்மையால் அவளுக்கு நேர்ந்த தீங்கு அளவு கடந்து சென்றதை அறியமுடிகிறது.

## சினம்

ஆசை, சினம், பேரவா, காம மயக்கம், செருக்கு, பொறாமை என்ற ஆறையும் அகப்பகை அல்லது உள்பகை என்று கூறுவர். இந்த ஆறையும் வென்று மனிதன் அமைதி அடையவேண்டும். இவற்றுள் சினத்தால் மடிந்தவன் சிசுபாலன்.

வடமதுரையை ஆண்ட உக்கிரசேனனுடைய முதலமைச்சன் சூரசேனன். இவருக்குக் குந்தி தேவி, சாத்துவதி ஆகிய இரு பெண்களும், வசுதேவர் என்ற ஒரு மகனும் உண்டு.

குந்தி தேவியின் மூத்த மகன் தருமர் இராசசூயம் என்ற பெரும் வேள்வியைச் செய்தார். அதன் முடிவில் வீடுமனின் அறிவுரையின் பேரில் முதல் தாம்பூலத்தைக் கண்ணபிரானுக்கு வழங்கினார். இதனால் குந்திதேவியின் தங்கை சாத்துவதியின் மகன் சிசுபாலன் சீறியெழுந்தான். இவன் கண்ணனுக்குச் சிறிய அத்தையின்

மகனாவான். ஆகவே சிசுபாலனுடைய தாய்மாமன் மகன் கண்ணன். கண்ணனுக்கு வரும் பெருமையைக் கண்டு, சினம் உற்றான். கண்ணனுடன் எதிர்த்துப் போரிட்டு மடிந்தான்.

## பேராசை

பாண்டவருக்குப் பாதி நாடு சேரவேண்டும். சமாதானத்தை விரும்பிய தருமர் கண்ணனைத் தூதனுப்பி, ஐந்து வீடுகள் மட்டும் தந்தால் போதும்; ஒற்றுமையாக வாழலாம் என்று கேட்டார். மூடனாகிய துரியோதனன் ஐந்து வீடுகளைத் தந்திருந்தால் பாண்டவர் தம் சுற்றம், நண்பர் சூழ மகிழ்ச்சியாக வாழ்ந்திருப்பர். ஆனால் துரியோதனன் ஊசி நாட்டும் இடமும் தரமாட்டேன் என்று மறுத்தான். இந்தப் பேராசைக் குணத்தால் துரியோதனன் தன் குலத்துடன் மாய்ந்தான்.

## பணிவிடை

பாரத காலத்தில் முனிவருக்குப் பணிவிடை செய்வது மிக முக்கியமாகக் கருதப்பட்டது. குந்தியின் (சுவீகாரத்) தந்தை விருந்தினராக வந்த துருவாச முனிவருக்குப் பணிவிடை செய்யப் பணித்தார். துருவாச முனிவர் மந்திர சக்திக்கும், கோபப்படும் தன்மைக்கும் புகழ் பெற்றவர். பணிவிடை என்பது அழைக்கும் நேரத்தில் எல்லாம் வருவதோடல்லாமல், முனிவர் இருக்கு மிடத்தில் அவர் பார்வையில் படும்படி இருக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் முனிவர் விரும்பினால் அவருடன் படுக்கையைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். முனிவருக்கு நல்ல முறையில் குந்தி பணிவிடை செய்ததால் மகிழ்ச்சியுடன் அவ்விடத்தை விட்டு அவர் விடைபெற்றார்.

அரசனுக்குப் பிள்ளைப்பேறு பெறுவதற்கு வழியமைக்கக் குந்திக்கு ஒரு மந்திரத்தைக் கற்பித்தும் சென்றார். அந்த மந்திரம் சொல்வதன் மூலம் எந்தத் தேவனை எண்ணி அழைக்கிறாளோ அந்தத் தேவன் அவளுக்குப் பிள்ளைப்பேற்றைத் தருவான். மந்திரத்தைச் சோதிக்க வேண்டுமென்ற முழு விருப்பத்துடன் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக ஒரு மந்திரத்தைக் குந்தி உச்சரித்தாள். அந்த மந்திரம் சூரியனை அழைக்கும் மந்திரமாக இருந்தது.

சூரியனும் வந்தார். அவளுக்கு ஒரு குழந்தையும் உருவானது. குழந்தை பிறந்தவுடன் ஒரு பெட்டியில் அக்குழந்தையைப் பொன் அணிகலன்களுடன் வைத்துத் தண்ணீர் உள்ள சிறிய ஆற்றில் மிதக்க விட்டாள். கவசத்துடன் காதிற்கு அணியக்கூடிய குண்டலங்களுடனும் அக்குழந்தை பிறந்தது. அக்குழந்தைதான் கர்ணன்.

## பிற குமுகாயச் சிந்தனை

பாரதத்தில் காணப்படும் குமுகாயச் சிந்தனைகளுள் ஒருசில வருமாறு:

1. பெண்ணைப் பெருமைப்படுத்தும் விதமாக மகாபாரதத்தில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை.

2. வீடுமரின் செய்கைகள் அரசியல் பின்னணியில் நியாயமானதாக இருந்தாலும், மனித தர்மத்தின்படி இகழக் கூடியவை.

3. ஒவ்வொரு மனிதனும் நேர்மைக்குப் புறம்பான குட்டையில் சிக்க வேண்டியுள்ளது.

4. தருமத்தை மறந்த அரசன் நரகத்திற்குப் போவான். கூடவே அவனுடைய குடிமக்களையும் இழுத்துச் செல்வான்.

5. ஒரு மனிதன் குலவழக்கப்படி அவனின் இறுதிக்கடன்களைச் செய்தால்தான் அம்மனிதன் விண்ணுலகத்துக்குச் செல்வான் என்பது அக்கால நம்பிக்கையாக இருந்தது.

6. அந்தணனுக்குக் கோபம் வரக்கூடாது. பிறர் செய்த குற்றங்களைப் பொறுப்பது அவனது குலதர்மமாகும்.

7. ஆக்கத்திற்கு உதவி செய்வதே முனிவர்களின் கடமையே தவிர அழிவுக்கு ஒருபோதும் உதவி செய்யமாட்டோம் என்ற உறுதியுடன் முனிவர்கள் வாழ்ந்து வந்தனர்.

8. சத்தியத்தை விடக்கூடாது. சத்தியம் தவறியவன் நரகம் செல்வான்.

9. ஒழுக்கமுடையவர் வாயிலிருந்து வழுக்கியும் தீச்சொல் வராது.

10. எவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்கிறானோ அவன் தற்கொலை செய்து கொண்டவனாகின்றான். தற்புகழ்ச்சி என்பது தற்கொலைக்குச் சமானமாகும்.

11. பெரியவர்களை 'நீ' என்றும், 'உன்' என்றும் ஒருமையில் பேசுவது பிழையாகக் கருதப்பட்டது.

## நிறைவாக

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்களில் காணப்படும் குமுகாயத்தில் அரசியல், குடும்பம், மக்கள் வாழ்வியல் முதலானவற்றுள் ஒருசிலமட்டும் இதுவரை ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டன. சங்க காலத்திலிருந்து இக்காப்பியங்களின் கூறுகள் மக்களின் மனத்தில் என்றென்றைக்கும் நீங்கா இடம் பெற்றிருந்தமை உறுதி செய்யப்பட்டது. காலந்தோறும் இதிகாசங்களில் பயின்று வந்துள்ள நிகழ்வுகளும் மக்களின் வாழ்வியல் அறங்களும் பல்வேறு ஊடகங்களின் மூலம் பெருவழக்காக இருந்துவருவதைக் காண முடிகின்றது. இது தவிர்க்க இயலாததுமாகும்.

இராம இராச்சியத்தை உருவாக்க முயலலாம். இராமாயணத்தில் காணப்படும் குமுகாயத்தை உருவாக்க முயலலாம். ஆயின் மகாபாரதத்தில் காணப்படும் குமுகாயத்தை மீண்டும் உருவாக்க இயலாது. ஆனால் மகாபாரதத்தில் காணப்படும் நல்லனவற்றை மட்டும் எடுத்துக்கொள்வது சாலச் சிறந்தது. வாழ்வின் முன்னேற்றத் திற்கும் நல்லது.

'இராம ராம' என்று இராமனின் பெயரைப் பக்தியுடன் ஒருமுறை கூறினும், வினைகள் வெந்து நீறாகும். சகல நன்மைகளும் உண்டாகும். இதற்குச் சான்றாகத் திகழ்பவன் இராமபக்தனான அனுமன். அதேபோன்று மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ள 'பகவத்கீதை' உலக இலக்கியங்களில் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுச் சிறந்து விளங்குகிறது. இந்து சமயங்களுக் கெல்லாம் வேத நூலாகத் திகழ்கிறது. மகாபாரதம் மொழி பெயர்க்கப்பட்டதைவிடப் பகவத்கீதை அதிக அளவில் மொழி பெயர்க்கப்பட்டதிலிருந்தே இதன் சிறப்பை உணரமுடிகிறது.

மக்கள் மீது அன்பு வைக்க வேண்டும், ஆசை வைக்கக்கூடாது என்பதற்குத் தயரதனும், கோசலையும் சான்றாகத் திகழ்கின்றனர். 'பிறன் மனை நயத்தல் பெரிய பாவம்' என்பதற்கு இராவணன், வாலி போன்றவர்கள் சான்றாகத் திகழ்கின்றனர். உயிர்களாகிய நாம் செய்த வினை வளர்ந்து பெருகி நம்மைத் துன்புறுத்தும் என்பதற்குத் தயரதன், பாண்டு ஆகிய இருவரும் சான்றாகத் திகழ்கின்றனர்.

ஆணவத்தால் இராவணன் அழிந்தான்; செருக்கால் வாலி அழிந்தான்; சினத்தால் சிசுபாலன் அழிந்தான்; பேராசையால் துரியோதனன் அழிந்தான் என்பனவற்றை இரு இதிகாசங்களும் உணர்த்துகின்றன.

அகப்பற்றையும் புறப்பற்றையும் அறவே நீங்கப் பெறாதவர்கள் எத்தனைக் கோடிக் காலம் தவம் இருந்தாலும் கடவுளை அவர்களால் காணமுடியாது என்பதைக் கோசலை, சுமத்திரை, கைகேயி ஆகிய மூவர் வாழ்க்கையாலும் அறிந்துகொள்ள முடிகின்றன.

பொதுவாக இரு காப்பியங்களிலும் காணப்படுவனவற்றுள் உடன்பிறந்தார் ஒற்றுமைப் பண்பு, பெரியோரைக் காப்பாற்றுதல், கற்பின் திறம், ஒருவனுக்கு ஒருத்தி - ஒருத்திக்கு ஒருவன் என்ற நிலை, புலனடக்கம், அன்பு, அருள், தியாகம், அகப்பகையை வெல்லுதல், அகப்பற்றையும் புறப்பற்றையும் விடுதல், தந்தை சொல் கேட்டல், வினைப்பயன், பணிவு இருந்தால் பெருமை பெற்று வாழ்வில் சிறப்படையலாம், குடும்பத் தலைவனுக்கு அடங்கி நடத்தல், கொடைப்பண்பு, பணிவிடை செய்தல், சத்தியம் தவறாமை, 'அறம் வெல்லும்' என்பது போன்ற நல்லனவற்றைக் கைக்கொண்டு வாழ்வில் வெற்றி பெறுவோம்.

## பயன்பட்ட நூல்கள்

அகநானூறு மூலம் மட்டும், மர்ரே வெளியீடு, சென்னை, 1954.

அப்துல் ரகுமான், கம்பனின் அரசியல் கோட்பாடு, கவிக்கோ பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1995.

அழகிய சிங்கர் (தமிழில்), யுகாந்தா (ஒரு யுகத்தின் முடிவில்), ஐராவதி கார்வே, ஓரியன்ட் லாங்மன், சென்னை, 1994.

ஆறுமுக நாவலர், நான்காம் பாலபாடம், ஸ்ரீஆறுமுக நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளை, சிதம்பரம், ஆறாம் பதிப்பு, 1986.

இராமநாதன் செட்டியார், பொன் மீ, வில்லிபாரதச் சுருக்கம், கழக வெளியீடு, சென்னை, 1970.

இளங்கோவடிகள், சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), தியாகராச விலாச வெளியீடு, சென்னை, எட்டாம் பதிப்பு 1968.

கம்பர், கம்பராமாயணம் இராமாவதாரம், அ.ச.ஞானசம்பந்தன் (பொதுப் பதிப்பாசிரியர்), கம்பன் அறநிலை, கோயமுத்தூர், இரண்டாம் பதிப்பு 2004.

கழகப் புலவர் குழு, கழகத் தமிழ் அகராதி, கழக வெளியீடு, சென்னை, 1960.

காசிராசன், இரா, உலகக் காப்பியங்கள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1980.

கிருபானந்த வாரியார், திருமுருக, விரிவுரை விருந்து, வானதி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1974.

சாம்பசிவனார், ச.(உ.ஆ), வள்ளுவர் தெள்ளுரை, மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை, 1970.

சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1965.

சுப்பிரமணியம், வ.அய், காப்பியக் கட்டுரைகள், நெல்லை, 1952.

செந்தமிழ் திங்களிதழ், தொகுதி 3, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1903-1904.

ஞானசம்பந்தம், அ.ச., கம்பன் புதிய பார்வை, வானதி பதிப்பகம், சென்னை இரண்டாம் பதிப்பு 1986.

தாயுமானவர், திருப்பாடல்கள், கழக வெளியீடு, சென்னை, 1975.

திருநாவுக்கரசர், தேவாரத் திருப்பதிகங்கள், தருமபுர ஆதீனம், தருமபுரம், 1957.

தென்னிந்தியச் சாசனங்கள்

தொல்காப்பியர், தொல்காப்பியம் பொருளதிகாரம் பகுதி 1 நச்சினார்க்கினியர் உரை, சி.கணேசையர் (ப.ஆ), திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1948.

தொல்காப்பியர், தொல்காப்பியம் பொருளதிகாரம் பகுதி 2 பேராசிரியர் உரை, சி.கணேசையர் (ப.ஆ), திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1943.

பட்டினத்தார் பாடல்கள்

புறநானூறு மூலம் மட்டும், மர்ரே வெளியீடு, சென்னை, 1954.

மகாபாரதம்

மாணிக்கவாசகர், திருவாசகம் திருக்கோவையார், தருமபுர ஆதீனம், தருமபுரம், 1966.

மீனாட்சி சுந்தரனார், தெ.பொ, நீங்களும் சுவையுங்கள், வசந்தம் பதிப்பகம், சென்னை, 1954.

விசுவநாதன், சு, சமுதாயச் சிந்தனைகள், மங்கை பதிப்பகம், காரைக்குடி, இரண்டாம் பதிப்பு 1998.

வில்லிபுத்தூரார் மகாபாரதம், வை.மு.கோபாலகிருட்டிண மாச்சாரியார் கம்பெனி, சென்னை, 1968.

வையாபுரிப்பிள்ளை, ச, இலக்கிய உதயம், தமிழ் புத்தகாலயம், சென்னை, 1950.

வையாபுரிப்பிள்ளை, ச, கம்பன் காவியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1955.

வையாபுரிப்பிள்ளை, ச, காவிய காலம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1957.

Bhandarkar, R.C, Collected Works of Sir R.C.Bhandarkar, Vol.III.

Krishnamachariyar, History of Classical Sanskrit Literature.

Oxford History of India.

# இற்றைக் காலக் குமுகாயம்

*பொருளாதார முனைவர் மா.பா.குருசாமி*
திண்டுக்கல்

என்று தோன்றியதென்று உறுதிபடக் கூறஇயலாத மனித சமுதாயம் மாறி வருகின்றது; வளர்ந்து வருகின்றது. மானுட சமுதாய இயலார் வேட்டையாடி மீன்பிடித்து வாழ்ந்த காலத்தில் மனிதன் தனிமனிதனாகக் காடுகளில் மரப்பொந்துகளிலும், இயற்கையான மலைக்குகைகளிலும் (பிளவுகளிலும்) வாழ்ந்திருப்பானென்று கருதுகின்றனர். அவன் ஆடு, மாடுகளை மேய்த்து வாழ்ந்த காலத்தில் பாதுகாப்புக் கருதிக்கூட்டமாக வாழ்ந்தான். அக்காலக்கட்டத்தில் நாடோடி வாழ்க்கை முறை உருவாயிற்று.

மனிதன் வேளாண்மை செய்து வாழ்ந்த பொழுது நிலையான குடியிருப்பு அமைந்தது. கூட்டுவாழ்க்கை முறைக் கட்டமைப்பான சமுதாய வாழ்க்கையாக வடிவெடுத்தது. இக்காலத்தில் அறநெறியாளர்களும், சமயச் சான்றோர்களும் வையத்துள் வாழ்வாங்கு வாழ நெறிமுறைகளை வகுத்தளித்தனர். தனிமனிதன், குடும்பம், சமுதாயம், உலகம் என்ற விரிந்து செல் வட்டத்தில் (Oceanic Circle) பன்னெடுங்காலத்திற்கு முன்பே வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக்கொண்ட பெருமை தமிழனுக்கு உண்டு.

தொழில் வளர்ச்சி, வாணிப வளர்ச்சி, அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி என்று பல வளர்நிலைகளுக்கு ஆட்பட்டு அமைந்திருப்பது தான் இற்றைக்காலச் சமுதாயம். ஒரு நீண்டகால வரலாற்று - பண்பாட்டுப் பின்புலத்தோடு, தற்கால அகப்புற ஆக்கங்களுக்கும் தாக்கங்களுக்கும் ஈடுகொடுத்தும், உள்வாங்கியும், எதிர்த்தும், மாறிக்கொண்டும் இருக்கின்ற தற்காலச் சமுதாயத்தை ஆய்வதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. இருந்தாலும் தற்காலச் சமுதாயத்தை ஆய்வது எதிர்கால வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் துணை செய்யும் என்பதால் இவ்வாய்வினை மேற்கொள்கின்றோம்.

## கால வரையறை

“இற்றைக் காலம்” என்பது நிகழ்காலம் எனப் புரிந்து கொள்கின்றோம். இதனை ஒரு சமுதாய வாழ்க்கையோடு இணைத்து எண்ணிப் பார்க்கின்றபொழுது, “இதன் தொடக்கம் எது?” என்ற கேள்வி பிறக்கின்றது.

“நேற்று - இன்று - நாளை” என்ற நாள் கணக்குத் தெளிவானது. ஆனால் கடந்த காலம், தற்காலம், எதிர்காலம் என்று சமுதாய வளர்ச்சியோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றபொழுது, காலக் கணக்கில், வரையறுத்தலில் சிக்கல் வருகின்றது.

நாம் கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தை, அதாவது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் இந்த நூற்றாண்டின் இன்று வரை, “இற்றைக் காலம்”, என்று ஆய்வுக்காக வரையறுத்துக் கொள்ளலாம்.

இன்றைய நாம் வாழ்கின்ற சமுதாயம் தொடர்ந்து மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கின்றது. கல்தோன்றி, மண்தோன்றாத் தொன்மைக் காலத்தே தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி என்பதைப் பதிவு செய்துள்ளனர். ஆனால், சங்க காலத்திலிருந்து இன்று வரை தமிழ்ச் சமுதாயம் ஒவ்வொரு காலத்திலும் இருந்த நிலையை எடுத்துரைக்கும் வரலாற்றுச் சான்றுகளையும், ஆவணங்களையும் முறையாகக் கட்டிக்காத்து வைக்கவில்லை. கிடைத்திருக்கின்றவற்றில் இலக்கியச் சான்றுகள் ஓரளவு நமக்கு உறுதுணையாக உள்ளன.

இற்றைக் காலச் சமுதாயம் நேற்றைய சமுதாயத்தின் தொடர்ச்சி. கடந்த காலச் சமுதாயத்தின் அடிப்படையில் கட்டப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டு நமது வாழ்வுக்கும் வளத்துக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற களமாக இருக்கும் இன்றைய சமுதாயம் புறத்தில் தோன்றுவதைவிட அகத்தில் சிக்கலானது; பல முரண்பாடுகளைக் கொண்டது.

## அணுகு முறை

இன்றைய சமுதாயத்தை முறையாகவும், சரியாகவும் புரிந்த கொள்ளத்தக்க அணுகுமுறை தேவை. நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமுதாயம் என்பதால் அதன் அமைப்பு முறையில்,

இயக்கத்தில் நாமும் பங்காளிகளாக இருப்போம். சமுதாயத்தால் நாம் பெற்ற பயன்களும் இருக்கும்; பாதகங்களும் இருக்கும். ஆதலால் ஒவ்வொன்றைப் பற்றியும் வாழும் மனிதர்களுக்குத் தற்சார்பு அகக் கண்ணோட்டம் (Subjective Outlook) இருக்கும். ஆனால் ஆய்வில் காய்தல் உவத்தல் அகற்றி, நடுநிலை நின்று புற ஆய்வுக் கண்ணோட்டத்தோடு (Objective Outlook) அணுக வேண்டியது தேவையாகின்றது.

தற்காலம் என்பது கடந்த காலத்தின் விளைவாக இருப்பதைப் போன்றே எதிர்கால மாற்ற, வளர்ச்சி விதைகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. நாளையப் புதுமை இன்று தொடங்கிவிடும். இன்று நம்மால் அவற்றை இனங்காண முடியாமல் இருக்கலாம். சில மாற்றங்களின் தொடக்கம் இன்று அதிர்ச்சியளிப்பதாக, அச்சுறுத்துவதாக இருக்கலாம். அதனால் அவற்றை ஏற்க மறுக்கலாம்; எதிர்க்கலாம். எடுத்துக்காட்டாக, உலகம் தட்டை என எண்ணிக் கட்டுக் கதைகளைக் கட்டி வைத்த மனிதன் உலகம் உருண்டை என்று கூறியவனைக் கண்டு மருண்டதைக் கூறலாம்.

இற்றைக்காலச் சமுதாயம் ஒவ்வொன்றிலும் மாறி வருகின்றது. ஒவ்வொன்றிலும் நன்மைகளும் இருக்கலாம்; குறைகளும் காணப் படலாம். மாற்றத்தை, வளர்ச்சியை இனங்காட்டுவது ஆய்வின் நோக்கமாகின்றது.

மனிதனைச் 'சமுதாய விலங்கு', (Social Animal) அரசியல் விலங்கு (Political Animal) என்று தொன்மைச் சிந்தனையாளர்கள் குறிப்பிட்டார்கள். ஏனெனில் தனித்து வாழ்வதல்ல மனித இயல்பு. கூடி, இணைந்து வாழ்வதால் மனிதன் விரைந்து வளர்கின்றான்; கோடி நன்மைகளைப் பெறுகின்றான். ஒரு மனிதன் மற்றவர்களோடு கொள்கின்ற உறவுகள்தான் ஒரு நெய்கின்ற ஆடையின் ஊடிழை, நேர் இழை நூல்கள் போல் சமுதாய அமைப்பிற்கு வண்ணம் சேர்க்கின்றன. ஒவ்வொரு சமுதாய நடவடிக்கையிலும் ஊடாடும் உறவுகளைப் பற்றி அறிகின்ற பொழுதுதான் சமுதாயத்தின் மேன்மையினை உணரமுடியும். ஆதலால் அவற்றைப் பற்றிய ஆய்வும் தேவைப்படுகின்றது.

சமுதாய ஆய்வென்பது ஓர் ஒருங்கிணைந்த ஆய்வாக இருக்க வேண்டும். அறிவு வளர்ச்சிக்காகக் கூட்டு வாழ்க்கையைச் சமுதாயம்,

பொருளாதாரம், அரசியல், சமயம் என்று பகுத்தும், தொகுத்தும் பார்க்கலாம். ஆனால் உண்மையில், நடைமுறையில் இந்த நான்கு கூறுகளும் வாழ்க்கையில் பிண்ணிப்பிணைந்து, பிரிக்க முடியாமல் ஒன்றுபட்டிருப்பதைக் காணலாம். இதனைக் கீழ்க்கண்ட வரைபடம் விளக்குகின்றது.




வரைபடத்தில் கூட்டுவாழ்க்கையை முழுவட்டமாகவும் அதற்குள் ஒவ்வொரு முக்கால் வட்டத்திலும் சமுதாய, அரசியல், பொருளாதாரச் சமய வாழ்க்கையைக் குறித்துள்ளோம். ஒன்றில் மற்றவற்றின் ஆக்கமும் ஆதிக்கமும் இருப்பதனை, ஒரு முக்கால் வட்டத்தில் மற்றைய முக்கால் வட்டங்களின் பரவலிலிருந்து அறியலாம்.

இந்தப் பிணைநிலையை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் உணர்த்தலாம். குடும்பம் என்பது சமுதாயப் பிரிவில் அடங்குவதாகத் தோன்றுகின்றது. இதில் பொருளாதார ஆற்றல் எவ்வளவு வலுவானதென்பதை, ஒரு கூட்டுக் குடும்பத்தில் தந்தையின் வருவாயைச் சார்ந்திருக்கின்றவரை ஒன்றாக இருக்கும். உடன் பிறந்தோர் தனித்தனியாக ஏற்றத்தாழ்வான வருவாயால் பிரிவதும், பிணக்குகள் ஏற்படுவதும் அன்றாட நிகழ்வு. குடும்ப வாழ்வின் உயிர்நாடியான திருமணத்தை வயது வரம்பு, பதிவு, விலக்கு, சொத்துப் பிரிவு என அரசியல் சட்டம் கட்டுப்படுத்துகின்றது. இது அரசியல் செல்வாக்கு. பெண்ணைத் தீர்மானிப்பது, திருமண நடைமுறை, பிறப்பிலிருந்து இறப்புவரை சடங்குகள் எனச்சமயம்

குடும்ப வாழ்வில் ஊடுருவி நிற்கின்றது. ஆய்ந்து பார்த்தால் ஒவ்வொன்றிலும் மற்றவற்றின் செல்வாக்கும், சொல்வாக்கும் இருப்பதனைக் காணலாம்.

இந்தப் பொதுவான கருத்துக்களைக் கவனத்தில்கொண்டு இற்றைக்காலச் சமுதாயத்தின் பொதுவான கூறுபாடுகளையும், ஒளிமயமான பகுதிகளையும், நிழல் படிந்த பகுதிகளையும், ஆட்டிப் படைக்கும் ஆற்றல்களையும், எதிர்பார்க்கும் மாற்றங்களையும் எண்ணிப் பார்ப்போம். இந்த ஆய்வில் கிடைக்கும் கருத்து விதைகள் மேலும் நுண்ணிய ஆய்வுக்குப் பயன்படலாம்.

## பொதுவான கூறுகள்

ஒவ்வொரு சமுதாயத்தையும் இனங்காட்டக்கூடிய சில பொதுவான கூறுபாடுகள் (Facts) இருக்கும். தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அதற்கொரு குணமுண்டு, என்று நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் தமிழினத்திற்குரிய தனித்துவப் பண்பாட்டினைச் சுட்டிக்காட்ட முயல்கின்றார். நாம் நமது சமுதாயப் பொதுமைகளில் குறிப்பிடத்தக்க இன்றைய இயல்புகளை விளக்கலாம்.

### 1. அடித்தள அமைப்பு

நமது சமுதாயத்தின் அடித்தள அமைப்பு, மூல அலகு குடும்பம். பெரும்பாலான சமுதாயங்களில் குடும்பம்தான் சமுதாயக் கட்டுக் கோப்பின் ஆணிவேராக இருக்கின்றது.

பழந்தமிழர் சமுதாயத்தில் ஒரு குடும்பத்தில் உள்ளவர்களின் பொறுப்புக்கள் தெளிவாக வரையறுக்கப் பெற்றிருந்தன. "ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே; சான்றோனாக்குதல் தந்தையின் கடனே", என்ற சங்க காலப்புலவனின் பாடல் தமிழர்கள் வகுத்துக் கொண்ட குடும்பக் கடமைகளை உறுதிபடக் கூறுகின்றது. 'அகம், புறம்' என்ற வாழ்வியல் பாகுபாட்டின் ஆதாரம் குடும்ப வாழ்க்கை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ இல்வாழ்க்கை ஏற்ற வழிமுறையாக இருப்பதை வான்புகழ் வள்ளுவர் கூறினார். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகும், வியத்தகு புற அறிவியல் -

தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டபோதிலும் இன்றும் குடும்பத்தின் மேன்மையை உணர்ந்து வாழ்ந்து வருகின்றோம். "நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்" என்ற பாவேந்தரின் கருத்து இன்றும், என்றும் குடும்பத்தின் சிறப்பினை உணர்த்துகின்றது.

இற்றைக் காலத்தொடக்கத்தில் இருந்த குடும்ப வாழ்க்கையிலிருந்து பெரிதும் மாறியதாக இன்றையக் குடும்பங்கள் உள்ளன. நூறாண்டுகளுக்கு முன்னால் இன்றுள்ள பொருள்வளம் இல்லை. அன்பையும் அறத்தையும் பண்பாகவும் பயனாகவும் கருதியதால் பெரும்பாலான குடும்பங்களில் அன்புசார் உறவுகள் ஆழமாக இருந்தன. அன்றைய குடும்பங்களைச் சிற்றூர்க் (கிராம) குடும்பங்கள், நகரக் குடும்பங்கள் என இரு வகைகளாகப் பகுக்கலாம். சிற்றூர்க் குடும்பங்கள் வேளாண்மையையும் வேளாண் சார் தொழில்களையும் சார்ந்திருந்ததால் குடும்ப வாழ்க்கை இயல்பானதாக, எளிமையானதாக இருந்தது. நகரக் குடும்ப வாழ்க்கை பெருந்தொழில்களை, வாணிபத்தை அரசுப் பணியைச் சார்ந்ததாக இருந்தது. ஆதலால் ஆடம்பரம் அதன் இயல்பாயிற்று.

இன்றையக் குடும்பங்களைப் பல வகைகளாகப் பகுக்கலாம். குடும்பங்கள் அமைந்திருக்கின்ற சுற்றுச்சூழல் (இடம்), குடும்பங்களின் பொருள் வளம், குடும்பத்திலுள்ளவர்களின் கல்வி நிலை, செய்யும் தொழில்கள், அரசியல் செல்வாக்கு, குடும்பத்தி லுள்ளோர் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் வகை வகையாகப் பிரிக்கலாம்.

எடுத்துக்காட்டாகப் பொருளாதாரம் சார் குடும்பப் பகுப்பினைக் கூறலாம். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது தற்காலத் தொடக்கத்தில் மேல்நிலைக் குடும்பங்கள், இடைநிலை, அடிநிலைக் குடும்பங்கள் எனப் பிரித்தோம். ஒரு குடும்பம் எந்த நிலையைச் சேர்ந்ததென்று கூறினால் அதன் உள்ளார்ந்த இயல்பினை ஓரளவு கூறலாம்.

இன்று மேல்நிலை என்பவர்களிடமும் வருவாய், சொத்துக்களில் மிகுந்த வேறுபாடு வந்துவிட்டது. இலட்சக் கணக்கில் வருவாய் பெறுபவர்களும், கோடிக்கணக்கில் செல்வத்தைக் குவிப்பவர்களும் உள்ளனர். ஆதலால் இவர்களை

வகைப்படுத்தத் "தாழ் மேல் மட்டம்; உயர் மேல்மட்டம்," என்று பாகுபடுத்துவது தேவையாகின்றது.

இதனைப் போன்று நடுத்தர, கீழ்த்தட்டுக் குடும்பங்களையும் பார்க்கலாம்.

பொதுவாகத் திருமணங்கள் அந்தந்தக் குடும்ப வகைப் பாட்டின்படி நடைபெறுவதைக் காணலாம். சாதி, மதங்களைச் சார்ந்து திருமணங்கள் நடைபெறுவது நமது சமுதாயத்தின் மாறி வருகின்ற ஓர் இயல்பு. பொருளாதாரச் சமநிலையில் திருமணங்கள் நடைபெறுவதே வளர்ந்து வருகின்றது. எதிர்காலத்தில் சாதி-சமயச் சார்பு குறையப் பொருளாதாரக் கரணிகளை ஒட்டியே திருமணங்கள் தீர்மானிக்கப்படுமென்று கருதலாம்.

• கூட்டுக் குடும்பங்கள் சீர்குலைந்து, தனிக் குடும்பங்களாக மாறி வளர்கின்ற காலக்கட்டத்தில் வாழ்கின்றோம். இதற்குப் பல வகையான ஏதுக்கள் உள்ளன. அவற்றில் வலுவானதாகப் பொருளாதாரக் கரணி உள்ளது.

வேளாண், கிராமத்தொழில் சார் குடும்பங்கள் பெரிதும் கூட்டுக் குடும்பங்களாக இருந்தன. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரும் ஒரே தொழிலைச் செய்தனர். உழைப்புச் செறிவுடைய தொழில்களில் குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும் அந்தத் தொழிலில் வேலை வாய்ப்பு இருந்தது. எளிதாகத் தொழிலை விரிவாக்கம் செய்து கொண்டார்கள். பெண் கொடுப்பதும் எடுப்பதும் உறவுக்குள், ஒரு சாதிக்குள், உள்ளூர், பக்கத்து ஊரில் வைத்துக்கொண்டனர். இந்த உறவுகளில் பணத்தின் பங்கு குறைவு. வரதட்சணை போன்ற திருமணப் பேரம் இல்லை. உறவு முறையால் ஒன்றுபட்ட குடும்பங்கள் அன்பால் கட்டுண்டு வாழ்ந்தனர். ஆற்றலுக்கேற்ப உழைத்து, தேவைக்கேற்பப் பெற்றுக்கொள்கின்ற குடும்பச் சமத்துவம் பொருளாதாரம் இருந்தது.

இக்காலத்தில் குடும்பத்தின் கட்டமைப்பில், உறவு முறைகளில் மாற்றம் ஏற்படுகின்றது. கற்ற கல்வியால், பெற்ற வேலை வாய்ப்பால், நன்றாக, வளமாக வாழவேண்டுமென்ற வேட்கையால் பிள்ளைகள் வேலை தேடிப்பிற இடங்களுக்குச் செல்கின்றனர். பிறந்த ஊரிலேயே இருக்கவேண்டுமென்ற கருத்து மாறிவிட்டது.

மிகுதியான வருவாய் கிடைக்குமென்றால் வெளிநாடுகளுக்குச் செல்வதையும் இன்றையத் தலைமுறையினர் இயல்பாக ஏற்றுக் கொள்கின்றனர்.

நகரங்களில் தொழில், வாணிபப் பெருக்கத்தாலும், நகர விரிவாக்கத்தாலும் புதிய சேவைப் பணிகள் தோன்றிக் கொண்டிருப்பதாலும் உடல் உழைப்பாளர்களுக்கும் மூளை உழைப்பாளர்களுக்கும் வேலைகள் கிடைக்கின்றன. தொழிற்கல்விப் பெருக்கம், அரசுப் பணிகள் எனக் கிராமங்களிலிருந்து ஆற்றல் உள்ளவர்கள் எல்லாம் வெளியேறிவிட்டனர். திருமண உறவுகளும் மாறின. கிராமங்களில்தான் கூட்டுக்குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமைந்திருந்தது. தற்காலத்தில் அவை சீர்குலைந்து விட்டன.

நமது குடும்ப வாழ்க்கையின் மேன்மை கூட்டுக் குடும்பங்களில் சிறப்பாக வெளிப்பட்டது. ஆதலால்தான் அறிஞர்கள் நமது குடும்பங்களைப் பண்பாட்டின் தொட்டில்கள், நயத்தகு நாகரிகத்தின் நாற்றங்கால்கள் என்று போற்றினர். அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராதல் போல இங்குப் பல உயர்ந்த மரபுகள், பழக்க வழக்கங்கள் பின்பற்றப்பெற்றதற்கு நமது குடும்பங்கள்தான் காரணம். இன்றும் குடும்ப நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் எனக்கூடி மகிழ்வதற்குக் கூட்டுக்குடும்ப அமைப்பும், தொடர்பும்தான் மூல ஆதாரம் எனப் பார்க்கின்றோம்.

இன்று பெரும்பாலான குடும்பங்கள் பெற்றுப்பேணி வளர்த்த பிள்ளைகளின் திருமணத்திற்குப் பின் பிரிந்துவிடுகின்றன. பெற்றோர்கள் தனியாகவும், பிள்ளைகள் தனியாகவும் வாழ்கின்றனர். கணவன், மனைவி இருவரும் வேலை பார்ப்பவர் களாக இருந்தால் தனிக்குடும்பம்தான் ஏற்றதாகத் தோன்றுகின்றது.

இந்தத் தனிக்குடும்ப அமைப்பு முறையில் பெரிதும் பாதிக்கப் படுகின்றவர்கள் முதியவர்களும் சிறுவர்களும்தான். கூட்டுக் குடும்பத்தில் வயதானவர்களை வீட்டில் உள்ளவர்கள் பேணிக் காப்பார்கள். எந்தக் கவலையுமில்லாமல் முதியவர்கள் வாழ முடிந்தது. அதுதான் உண்மையான ஆயுள் காப்பீட்டுத் திட்டம். இன்றைய வாழ்க்கை முறையில் பிள்ளைகள் பெற்றோர்களுக்கு மாதா மாதம் பணம் அனுப்ப ஆயத்தமாக இருக்கலாம். அவர்களால்

உடன் வைத்துப் பராமரிக்க இயலவில்லை. முதியோர் காப்பகங்களின் பெருக்கத்திற்கு இதுவே காரணம். முதியோர் இல்லங்களில் உணவு, உடை, உறைவிடம் கிடைக்கலாம். ஆனால் எதிர்பார்க்கும் அன்பு கிடைக்காததே பல முதியவர்களுக்குச் சிக்கல் கூட்டுக் குடும்பங்களில் பிள்ளைகளை வளர்ப்பது தனிக் கலையாக இருக்கும். பிறந்தது முதல் பள்ளி செல்லும் வரை பிள்ளைகளைச் சோறூட்டி, சீராட்டி வளர்க்கும் பொறுப்பினைப் பாட்டிகள் ஏற்றுக் கொள்வார்கள். பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுவது, சில நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுப்பது, வெளியில் அழைத்துச் செல்வது போன்ற பொறுப்பினைத் தாத்தாக்கள் ஏற்பார்கள். இன்று தனிக்குடும்பங்களில் இத்தகைய வாய்ப்பு இல்லை. ஆதலால் வேலை செய்கின்ற பெற்றோர் முதலில் குழந்தைகள் காப்பகங் களிலும், பின்பு மழலையர் பள்ளிகளிலும் விட்டு வளர்க்கின்றனர். பல பிள்ளைகளிடம் தோன்றுகின்ற சிக்கல்களுக்கு வளர்ப்பு முறைதான் காரணமென உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இன்று பல குடும்பங்களில் வாழ்க்கை எந்திர கதியில் நடைபெறுகின்றது. வாணிப வாழ்க்கை முறையால், நிறையப் பணம் தேட வேண்டுமென்ற வேட்கையால் கற்ற கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்கின்றனர். நிறைய வருவாய் கிடைக்கலாம். ஆனால் கணவனும் மனைவியும் பேசக்கூட நேரமில்லாமல் வருவாய் தேடிவிட்டு வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு அல்லற் படுகின்றனர். அவர்களுக்குக் குடும்ப வாழ்க்கையே ‘அகப்பொருள்’ அற்றதாக, வாழ்க்கை சோலைவனமாகத் தோன்றுகின்றது.

பலரின் குடும்ப வாழ்க்கை சீராகவும், செம்மையாகவும் அமையாததற்குக் காரணம் இன்றைய திருமணத் தீர்மான முறைகள். வாழ்க்கையின் ஆதாரமான திருமணத்தைக்கூட இளைஞர்கள் கணிப்பொறி மூலமும், கைபேசி (Cellphone) மூலமும் தீர்மானிக்க முயல்கின்றனர். பெண்ணைப் பெற்றவர்கள் விரைவில் திருமணத்தை முடித்துப் பொறுப்பை நிறைவேற்ற எண்ணுகின்றனர். பிள்ளைகளைப் பெற்றவர்கள் மனப்பொருத்தத்தைவிடப் பணப் பொருத்தத்தையே பார்க்கின்றனர். திருமண அங்காடியில் ‘ஜாதகம்’, ‘ஜோதிடம்’ ஆகியவற்றின் பங்கும் இருக்கின்றது. மொத்தத்தில் இத்தகைய பெரும்பாலான திருமணங்கள் சரியாக அமையாததால் ‘திருமண விலக்கு’ என்பது இயல்பானதாகிவிட்டது.

இக்காலத்தில் ஒரு சிலரின் திருமண வாழ்க்கைமெல்லிய பூங்காற்று வீசுகின்ற மேடையாக இருக்காமல், திக்குத் தெரியாத காட்டுப் பாதையாகின்றது. இத்தகைய சிக்கல்களைத் தீர்த்தால்தான் குடும்ப வாழ்க்கை இனிமையாக அமையும்.

## பெண்கள் நிலை

எந்த ஒரு சமுதாயத்திலும் செம்பாதியாக இருப்பவர்கள் பெண்கள். ஆனால் அவர்களை எங்கும் சரிநிகராக நடத்தியது இல்லை. தமிழகத்திலும் இதுதான் நிலை. ஒரு சமுதாயம் தரத்தால் உயர்ந்திருக்கின்றதாவென்பதை அதிலுள்ள பெண்களின் நிலையைக் கொண்டு அறியலாம்.

இற்றைக் காலத் தொடக்கத்தில் மிகவும் அவல நிலையிலேயே பெண்கள் இருந்தனர்; நடத்தப்பட்டனர். அவர்கள் பட்ட துன்பத்தைக் கண்டு நெஞ்சு பொறுக்காத மகாகவி பாரதியார் அன்றைய பெண்களின் நிலையை அப்படியே தமது கவிதைகளில் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளார்.

பெண்களின் அடிமைத்தனம் தீர முதன்முதலில் குரல் கொடுத்தவர் மகாகவி பாரதியார். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்கின்ற விந்தை மனிதர்கள் காலத்தில் வாழ்ந்தவர் அவர். ஆதலால் நாட்டு விடுதலையைப் பாடும்பொழுது 'பெண் விடுதலையை' முன்வைத்துப் போர் முரசு கொட்டுகின்றார். அதில்,

*"மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமை யைக்கொ ளுத்துவோம்;*
*வைய வாழ்வு தன்னில் எந்த*
*வகையி னும்ந மக்குள்ளே*
*தாதர் என்ற நிலைமை மாறி*
*ஆண்க ளோடு பெண்களும்*
*சரிநி கர்ச மான மாக*
*வாழ்வம் இந்த நாட்டிலே"*

என்று பாடுகின்றபொழுது, இருந்த நிலையையும் கூறி எந்த நிலைக்கு உயரவேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றார்.

மகாகவியின் 'புதுமைப் பெண்', 'பெண்கள் வாழ்க!', 'பெண்கள் விடுதலைக் கும்மி', 'பெண் விடுதலை' ஆகியவை எல்லாம் அன்றிருந்த மாதர்நிலையை உணர்த்துகின்றன. பெண்களின் எழுச்சியை, புரட்சியை எதிர்நோக்கி அவர்களைத் தட்டி எழுப்புகின்றன.

பெரும்பாலான பெண்களை வீட்டில் அடிமைகளாக, உரிமைகளற்ற விலங்குகளாக நடத்தினர். அவர்கள் எல்லா நிலைகளிலும் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தனர். அப்பொழுது நமது நாடு அடிமைப்பட்டிருந்தது. நாட்டின் விடுதலையே பெண் விடுதலைக்குப் பின்தான் பெறமுடியுமென்பதைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

> "பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்என் கின்றீரோ?
> மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
> பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
> மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே,"

என்று முழங்கினார்.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே நமது நாட்டில் பெண் விடுதலை இயக்கம் தோன்றியது. அண்ணல் காந்தியடிகள் மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு, நூற்பு போன்ற நிர்மாணப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்தினார். பெரியார் இராமசாமி போன்றவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்கு உற்றதுணையாக இருந்தனர். டாக்டர் சௌந்தரம், டாக்டர் முத்துலட்சுமி முதலிய பெண் தலைவர்கள் தோன்றினார்கள்.

பெண்களின் முன்னேற்றத்திற்கு முதல்படியாகப் பெண் கல்வியில் கவனம் செலுத்தினர். பெண்கள் அறிவில் வல்லவர்களாக இருந்தால்தான் அவர்கள் பெறும் பிள்ளைகள் ஒளிச்சுடர்களாக விளங்குவர் என்பதை அறிவுறுத்தினர். அன்றைய மாற்றநிலைப் பாட்டினை மகாகவி பாரதியார்,

> "ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
> றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்"

என்று கடுமையாக எடுத்துரைத்தார்.

அன்று பெண்கள் பட்ட துன்பங்களும், தொல்லைகளும் எழுத முடியாது. அறியாப் பருவத்தில் சிறுமிகள் திருமணம் (பால்ய விவாகம்), இளம் பெண்ணை வயதானவருக்கு வாழ்க்கைப் படச் செய்யும் பொருந்தாத் திருமணம், கணவனை இழந்த பெண்ணுக்கு மறுமண உரிமை மறுப்பு, மணமகனுக்குப் பொருட்கொடை (சீதனம்) என்று பல வழிகளில் பெண்களை வாட்டினர். இப்படிப்பட்ட கொடுமைகளிலிருந்து பெண்களை மீட்க ஆங்காங்கு இயக்கங்கள் தோன்றின. இதனால் மக்களிடம் விழிப்புணர்வும் பெண்களிடம் எழுச்சியும் தோன்றின.

1947இல் நாடு விடுதலை பெற்ற பிறகு பெண்களிடம் விரைவான முன்னேற்றம் ஏற்பட அரசு சட்டங்களைக் கொண்டுவந்தது. சிறுமிகளின் திருமணம் தடைசெய்யப்பட்டது. விதவைகளுக்குத் திருமண உரிமை கிடைத்தது. பெண்கள் கற்பதற்கெனப் பள்ளிகள், கல்லூரிகள் தோன்றின. வயதுவந்த பெண்களுக்கெல்லாம் வாக்குரிமை கொடுத்ததால் அவர்களது மதிப்பு உயர்ந்தது.

ஒரு பக்கம் பெண்கள் கல்வியறிவு பெற்று, ஆண்களோடு போட்டியிட்டுத் தேர்வுபெறுகின்ற அளவிற்கு ஆற்றல் உள்ளவர்களாக முன்னேறியிருக்கின்றனர். மறுபக்கம் அரசியலில் இடஒதுக்கீட்டின் விளைவாகப் பலர் தலைவிகளாக உள்ளனர். மாநில முதல்வர்களாகவும், தலைமை அமைச்சர், இந்தியக் குடியரசுத் தலைவராகவும் பெண்கள் சிறப்புப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது நாடெங்கும் பெண்களுக்கெனச் சுயஉதவிக் குழுக்களை அமைத்துப் (Self-Help Groups) பெண்களுக்கு ஆளுமை மற்றும் சொந்தத் தொழில் நடத்தப் பயிற்சிகள் தருகின்றனர். இதனால் பெண்களிடம் தன்னம்பிக்கையும் தற்சார்பும் ஏற்பட்டுள்ளன. இக்காலத் தொடக்கத்தில் இருந்த நிலையோடு ஒப்பிடும்பொழுது கடந்த ஐம்பதாண்டுக்காலப் பெண்களின் வளர்ச்சி பாராட்டும் வகையில் உள்ளது.

இருந்தாலும், இந்த முன்னேற்றமும் வளர்ச்சியும் எல்லாப் பெண்களுக்கும் கிடைக்கவில்லை. இன்றும் வன்கொடுமைக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாகும் பெண்கள் உள்ளனர். திருமணத்தின்

போது பெண்களிடம் கட்டாயப்படுத்தி நகை, ரொக்கம் பெறுவதும், மேலும் பணம் கேட்டுத் தீக்குளிக்கச் செய்வதும், பெண்கள் வேலை செய்யும் இடங்களில் பாலியல் வன்முறைக்கு ஆளாவதும், சட்டத்தில் வழங்கப்பட்ட சொத்துரிமை போன்றவை கைக்கு எட்டியும் வாய்க்குக் கிடைக்காமலிருப்பதும் பெண்களின் முன்னேற்றத்திலுள்ள குறைகளாகச் சுட்டிக்காட்டப் பெறுகின்றன.

பெண்கள் மேலும் உறுதியோடு தங்களது உரிமைகளை நிலை நாட்ட ஓர் இயக்கமாகச் செயல்படுவது காலத்தின் தேவையாகும். வருங்காலத்தில் இன்று இருப்பதைவிடப் பெண்கள் மேலும் ஒளிமயமான சூழலில் வாழ்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

### 3. சாதிய அமைப்பு முறை

நீண்ட நெடுங்காலமாக நமது சமுதாயத்தைச் 'சிக்'கெனப் பிடித்து ஆட்டிப் படைத்துக்கொண்டிருப்பது சாதியம். தொழிலின் (வேலைப் பகுப்பின்) அடிப்படையில் தோன்றிய ஒரு பகுப்புமுறை காலப்போக்கில் பிறப்பினடிப்படையில் மாறிச் சமுதாய ஏற்றத் தாழ்விற்கு மூலமாகிவிட்டது. வரலாற்று நோக்கில் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற நான்கு வருணப் பகுப்புக்கும், சாதி அமைப்புக்கும் உள்ள தொடர்பு தெளிவாக இல்லை. இன்றும் பல சாதிக்காரர்கள் தங்களைச் 'சத்திரியர்' எனத் தங்களுக்குத் தாங்களே முத்திரை குத்திக்கொள்வதைக் காணலாம்.

சாதியத்தின் தொடக்கம் எப்படி இருந்தாலும் இந்த அறிவியல் தொழில்நுட்பக் காலத்திலும் அதன் ஆதிக்கம் வலுவாக இருக்கின்றது. சாதிகளை ஏற்றுக்கொள்ளாத கிறித்தவ மதம் பரவியது. ஆனால் அது சாதிப் பகுப்புமுறையை ஒழிப்பதற்கு மறுதலையாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இற்றைக் காலத் தொடக்கத்தில், விடுதலை வேட்கைத் தீயை மூட்டிய மகாகவி பாரதியார், "ஆயிரம் உண்டிங்கு சாதி" என்று இருக்கின்ற நிலையைக் கூறி,

"ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்

வேதிய ராயினும் ஒன்றே - அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே"

என்று சமத்துவம் பேசினார்.

சாதி பேதத்தால் (மக்களைப் பகுத்ததால்) சங்க காலத்திலேயே ஏற்றத்தாழ்வு தோன்றியிருக்கலாம். ஆதலால்தான் வள்ளுவப் பெருந்தகை, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று ஒரு பொதுமைக் கொள்கையை வாழும் வழிமுறையாகக் கற்பித்தார்.

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் சாதியும் மிகவும் கடுமையாகவும் கொடுமையாகவும் பின்பற்றப்பட்டது. ஐந்தாவது பிரிவாக (பஞ்சமா சாதி) மக்களில் ஒரு பகுதியினரைத் தாழ்த்தித் தீண்டத்தகாதவர்கள் என மேல்சாதியினர் ஒதுக்கிவைத்தனர்.

அன்றிருந்த சாதிக்கொடுமைகளை எதிர்த்து ஆன்மீகச் சான்றோர்களும் குரல் கொடுத்தனர். அவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் வள்ளல் பெருமான். அவர்,

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே"

என்று கூறியதிலிருந்து மக்கள் நிலையை உணரலாம்.

அண்ணல் காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தை மேற்கொண்டார். ஐந்தாம் சாதியினர் என்று ஒதுக்கிவைக்கப்பட்ட மக்களை 'ஹரிஜனங்கள்' அதாவது இறைவனின் மக்களென்று அழைத்தார். ஆலயங்களுக்குச் செல்வது முதல் சமத்துவமாக நடத்தப் பெறப் போராட்டம் நடத்தினார். நாட்டின் விடுதலை இயக்கத்தோடு இந்தப் போராட்டத்தையும் இணைத்து நடத்தியதால் நாடு விடுதலை பெற்றபொழுது மனத்தளவில் ஒரு புரட்சி நடைபெற்றிருந்தது. நமது நாடு குடியரசான பொழுது எல்லா மக்களுக்கும் சமஉரிமை கிடைத்தது. இன்றும் சில இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் சில உரிமைகளைப் பெறவேண்டியதிருந்தாலும் ஏற்பட்டிருக்கும் மாற்றம் புரட்சிகரமானது.

நாடு விடுதலை பெற்றபொழுது பெரியார் நடத்திய இயக்கத்தாலும் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்திய 'மேல் சாதியினர்' கட்டுப்படுத்தப்பட்டனர். மொத்தத்தில் சாதியம் வீழ்ந்துபடும் போன்ற போக்குத் தோன்றியது. ஆனால் தேர்தல்முறை, அரசியல் கட்சிகள் கொள்கையற்றுச் சாதி வாக்குக்களைப் பெற ஒவ்வொரு தொகுதியிலும் பெரும்பாலான சாதியைச் சேர்ந்தவர்களை வேட்பாளர்களாக நிறுத்திச் சாதி உணர்வை வளர்த்தது. சாதியினரைச் சேர்த்து அரசியல் கட்சி அமைத்து ஆக்கம் பெற்றது, ஒதுக்கீட்டின் பயனைப் பெறத் தேடித் தேடிச் சாதிச் சான்றிதழ் பெற்றது, பள்ளி முதல் ஒவ்வொரு இடத்திலும் சாதியைக் கேட்டது, குறித்தது எல்லாம் சேர்ந்து இன்று சாதிகளைப் பெரும் சக்திகளாக வளர்த்து விட்டன. இதனால் 'தன்னலம் பேணி இழிதொழில்' செய்யும் சாதித் தலைவர்கள் அரசியல் தலைவர்களாக, அமைச்சர்களாக வலம்வர முடிகின்றது.

இப்பொழுது 'மேல்சாதி', 'கீழ்சாதி' என்ற கொடுமையைவிட அரசியல் அதிகாரத்தைப் பெற மக்களைச் சாதி அடிப்படையில் ஒன்று திரட்டும் சமுதாய ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சி தொடர்கின்றது. மேற்போக்காக அமைதியாகக் காட்சியளிக்கும் சமுதாயத்தில் சாதிக்கலவரங்கள் எரிமலையாக வெடிக்கும் இடர் தோன்றியிருக்கின்றது. இதனை உணர்ந்து, அறிந்து மாற்றாவிட்டால் நமது சமுதாயம் பின்னோக்கி நகரும். நாட்டின் வளர்ச்சியின் பயன்கள் முழுமையாக நமக்குக் கிடைக்காமல் போகலாம்.

### 4. சமுதாயத்தை உருக்குலைக்கும் சமய வெறி

நம்மிடம் சாதிகளைப் போன்றே பல சமயங்களும், அவற்றின் உட்பிரிவுகளும் வளர்ந்து, மக்களைப் பகுத்தும், பிரித்தும், தொகுத்தும் ஆதிக்கம் செலுத்துகின்றன. சமுதாயத்தில் ஒழுக்க நெறியையும் ஒற்றுமையையும் வளர்க்கச் சமயங்களைத் தோற்றுவித்து அமைப்புக்களை உருவாக்கினர். ஒவ்வொரு சமயத்திலும் இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒரு பக்கம் அகம் சார்ந்த ஆன்மீகத் தத்துவம் ஆகும். அதில் அற-ஒழுக்க நெறிமுறைகள் கூறப் பெறுகின்றன. மறுபக்கம், புறம்சார்ந்த சடங்குகள், வழிபாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள் உருவாக்கப்பெற்றன.

நன்று நடுநிலையில் நின்று ஆய்ந்து பார்த்தால் எல்லாச் சமயங்களின் சாரமும் ஒன்றாக இருப்பதை அறியலாம். புறச் சடங்குகளில் வேறுபாடு இருக்கின்றது. தன்னலமிக்க சமயவாதிகள் வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தி மக்களிடம் மதவெறியைத் தூண்டி வளர்க்கின்றனர். இந்த நிலயை வள்ளல்பெருமான் இக்காலத் தொடக்கத்தில்,

"கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமும்அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளம்உறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்
காட்சிகளும் காட்சிதரும் கடவுளரும் எல்லாம்
பிள்ளைவிளை யாட்டெனநன் கறிவித்திங் கெனையே
பிள்ளைஎனக் கொண்டு பிள்ளை பெயரிட்ட பதியே

என்று கூறியது எண்ணிப்பார்க்கத் தக்கது.

சமயம் என்பது மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் ஊறிப் போனது. ஒவ்வொரு சமயமும் ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரையும், பின்பும் பின்பற்றவேண்டிய சமயச் சடங்குகளை உருவாக்கியிருக்கின்றது. இந்த மாய வலையிலிருந்து விடுபடுவது எளிதல்ல. சமயம் தனிமனித வாழ்வோடு வரையறுக்கப்பட்டு விட்டால் சிக்கல் இல்லை. ஆனால் சமய நம்பிக்கையைக் கூட்டுச் சமுதாய வாழ்க்கையிலும், பொது அரசியல் நடவடிக்கைகளிலும் கொண்டுவருகின்ற பொழுது சிக்கல் வருகின்றது.

இப்பொழுது சமுதாயத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் சமயத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயல்கின்றனர். இந்த முரண்பட்ட போக்கு சமுதாயத்தில் மோதல்களை உருவாக்குகின்றது. இந்தப்போக்கு நமது ஒட்டு மொத்த சமுதாய முன்னேற்றத்தைப் பாதிக்கும் என்பதை உணர்ந்து, ஒற்றுமைக்கு வழிகாண்பது அனைவரின் கடமை.

## 5. கல்வி நிலை

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி நிலையைக் காட்டும் அடையாளங் களில் ஒன்று கல்வி. ஆதலால்தான் அன்று முதல் இன்று வரை

முன்னேறுகின்ற சமுதாயங்கள் எல்லாம் கல்வியின் அருமையை உணர்ந்து, முயன்று வளர்ந்து வருகின்றன.

நமது நாட்டில் அன்று தொட்டு இன்று வரை அறிஞர் பெருமக்கள் கல்வியின் அருமையை, பெருமையை எடுத்துரைத்து வருகின்றனர். நாம் வாழ முதன் முதலில் வழிகாட்டிய திருவள்ளுவப் பெருமகனார்,

*"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை"*

என்று ஒவ்வொருவரும் தேடிப்பெற வேண்டியது கல்விச் செல்வம் மட்டும்தான் என்று தெளிவுபட உறுதியாகக் கூறுகின்றார்.

ஒரு சமுதாயத்திலுள்ள எல்லா மக்களும் கற்றவர்களாக இருக்க வேண்டுமென்பதுதான் இன்று வலியுறுத்தப்பெறுகின்ற குறிக்கோள். இதனைப் பாவேந்தர் பாரதிதாசன்,

*"என்னருந் தமிழ்நாட்டின் கண்*
*எல்லோரும் கல்விகற்றுப்*
*பன்னறுங் கலைஞானத்தால்*
*பராக்கிரமத்தால், அன்பால்*
*உன்னத இமயமலைபோல்*
*ஓங்கிடும் கீர்த்தி யெய்தி*
*இன்புற்றார் என்று மற்றோர்*
*இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?"*

என்று தற்காலத் தொடக்கத்தில் தனது விழைவாகக் கூறினார்.

ஆங்கிலேயர் வருகைக்கு முன்னால் நமது நாட்டில் பொதுப் பள்ளிகள் இல்லை. வளமான வாழ்க்கை உடையவர்களுக்கும் மேல் சாதி எனப்பட்டவர்களுக்கும்தான் கல்வி கற்க வாய்ப்புக்கள் கிடைத்தன. பெரும்பாலானவர்கள் கல்வியறிவற்றவர்களாக இருந்தனர். பெண்களுக்குக் கல்வி என்பது எண்ணிப்பார்க்க முடியாததாக இருந்தது.

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேய அரசு பள்ளிகளையும் கல்லூரிகளையும் ஆங்கிலேய முறையில் தொடங்கியது. அவை எல்லாம் இப்பொழுது நூற்றாண்டு விழாக்களை நடத்துகின்றன. நமது நாட்டுத் தலைவர்கள் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினர். அற மனங்கொண்ட செல்வர்கள் ஆங்காங்கு கல்வி நிறுவனங்களைத் தோற்றுவித்தனர்.

நாடு விடுதலை பெற்ற பிறகு நமது அரசு கல்வியை வளர்ப்பதில் தனிக்கவனம் செலுத்தியது. அரசும் தனியாரும் கல்வி நிறுவனங்களைத் தோற்றுவித்தனர். பெண் கல்விக்குச் சிறப்பிடம் வழங்கினர். எல்லா மக்களும் எழுத்தறிவைப் பெறாவிட்டாலும் கல்வி முன்னேற்றம் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

1951இல் நமது மொத்த மக்களில் 18.33 விழுக்காட்டினர்தான் கற்றவர்கள். ஆண்களில் 27.16 விழுக்காட்டினரும், பெண்களில் 8.86 விழுக்காட்டினரும் கற்றிருந்தனர். 2001இல் மொத்தத்தில் கற்றவர்களின் எண்ணிக்கை 73.47 விழுக்காடாகவும், ஆண்களில் 82.33 விழுக்காடாகவும், பெண்களில் 64.55 விழுக்காடாகவும் உயர்ந்திருந்ததைச் சுட்டிக் காட்டலாம்.

இக்காலத்தில் தொழிற்கல்வியில் தனிக்கவனம் செலுத்து கின்றனர். நமது நாட்டிலிருந்து தொழிற்கல்வி பெற்ற திறமையாளர்கள் வெளிநாடுகளில் வேலைபெற்றுச் செல்கின்றனர். அரசு சிறிது, சிறிதாக உயர்கல்விப் பொறுப்பைத் தனியாரிடம் அளித்து வருகின்றது. கல்வியை வாணிபமாக்கிக் கோடி கோடியாகப் பணத்தைப் பெருக்கி வருகின்றனர். பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு தொழிற்கல்வியைப் பெறுவது சமுதாய மாற்றத்தைக் காட்டுகின்றது. இன்றைய கல்வி வளர்ச்சிப்போக்கு சில சிக்கல்களை உருவாக்கியுள்ளது. அவற்றை நாமெல்லாம் சிந்தித்துத் தீர்வுகாணக் கீழ்க்கண்ட கேள்விகளாகக் கேட்கலாம்.

1. இன்றுள்ள கல்வி நல்ல சமுதாய நோக்குள்ள மனிதர்களை உருவாக்குகின்றதா, இல்லை மூளையர்களையும், தொழில் வல்லுநர் களையும், வெளிநாட்டுக் கூலிகளையும் உருவாக்குகின்றதா?

2. நமது கல்வி நிறுவனங்கள் கற்றவர்களிடம் வாழ்க்கை விழுமங்களை உருவாக்குகின்றனவா?

3. வாணிப மயமாகி வரும் கல்விச் சூழலில் ஏழை, எளிய மக்கள் உயர்கல்வியை, தொழில் கல்வியைப் பெற இயலுமா?

4. நமது கல்வியால் இன்றைய சமுதாயத்தில் காணப் பெறுகின்ற சீர்கேடுகளைப் போக்க முடியுமா?

5. தாய்மொழி மறந்த, துறந்த கல்வி மூலம் சமுதாய உணர்வை, நாட்டுப் பற்றை, தொண்டு மனத்தை வளர்க்க முடியுமா?

6. மக்கள் விரும்புகின்ற கல்வி கற்க வாய்ப்பிருக்கின்றதா?

இந்தக் கேள்விகளுக்கும், இவை போன்று தோன்றும் கேள்விகளுக்கும் விடை தேடினால், இன்றைய கல்வி நிலையும், நாம் உண்மையான கல்வியை வளர்க்க என்ன செய்ய வேண்டும் என்பதும் விளங்கும்; துலங்கும்.

## 6. வாழ்க்கை முறை

மற்றைய உயிரினங்களிலிருந்து மாறுபட்டது, வேறுபட்டது, உயர்ந்தது மனித வாழ்க்கை. அதன் சிறப்பு வாழ்கின்ற வாழ்க்கை முறையில் இருக்கின்றது. விலங்குகளும், பறவைகளும், தேனீ போன்ற பூச்சிகளும் அரிய ஆற்றல்களைப் பெற்றிருக்கின்றன. ஆனால் பன்னெடுங்காலமாக ஒரே மாதிரிதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் பகுத்தறிவுள்ள மனிதன் புதுப்புது எண்ணங்களோடும் வாழ்க்கையில் புதுமையோடும் வாழ முயல்கின்றான். ஆதலால் அவனது வாழ்க்கைமுறை மாறுகின்றது. மனித வாழ்க்கையின் வளர்ச்சியை மாற்றங்களலிருந்து அறியலாம்.

கடந்த ஐம்பதாண்டுகளில் தனிமனித வாழ்க்கையும் சமுதாய வாழ்க்கையும் உறவு முறைகளும் விரைந்து மாறிவருகின்றன. இதனைப் பலர் உணராமல் இருக்கலாம். ஆனால் எண்ணிப் பார்த்தால் அறியலாம்.

நாம் உண்ணும் உணவு, உடுத்தும் உடை, வாழும் வீடு, பழகுகின்ற மக்களின் எண்ணிக்கை, பழகும் முறை, பயன்படுத்தும்

பொருட்கள், வாகனங்கள் எல்லாம் வியக்கத்தக்க வகையில் மாறியுள்ளன. இதனை உணர்த்த எடுத்துக்காட்டாகப் பெண்கள் அணியும் ஆடைகளையும் நகைகளையும் கூறலாம். திருமணக் காலங்களில் விலை உயர்ந்த பட்டும், சுமக்க முடியாத நகைகளும் அணியும் பழக்கம் மறையாமல் இருக்கலாம். ஆனால் பொதுவாக இன்றையத் தலைமுறையினர் அணிகின்ற ஆடைகளும், நுகர்கின்ற பொருட்களும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. மக்களின் வருவாய் கூடிவருகின்றது. சேமிப்பைவிடச் செலவிடுவதில் ஆர்வம் மிகுதி.

வாழ்க்கை முறையை மாற்றுகின்ற பணியை நாம் பெறுகின்ற கல்வி, நாம் கொள்கின்ற மனித உறவுகள் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள், உற்பத்திப் பெருக்கம், வாணிப வளர்ச்சி, தொலைத் தொடர்புகள், போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள புரட்சி போன்றவை செய்கின்றன. எடுத்துக்காட்டாகத் தொலைபேசித் (Telephone) தொடர்பு எல்லா மக்களுக்கும், எல்லா இடங்களுக்கும் கிடைக்காமல் இருந்தது. கைபேசி (Cell Phone) வந்த பிறகு குறுகிய காலத்தில் சூழலை மாற்றிவிட்டது. தொலைக்காட்சி (Television) மக்களிடம் எந்த அளவிற்கு ஆதிக்கம் செலுத்துகின்ற தென்பதை விளக்கத் தேவையில்லை. மிகவும் ஆடம்பரமான, நுகர்வுமயமான (Consumerism) வாழ்க்கை முறையைப் பெரும்பாலான மக்கள் தெரிந்தோ, தெரியாமலோ ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த வாழ்க்கை முறையில் மனிதனின் தனித்தன்மைகளை, மேன்மைகளை வளர்க்கக் கூடியனவும் இருக்கின்றன; அழிக்கக் கூடியனவும் உள்ளன. சில மாற்றங்கள் பற்றி உடனே நம்மால் தீர்மானமாக எதுவும் கூறமுடியாமல் இருக்கலாம். ஆனால் மனித வாழ்க்கைமுறை மாற்றத்தைத் தடுத்துநிறுத்த முடியாது.

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கை முறை மாற்றத்தைத் தெரிந்து, தெளிந்து, தேர்ந்து பின்பற்றவேண்டும். நாகரிகம் என்ற பெயரால் நமது பண்பாட்டை, நலத்தைச் சீர்குலைக்கும் எதனையும் செய்யக் கூடாது என்று வாழும் முறைமையை உணர்ந்து வாழ்தல் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நமது கடமையாகின்றது.

## 7. கலை, இலக்கியம்

மனிதனின் சிறப்புத் தன்மைகளில் ஒன்று அவனிடமிருக்கின்ற படைப்பாற்றல். உள்ளத்தில் உருவாகும் எண்ணங்களுக்குக் கற்பனை வண்ணம் சேர்த்துத்தான் பெற்ற இன்பம் வையகம் பெறவேண்டு மென்ற விழைவில் தோன்றுபவைதான் கலையும், இலக்கியமும்.

ஒரு சமுதாயத்தின் மேம்பாட்டை அது படைத்துப் போற்றிக் காக்கின்ற கலை, இலக்கியப் படைப்புக்களிலிருந்து அறியலாம்.

இற்றைக் காலத்தில் அச்சுத் தொழில் வளர்ச்சி புத்தகம், இதழ்கள் வெளியீட்டில் மாற்றங்களைக் கொண்டுவந்தது. அதன் தாக்கம் இலக்கிய வளர்ச்சியில் தென்பட்டது. கதை, கட்டுரை, கவிதை, புதினம் என இலக்கியம் வடிவத்தாலும் அளவாலும் வளர்ந்தது. கணிப்பொறி அச்சுக்கலையை அரிய கலையாக்கி யிருக்கின்றது.

திரைப்படம், தொலைக்காட்சி மக்களைக் கவர்ந்து ஈர்க்கும் ஊடகங்களாக மாறியுள்ளன. இசை, நடிப்பு, நாட்டியம் எனக் கலை வளர்கின்றது. மக்களின் பொழுதுபோக்குச் சாதனங்களின் செல்வாக்கால் நடிகர்கள் நாடாள்பவர்களாக மாறமுடிகின்றது. இருந்தாலும் இற்றைக்காலக் கலை, இலக்கியத்தரம் கேள்விக் குரியதாக மாறிவருகின்றது.

## 8. அரசியல் சார் சமுதாயம்

அடித்தளம் சமுதாயமாகவும் மேற்கூரை அரசியலாகவும் அமைவதுதான் இயல்பு. மக்களுக்காக, மக்களால், மக்களுடைய தாக நடத்தப்படுவதே மக்களாட்சி என்பது பொதுவான கருத்து. இன்று நிலை தலைகீழாக மாறிவிட்டது.

"அரசுக்காகச் சமுதாயம்" என்ற கருத்தே மேலோங்கி வருகின்றது. சமுதாயம் தற்சார்புள்ளதாக இல்லை. மக்கள் தண்ணீர், மருத்துவம், துப்புரவு போன்ற அடிப்படைத் தேவைகளுக்குக்கூட அரசை நம்பியிருக்கின்றனர். அரசோ ஊழல் நிறைந்ததாக இருக்கின்றது. ஒரு நச்சுச் சுழல் (Vicious Cycle) நிலை அரசுக்கும்

மக்களுக்கும் இடையிலிருக்கின்றது. இந்த முரண்பாட்டு நிலையை மாற்றாமல் சமுதாய நிலை மேம்படாது.

## ஒளிதரும் சுடர்கள்

நமது சமுதாயத்தில் எதிர்கால வளர்ச்சிக்குத் துணைநிற்கக் கூடிய, நம்பிக்கை தரும் சில போக்குகள் தென்படுகின்றன. அவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

மொத்தத்தில் மக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. சமுதாய அளவில் நல்ல கல்வி, மருத்துவம் போன்றவற்றைத் தேடிப்பெறவேண்டும் என்ற வேட்கை வளர்ந்து வருகின்றது. உரிமைகளுக்காகப் போராடுபவர்களின் எண்ணிக்கை கூடிவருகின்றது.

பல நிலைகளில், பல துறைகளில் மக்கள் அமைப்புக்கள் உருவாகியுள்ளன. ஒரு பக்கம் நடிகர்களின் பெயரால் அமைந்தவை அரசியல் அமைப்புக்களாக மாறிவருகின்றன. மறுபக்கம் மகளிர் சுய உதவிக்குழுக்கள், பெண்களுக்கு இடஒதுக்கீடு போன்றவை மக்கள் சக்தியைத் தட்டி எழுப்பியுள்ளன.

கல்வி வளர்ச்சி போற்றத்தக்க முறையில் இளைஞர்களை ஒருங்கிணைக்கின்றது. தன்னலம் பேணிக் கல்வியை, தொழிலைப் பயன்படுத்தாமல் நாட்டு நலத்தை முன்வைத்துச் செயல்பட்டால் நாடு விரைந்து வளரும். இளைஞர்களிடம் துணிச்சல் இருக்கின்றது. வெளிநாடுகளுக்கு வேலை தேடிச்செல்லத் தயங்குவதில்லை. இந்தத் துணிச்சலோடு நாட்டுப்பணியில் ஈடுபட்டால் மாற்றம் ஏற்படும்.

பொருளாதாரத் துறையில் நாம் பெறுகின்ற முன்னேற்றத்தின் பயன்கள் ஏழை எளியவர்களுக்குக் கிடைக்கவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் நலமாகவும் வளமாகவும் வாழ வாய்ப்புக் கிடைக்கும்.

நாட்டு நலனில் அக்கறை கொண்ட சமுதாயத் தலைவர்கள் அரசியலில் பொறுப்பேற்க வேண்டும். நல்லவர்கள் வல்லவர்களாக

மாறவேண்டும். ஆங்காங்கு ஒளித்திட்டுக்களாக இருப்பவை எழுச்சி பெறவேண்டும்.

## நிழல் படிந்தவை

உடன் பிறந்தே கொல்லும் நோய் போன்று, நமது சமுதாயக் கட்டமைப்பைச் சீர்குலைக்கின்ற, முன்னேற்றத்தை முட்டுக்கட்டை போட்டுத் தடுக்கின்ற சில சக்திகள் செயல்படுகின்றன. அவற்றைப் பற்றிக் கவனமாக இருந்து அகற்றவேண்டியது எல்லா மக்களின் கடமையாகும்.

வன்முறையாளர்கள், கொள்கையற்றவர்கள் சமுதாயத்தில் ஊடுருவி இருக்கின்றனர். இவர்கள் மக்கள் மனத்தில் அச்சத்தையும் ஆசையையும் தூண்டி நிலைதடுமாறச் செய்கின்றனர்.

மக்கள் வாழ்வில் விழுமங்களை மறந்து வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்படாமல், 'எப்படியும் வாழலாம்' என்ற போக்கினை வளர்க்கச் சிலர் முயல்கின்றனர். அரசியல் துறையில் கொள்கை யற்றவர்கள் பெறுகின்ற வெற்றி சமுதாயத்தையும் பாதிக்கின்றது. மக்கள் உறுதியோடிருந்தால் அரசியல் சீர்கேடுகள் சமுதாயத்தைப் பாதிக்காமல் கட்டிக்காக்க முடியும்.

சாதி-சமய வெறியிலிருந்து, பிடியிலிருந்து மக்களை மீட்பதும், சரியான முறையான அன்புநெறியில் வாழச்செய்வதும், கல்வியால், நல்ல தலைவர்களால் இயலும். சிறந்த பண்பாளர்கள் இணைந்து செயல்பட்டால் சமுதாயத்தைப் பின்னுக்கு இழுக்கும் சக்திகள் வலுவிழக்கும்.

## ஒன்று படுவோம்

நமது சமுதாயம் பழம்பெரும் சமுதாயம்; வலுவான அடிப்படையில் உருவாக்கப்பெற்ற சமுதாயம். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்," என்ற உயரிய நோக்கை முன்வைத்து வளர்ந்து வருகின்ற சமுதாயம்.

தற்காலச் சமுதாயத்தில் பலநிலைகளில் மக்கள் வாழ்கின்றனர். இன்றைய சமுதாயச் செயல்பாடுகளில் நிறைகளும், குறைகளும்

உள்ளன. நாம் நமது சமுதாயத்தைப் பற்றிக் கூட்டாக எண்ணிப் பார்த்து மதிப்பீடுசெய்து நிறைகளைப் பெருக்கவேண்டும்; குறைகளைக் குறைக்கவேண்டும்; போக்கவேண்டும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்"

என்ற மகாகவி பாரதியின் கருத்துத்தான் இன்றும் என்றும் நமது சமுதாயத்திற்கு வழிகாட்டக்கூடியது.

ஒன்று படுவோம். எல்லோரும் நன்றாக வாழ உழைப்போம். புதியதொரு சமுதாயத்தைப் படைப்போம்.